AstroVed

செப்டம்பர், 2022

# சத்வித்யா

மாலை: 3 மலர்: 35

பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி, ஏ-பிளாக், 4வது தளம்,
2வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



தீராத வினைகளைத் தீர்த்து வைக்கும்
**தில்லைக் காளி!!**

இன்னல்கள் தீர்க்கும்
**இஞ்சிமேடு திருத்தலம்.....!!!**

மகிழ்ச்சியான வாழ்வு அருளும்
**மணற்குள விநாயகர் கோயில்**

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



வசதி படைத்தவர்கள் தனியார் பள்ளிகளில் உயரிய கல்வியையும் வறுமையில் உழல்வோர் அரசு பள்ளிகளில் சாதாரண கல்வியையும் பயில்வதாய் சொல்கிறார்கள்.

ஆனால், எந்த பள்ளியில் எத்தகைய கல்வியைப்பெற்றாலும் அது நம் பேரறிவை வளர்ப்பதாய் இருத்தல் வேண்டும். இந்த பேரறிவை புகட்டுகின்ற "திருமந்திரம்" போன்ற நூலினை கற்றுக் கொடுக்க வேண்டும். திருமந்திரம் என்பது பேரறிவின் திறவுகோல் என்றாகுமே தவிர, அது ஒரு சமயம் சார்ந்த நூல் என ஒதுக்கி விடக் கூடாது! எச்சமயம் சார்ந்தோருக்கும் பேரறிவைத் தருகின்ற அரிய கருத்துக்கள் அடங்கிய
திருமந்திரப் பாடல்கள் அனைத்து கல்விச்சாலைகளிலும் எந்தவித பாரபட்சமுமின்றி கற்றுத்தந்தாலே பேரறிவு வளரும்.

Dr. Baskaran Pillai




அன்பு சத்வித்யா வாசகர்களே! இந்த இணையதள மாத இதழ் விரைவில் புத்தக வடிவில் வெளிவரவிருப்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆடி முடிந்து, ஆவணி பிறந்து புரட்டாசியுடன் கைகோர்க்கும் இனிமையான காலம்! போதுமான மழை இப்போதே கொட்டித் தீர்த்து விட்டது. இனி வரவிருப்பது மழைக்காலம்! வீடுகளில் வெள்ளம் புகுந்தது; வெள்ளத்தால் சேதம்; பயிர்கள் நாசம்; கால்நடைகள் சேதம் என வழக்கமான செய்திகள் தலைதூக்காமல் இருந்தால் நிம்மதி தான்!

விநாயகர் சதுர்த்தி முடிந்து, இனி ஆண்டின் ஆன்மீக பண்டிகைகள் ஒவ்வொன்றாக தொடங்கவிருக்கிறது. நமது வாசகர்கள் மட்டுமின்றி மக்கள் அனைவரும் மகிழ்வான மனநிலையோடு பண்டிகைகளைக் கொண்டாடும் வண்ணம் இயற்கை அருள்புரியட்டும்!
அனைத்து இல்லங்களிலும், அனைவரின் உள்ளங்களிலும் நிம்மதியும் அமைதியும் ஓங்கி வளர மக்களிடையே சகோதரத்துவமும் ஒற்றுமையும் விளங்க, ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்

அன்புடன்
Astroved.com



# செப்டம்பர் மாத காலண்டர் – 2022

| செப்டம்பர் | ஸ்ரீ சுபகிருது வருடம் ஆவணி - புரட்டாசி | SEPTEMBER 2022 | | | |
|---|---|---|---|---|---|
| SUN ஞாயிறு | அரசினர் விடுமுறை: 30.வங்கி அரை வருடகணக்கு முடிவு | நவமி 4 19 | 11 26 | அஷ்டமி 18 புரட்டாசி 01 | அமாவாசை 25 08 |
| MON திங்கள் | இந்துக்கள் பண்டிகை: 8. ஓணம் பண்டிகை 25. மஹாளய அமாவாசை 26. நவராத்திரி ஆரம்பம் | தசமி 5 20 | 12 27 | நவமி 19 02 | 26 09 |
| TUE செவ்வாய் | கிறிஸ்தவ பண்டிகை: 8. தேவமாதா பிறந்த நாள் 14. தேறாவிலுட்டே | ஏகாதசி 6 21 | சதுர்த்தி 13 28 | தசமி 20 03 | 27 10 |
| WED புதன் | [illegible] | 7 22 | 14 29 | ஏகாதசி 21 04 | 28 11 |
| THU வியாழன் | 1 ஆவணி 16 | பிரதோஷம் 8 23 | கார்த்திகை 15 30 | 22 05 | சதுர்த்தி 29 12 |
| FRI வெள்ளி | ஷஷ்டி 2 17 | பௌர்ணமி 9 24 | ஷஷ்டி 16 31 | பிரதோஷம் 23 06 | வங்கி விடுமுறை 30 13 |
| SAT சனி | அஷ்டமி 3 18 | பௌர்ணமி 10 25 | 17 32 | சிவராத்திரி 24 07 | வளர்பிறை சுபமுகூர்த்த நாட்கள் 1, 5, 7, 8, 9 தேய்பிறை சுபமுகூர்த்த நாட்கள் 12 கரிநாட்கள் 13 கரிநாள் அன்று சுபகாரியங்கள் தவிர்க்கவும் |



திருக்கோயில் திருஉலா

# மகிழ்ச்சியான வாழ்வு அருளும் மணற்குள விநாயகர் கோயில்

புதுவை மாநிலம் ஆன்மிக ஞான பூமி அரவிந்தர் – மகாகவி - பாவேந்தர் போன்றோர் அறம் வளர்த்த புனித மண்! புதுவையின் பல்வேறு பகுதிகளில் ஸ்ரீ விநாயகர் ஆலயங்கள் இருந்தாலும் புதுவையின் மையப்பகுதியில் ஓர் அற்புத விநாயகர் கோயில் ஸ்ரீ மணற்குள விநாயகர் திருக்கோயில் மிகவும் சக்தி வாய்ந்த ஞான ஆலயமாக திகழ்கிறது.

## பெயர்க்காரணம்

புதுவை கடற்கரை ஓரம் மணற் பாங்கான பகுதியில் ஓர் அழகான பொய்கை இருந்தது. தண்ணிழல் தரும் மரத்தடியில் ஸ்ரீ விநாயகரை பிரதிஷ்டை செய்து வழிபடலாயினர். காலப் போக்கில்

ஸ்ரீ மணற்குள விநாயகர் திருக்கோயில் என்று பெயர் பெற்றது.

புதுவையின் முக்கிய அடையாளமாகத் திகழ்கிறது. கி.பி-15ஆம் நூற்றாண்டுக்கு முன்பே அமைந்திருக்கிறது.கோயில் அருகே பிரஞ்சுக்காரர்கள் கோட்டை கட்டினார்கள். இடையூறாக இருந்ததால் பக்தர்களுக்கு வழிபாடு செய்ய தடை விதித்ததால் மக்கள் போராட்டத்தால் தடை நீக்கப்பட்டது. வெள்ளையர்கள் காழ்ப்புணர்வுடன் இக்கோயிலில் உள்ள விநாயகரை கடலில் போட மறுநாள் விநாயகர் வழிபாடு சிறப்பாக நடை பெறுவது கண்டு வியந்தனர். இது தொடர்ந்தது. அவர்களுக்கும் அருள் தந்தவர் ஆனைமுகன்.

நீர்நிலை பகுதியில் கிணற்றின் மீது ஸ்ரீ விநாயகரின் பீடம் அமைந்துள்ளது. பீடத்தின் இடப்பக்கம் மூலவருக்கு அருகில் அரைஅடி விட்டத்தில் ஆழமான குழி உள்ளது. அதில் எப்போதும் வற்றாது நன்னீர் சுரந்து கொண்டே இருப்பதை காணலாம். கடற்கரை அருகே சுவையாக உள்ள இந்த புனிதநீர் கோயில் தீர்த்தமாக பயன்படுத்தப்படுகிறது.

ஸ்ரீ விநாயகர் கருவறை கோபுரம் தங்கத்தால் வேயப்பட்டு உள்ளது. தங்க கோபுரம் பேரழகை காண கண்கோடி வேண்டும்.

கோயிலின் கொடிமரம் 18அடி உயரம் கொண்டது. தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்டு மிக மிக அழகாக அமைக்கப்பட்டு உள்ளது.

அதிக பொருட்செலவில் தங்கத்தேர் உருவாக்கப்பட்டு ஸ்ரீ மணற்குள விநாயகர் எழுந்தருளுகின்ற நிகழ்வு மிகவும் அற்புதமாகும்.

இக்கோயிலில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுவது உண்டு. உள்பிரகார சுவர்களில் ஸ்ரீ விநாயகர் திருஉருவ ஓவியங்கள் கண்ணை கவர்கின்றன.

மகாகவி பாரதியார் புதுவையில் பத்தாண்டுகள் வசித்தபோது இத்தல விநாயகரை வழிபட்டு உள்ளார். விநாயகர் நான்மணி மாலை என்ற தலைப்பில் நாற்பது பாடல்களை பாடியுள்ளார்.
ஆனந்தரங்கம் பிள்ளை இத்தல விநாயகரை தனது நாட்குறிப்பில் - மணற் குளத்தங்கரை பிள்ளையார் என்று குறிப்பிட்டுள்ளார். காலப்போக்கில் மணற்குள விநாயகர் என்று ஆனது.

போர்ச்சுகீசியர்கள் – டேனீஷ்காரர்கள் - ஆங்கிலேயர்கள் - பிரஞ்சுக்காரர்கள் ஆட்சிமுறைகளை கண்டவர் கணபதி!
பொன்னால் உனக்கு ஒரு கோயில் புனைவேன் என்று பாடிய பாத்தேர் சாரதியாம் பாரதியின் கனவு நனவாகிவிட்டது.

புதுவை பேருந்து நிலையத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவிலும், புகை வண்டி நிலையத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலும் இத்தலம் அமைந்து அருள்பாலிக்கிறது.
வாழ்க புதுவை மணக்குளத்து வள்ளல் பத மணிமலரே என்று மகாகவி பாரதியார் போற்றி வழிபட்டதைப் போல் நாமும் வழிபடுவோம்.



சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்




மஹாளயம் என்றால் அது சுபகாரியங்களின் இருப்பிடம் என்ற பொருள் தரும்! மஹாளய காலம் என்று வழங்கப்படும் 16 தினங்களில் அவரவர் குடும்ப பித்ருக்கள் என்ற முன்னோர்கள் பூமிக்கு வருகை புரிந்து சந்ததிகளுக்கு நன்மை அருள்வதாக புராணங்கள் கூறுகின்றன. இந்த நாட்களில் அவர்களுக்காக மிக சிரத்தை கொண்டு செய்யப்படும் கர்ம கார்யமான சிரார்த்தம், தர்ப்பணம் ஆகியவை நம் முன்னோர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய குடும்பத்திற்கும் மிக உன்னதத்தை அளிக்கும்!
மஹாளய பட்ச காலத்தில் மாயா வசிஷ்ட என்ற சமஷ்டி சக்தி இரண்டு தகப்பனுடைய பிரதிநிதியான கன்னியுடன் சூரியன் இணைவான். இந்த காலத்தில் தான் அனைவரும் தங்கள் பெற்றுள்ள சக்திகளை சூரியனிடம் வழங்கி விடுவார்கள். இதனால் சூரியன் பெறும் ஆனந்தம் எல்லையற்றது என கூறப்பட்டுள்ளது.

அச்சமயத்தில் செய்யப்படும் சிரார்த்தம் பித்ருக்களை மனமகிழ வைக்கிறது. இந்தப் புண்ணிய காலத்தில் பித்ருக்கள் யமதர்மனிடமிருந்து அனுமதி பெற்றே அவரவர் சந்ததிகள் வாழும் இல்லங்களுக்கு வருகை தருகிறார்கள்.

பல கோத்திரங்கள் இருந்தாலும் அவைகளில் முக்கியத்துவம் பெறுவது பத்து கோத்திரங்கள்; குறிப்பாக பரத்வாஜ, கௌதம, வசிஷ்ட, அத்ரி, கஸ்யப, அகஸ்திய போன்ற ரிஷிமார்களின் திருநாமங்களுடன் சம்பந்தப்பட்டவை இந்த கோத்திரங்கள்.

கோத்திரத்திற்கு வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுக்கும் பழமொழி இது-

“கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு!
பாத்திரமறிந்து பிட்சையிடு”

மஹாளய காலங்களில் இல்லங்களுக்கு விஜயம் செய்யும் நம் பித்ருக்கள் தீபாவளி அமாவாசை வரை, பூலோகத்திலேயே இருந்து வருவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.
காலம்ருதம் என்ற ஜோதிட கிரந்தத்தில் அருளப்பட்டபடி ஒவ்வொரு திதியிலும், மஹாளய காலங்களில் செய்யப்படும் கர்மகாரியங்கள் வெவ்வேறு பலன்களைத்தர வல்லது.

பிரதமையில் செய்யப்படும் காரியம் தன லாபத்தையும், த்விதியானால் நல்லதொரு சந்ததியையும், த்ரிதியானால் பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ நல்ல இடத்து சம்பந்தத்தையும், சதுர்த்தியானால் முன்பு பகை கொண்டவர் மாறி நல்லதொரு நண்பராகவும், பஞ்சமியானால் சிறந்த சம்பந்தத்தையும், சஷ்டியானால் நற்புகழையும், ஸப்தமியானால் இறப்பிற்குப் பின் தேவதை அந்தஸ்து கிட்டவும், அஷ்டமியானால் தீய சிந்தனைகள் அகன்று நல்ல எண்ணம் பெறவும், நவமியானால் மனைவி என்றும் நல்லவளாகவே இருக்கவும், தசமியானால் நினைத்த பொருட்களை அடையவும், ஏகாதசியானால் அனைத்துக் கலைகளிலும் சிறக்கவும், த்வாதசியானால் அளப்பற்ற தங்கம் பெறவும், சதுர்தசியானால் குடும்பத்தில் யாரேனும் துர்மரணம் அடைந்திருந்தால் அவர்களைக் கரைசேர்த்து அந்த பித்ருக்களை இன்பமடையச் செய்யவும் ஆன பல நற்பலன்கள் கர்மகாரியம் செய்பவர்களுக்கு கிடைத்துவிடும்.

குறிப்பாக, ஒரு குடும்பத்தில் சந்நியாசம் பெற்று முக்தி பெற்றோருக்குக் கூட த்வாதசியில் செய்யப்படும் கர்மகாரியம் உசிதமானது.

நிகழும் சுபகிருது ஆண்டில் ஆவணி 26 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை தொடங்கும் மஹாளய பட்சம் ( 11-09-22 ), புரட்டாசி 8 ஆம் தின ஞாயிற்றுக் கிழமை ( 25-09-22 ) முடிவடையும்.

புனித நீராடி, மஹாளய பட்ச புண்ணிய காலங்களில் உரிய கர்மானுஷ்டங்களை செய்து, அனைத்து நற்பலன்களையும் அடைவோம்!



**பத்மா முத்துசாமி**



# மந்திர மகிமை

# பேரின்பம் கிடைத்திட...



ரா. பன்னீர்செல்வம்

பேரின்பம் என்பது என்ன? இறைவனின் திருவருள் வாய்க்கப்பெறுவதே பேரின்பம் எனப்படும். இறையருள் கிடைக்க என்ன செய்ய வேண்டும்? ஒழுக்கம், உண்மை, நேர்மை, மனிதநேயம், உயிர்களை மதித்தல் ஆகிய நற்குணங்களைப் பெற்று வாழ்கின்ற போது இறையருளானது தானாகவே வந்து சேரும்! அந்த இறையருளைப் பெறுதலே பேரின்பம். அவ்வின்பத்தை அடைய சௌந்தர்ய லஹரியின் 99 ஆவது பாடல் வழிவகை செய்கிறது. பேரின்பத்தைப் பெற்றுத்தருகின்ற அந்தப் பாடலைக் காண்போம்.

### மந்திரப் பாடல்:

"ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதி - ஹரி ஸபத்நோ விஹரதே
ரதே: பாதிவ்ரத்யம் சிதிலயதி ரம்யேண வபுஷா
சிரம் ஜீவந்நேவ க்ஷபித பசுபாச - வ்யதிகர:
பராநந்தாவிக்யம் ரஸயதி ரஸம் த்வத் - பஜநவான்"

### இப்பாடலின் பொருள்:

அன்னையே! சதாசர்வகாலமும் உன்னையே நினைந்து பூஜித்து வருபவன், அந்த மும்மூர்த்திகளும் பொறாமைப்படும் அளவிற்கு பண்பு, பராக்கிரமம் உள்ளவனாக இன்பமுடன் வாழ்வான். ரதிதேவியின் மனதையே தடுமாறச்செய்யும் மன்மதன் போல வனப்புடன் திகழ்வான். அழிவற்றதும்; நிலையானதுமான முக்தியையும், நிலையே இல்லாத அழிகின்ற இன்பங்களையும் அனுபவிப்பான் என்பது உறுதி.

### மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கத்தகட்டில் வரைந்துவைத்து பூஜைக்குப் பயன்படுத்த வேண்டும்.

தினமும் 1000 தடவை என 40 நாட்கள் மந்திரம் ஜபித்து கிழக்கு முகமாக அமர்ந்து பூஜை செய்ய வேண்டும். அப்படிப் பூஜை செய்யும் போது குங்குமத்தைக் கொண்டு லலிதா சஹஸ்ரநாம அர்ச்சனை செய்யவும்.

தேன், பழம், நாட்டு சர்க்கரை, சாதம், ஆகியவற்றைக் கொண்டு நைவேத்யம் செய்ய வேண்டும்.

இதனைச் சரியான முறையில் செய்துவந்தால் சிவனுடைய அருள் என்கிற பேரின்பத்தோடு; தைரியம், ஊக்கம், உற்சாகம் ஆகியவை கிடைக்கும்.

# குறளும் பொருளும்

அந்த அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக ராமநாதன் சேர்ந்து இரண்டு மாதங்கள் ஆகியிருந்தது. எல்லோரிடமும் நல்ல பெயர் எடுத்திருந்தான்! அலுவலர்கள் சொல்லும் வேலையை சரியாக செய்வதால் எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள். ஆனால் ஹெட்கிளார்க் தங்கப்பன் மட்டும் ராமநாதனை "டேய், ஒன்பதாவது" என்றுதான் அழைப்பார். எப்போதும் இவனிடம் தம் அதிகாரத் தோரணையை காட்டிக்கொண்டே இருப்பார்!.

ராமனாதன், தந்தையில்லாமல் தாயின் அரவணைப்பிலே வளர்ந்தவன். படிப்பும் அவ்வளவாக ஏறவில்லை. ஒன்பதாவதோடு நிறுத்திக் கொண்டான். இவனது அம்மா வீட்டு வேலைகள் செய்து இவனை காப்பாற்றி வந்தார். திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டு மோசமாக இருந்ததால் ஒருவேளை சோற்றுக்கே கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அம்மாவின் நிழலே சொர்க்கம் என கைக்கு அடங்கிய பிள்ளையாய் எந்த சிரமமும் தெரியாமல் தாயால் வளர்க்கப்பட்டான். இப்போது வேலைக்குப்போய் சம்பாதித்தே ஆகவேண்டிய கட்டாயம்! இருபது வயதில் எந்த அனுபவமும் இல்லாமல் எங்கே போவான்? என்னவேலை செய்வான்?

இந்த நிலையில் தான், பக்கத்து வீட்டில் இருந்த ரிட்டையர்டு தாசில்தார் ராமனாதனை இந்த அலுவலகத்தில் சேர்த்து விட்டார். ராமனாதனும் நல்லபடி வேலைபார்த்தான். தற்காலிக வேலைதான். எப்படியோ பசியில்லாமல் தாயை கவனித்துக் கொண்டான்.

தீபாவளிநெருங்கும் சமயம். கணிசமான ஒரு தொகை போனசாய் கிடைக்கும். எல்லோரையும் போல் தீபாவளியை சிறப்பாக கொண்டாடலாம் என்று நினைத்தான்.

ஒருநாள்... தங்கப்பன் ராமநாதனை அழைத்தார்!அவனிடம், "டேய்... ஒன்பதாவது...நம்ம ஆபிஸ் டெஸ்பாட்ச் கிளார்க்குகிட்ட சிவப்பு கலர் ஃபைல் ஏன்னு இருக்குது! இன்னைக்கு மூனு மணிக்குள்ள அத யாருக்குந் தெரியாம எங்கிட்ட எடுத்துகிட்டு வந்து கொடுத்துரு! சரியா நீ இத செய்யனும்...என்ன?..." மிரட்டும் தொனியில் பேசினார்.

ஒன்றும் புரியாத ராமனாதன், "எதுக்கு அந்த ஃபைல் யாருக்குந் தெரியாம நான் எடுக்கனும்; அவர்கிட்ட கேட்டே எடுத்துட்டு வரேனே" ,வெள்ளந்தியாய் சொன்னான்.

"அது எனக்குத் தெரியாதா?...அந்த பாபுவ சிக்கவச்சி, அவன வேலையவிட்டு துரத்த அந்த ஃபைல் எங்கிட்ட வந்தே ஆகனும். இத நீ தான் செய்யனும்" கிட்டத்தட்ட மிரட்டி, கட்டளையிட்டார்!.

பதறினான் ராமனாதன்! "பாபு சார வேலையவிட்டு துரத்த, நான் உதவி பண்ணனுமா? சார், என்னைய மன்னிச்சிடுங்க! ஒருத்தர் பாதிக்கப்படறதுக்கு நான் காரணமா இருக்கவே மாட்டேன்! என்னால முடியாது!".

"என்னடா... எங்கிட்டயே திமிரா பேசுற?!

"சார்...ஆபிஸ்வேல மட்டுமல்ல...உங்க பர்சனல் வேல இருந்தாக்கூட சொல்லுங்க... தட்டாம செய்யறேன்! ஆனா, இந்த வேலைய செய்யவே மாட்டேன்! "உறுதியாக சொன்னான்.

"டேய்...இத மட்டும் நீ செய்யலனா...இந்த மாசத்தோட நீ வேணாம்னு நோட் போட்டு, உன்வேலைய காலி பண்ணிடுவேன்...அப்புறம்...சுகமில்லாம இருக்கற உன் தாய, உன்னால பார்த்துக்க முடியாது. நீயே நடுரோட்ல பிச்சை எடுக்கணும்! நிச்சயமா நான்



அப்படி செஞ்சிடுவேன். என்ன... ∴பைல லன்ச் டைம்ல எடுத்திட்டு வந்துடு". பல்லைக்கடித்து, கோபத்துடன் சொன்னார்!

எதையோ யோசிப்பது போல் நின்ற ராமனாதன், "கண்டிப்பா என்னால செய்ய முடியாதுங்க", என்றான்.

"அப்படின்னா... இன்னைக்கு தேதி 26. இன்னும் நாலு நாள்தான். உன் வேல காலி! உனக்கு எவனும் வேல தரமாட்டான். வீட்டுக்குப் போக தயாராக இரு!" என நடந்தார்.

அவர் பின்னாலேயே சென்ற ராமநாதன், அவரை நிறுத்தி, "சார்...என் வேல போயி, நானும் என் அம்மாவும் கஷ்டப்பட்டாலும் பரவாயில்ல; நீங்க என்மேல ஏதாவது பழியப்போட்டு என்னைய வெளிய அனுப்பறதுக்குள்ள..நானே...இப்பவே... வேலையவிட்டு போயிடறேன்"...என்றான்.

அவனையே பார்த்தபடி கடுப்புடன் நின்றார் தங்கப்பன்.

ஏழாவது படிக்கும்போதே தான் கற்ற திருக்குறள் இவனுக்கு நினைவு வந்தது.

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை".

ஒரு மனிதன் அனுபவிக்கும் கொடுமையிலேயே பெரிய கொடுமை.....பெற்ற தாய் பசியோடு இருப்பதைக் காண்பது! அப்படிப்பட்ட நிலையிலும் சான்றோர்களால் வெறுக்கப்படுகின்ற, நேர்மையற்ற செயல்களை செய்யக்கூடாது! அப்படி செய்யாதிருத்தலே மனிதப் பிறவியின் மாண்பு-இத் திருக்குறளை அனைவரும் பின்பற்றுதலே ஆனந்தம்!.

**தமிழ் வசந்தன்**

# கதம்ப மாலை

## மரப்பட்டை உணவுப்பொருள்



ஒரு வீட்டிலோ, ஹோட்டலிலோ, சாலை ஓரக்கடைகளிலோ பிரியாணி உணவுப்பொருளை தயார் செய்கையில், அதன் மணம் தூள் பரப்பும்! இதற்கு முக்கிய ஹீரோ (டுநுபுநுனே!) வாக இருப்பது ஒரு மரத்தின் பட்டைதான்! அந்த மரத்தின் பெயர் லவங்கம் ஆகும்.
ரோமானியர்களுக்கு இது ஒரு புனிதப்பொருள். ஏனென்றால் பிரபல நீரோ மன்னன் தனது மனைவியைக் கொலை செய்து லவங்க மரப்பட்டைகள் கொண்டு எரித்து விட்டானாம்! எகிப்தியர்கள் கூட லவங்கப் பட்டையை இறந்தவர்கள் உடலை பக்குவப் படுத்தவும், உணவு மணக்கவும் இதனைப் பயன்படுத்தி உள்ளனர்.
இலங்கையிலும், கேரள மாநில அஞ்சனூர் கண்டி என்ற ஊரிலும் அதிகம் விளைவிக்கப்படும். லவங்க மரம், அதன் பட்டைகள் மூலம், மது, மருந்து வகைகள், இனிப்புகள், சோப்பு, பற்பசை, கழிவறை திரவப்பொருட்களில் அதிகம் சேர்க்கப்பட்டு பெரும்பாலான மக்களை அடைந்து பயன் தருகிறது.

## மரப்பிசினான பெருங்காயம்




பெருங்காய மரத்தின் வேர்க்கிளைகளிலிருந்து புறப்படும் ஒரு பிசினே, இன்று பெருமளவு பிசினஸ் ஆகும் பெருங்காயம்! சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு முன்னோர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இப்பொருளை முதன் முதலில் சமையலில் சேர்த்து வெற்றி வாகை சூடியவர்கள் பாரசீகர்கள்!
ஆப்கானிஸ்தானில் அதிகமாக உற்பத்தியாகும் பெருங்காய மரம் இன்று உலகளவும் “மணம்“ வீசிக் கொண்டிருக்கிறது.
”பெருங்காயம் வைத்த டப்பா” என வழக்கில் முன்பு பணக்காரனாக இருந்து பின்பு ஏழையானவனை கிண்டல் செய்வதுண்டு.
இந்த (பெருங்)காயம் மெய்! பொய்யில்லை!

## ஞானம் பற்றிய ஞானம் வேண்டுமா...?



ஞானம் என்கிற ஆத்ம ஞானம் எனும் ஓடம் மூலம் பாவக்கடலை எவரும் கடக்க இயலும்! நன்கு வளர்ந்த நெருப்பு எப்படி விறகுகளை எரித்து சாம்பலாக்குகிறதோ, அப்படித்தான் ஞானம் எனும் அக்னியானது அனைத்துக் கருமங்களையும் சாம்பலாக்கிவிடும்.
ஞானம் போன்ற சுத்திகரிப்பு பொருள் எங்குமே கிடைக்காது! கர்ம யோகத்தால் திருத்தப்பட்டவன், வெகு காலம் கடந்த பிறகு தானாகவே ஞானத்தைப் பெற்றுவிடுவான்!
இந்த அறிய ஞானத்தை பெறுவதிலேயே சிந்தைகொண்டு, தன் புலன்களை அடக்கி, சிரத்தையுடன் முயற்சி செய்பவன் அதனை அடைந்து விடுவான். இதன் முதிர்ச்சியாக அவன் பெரும் பெரிய பாக்கியமே மோட்சமாகிறது.

## யோகிகள் பற்றி!



அக்னி, ஜோதி, பகல், சுக்ல பட்சம், உத்தராயணம் காலமான ஆறு மாதங்கள், ஆகிய இக்காலங்களில் உயிர் நீத்த பிரம்ம ஞானிகள், அக்னி முதலியவைகளின் அபிமான தேவதைகளுக்குரிய லோகங்கள் வழியாக பிரம்மத்தை அடைந்து விடுவார்கள்.

புகை, ராத்திரி, கிருஷ்ண பட்சம், தட்சிணாயணம் காலமான ஆறு மாதங்கள், இவைகளில் இறக்கும் யோகி சந்திரனுடைய ஜோதியை அடைந்து மறுபிறவி பெறுவான்!

யோகியானவன் கொண்ட இயல்பு என்னவென்றால், வேதங்களிலும், யக்ஞங்களிலும், தவங்களிலும், தானங்களிலும் என்ன புண்ணியபலன் உண்டு எனக் கூறப்பட்டுள்ளதோ, அவையனைத்தையும் அவன் பொருட்படுத்த மாட்டான். எனவே அவன் இறுதி நிலை பெறுவது உயர்வித்ததும், ஆதியான பரமபதம்!

(பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உரைத்த கீதைத் துளிகள் இவை)

## வீட்டுக்குறிப்புகள்

தேங்காயை உடைத்து பெறும் இளநீரில் கொஞ்சம் எடுத்து சுண்ணாம்பு டப்பாவில் ஊற்றி வைத்தால், அது ரொம்ப நாட்கள் காய்ந்து போகாமல் இருக்கும். தவிர வெற்றிலை போடுகையில் அந்த இளநீர் கலந்த சுண்ணாம்பால் கூடுதல் சுவை பெறலாம்.

பிரிஜ்ஜில் உள்ள பிரீஸரினுள் பிளாஸ்டிக் பேப்பரைப் போட்டுவிட்டு, அதன் மீது ஐஸ் டிரேக்களை வைத்தால், ஐஸ் டிரேக்கள் இறுக்கமாக ஒட்டிக்கொள்வதைத் தவிர்க்கலாம்.

இரவு டிபனுக்கு மத்தியான பொழுதில்தான் மாவு அரைத்திருந்தால் புளிக்குமோ, இல்லையோ என்று கவலைப்பட வேண்டாம். இரண்டு வெற்றிலையை எடுத்துக் கழுவிவிட்டு அரைத்த மாவில் போட்டு மூடிவிடவும். மாவு புளித்து மேலெழும்பி உங்கள் கவலையைப் போக்கிவிடும்.

சாதாரணமாக புடலங்காயை பாதியை வெட்டி சமைத்து விட்டு, மீதியை பிரிஜ்ஜில் வைத்தால் அது வெம்பிப் போய்விடும். இதனைத் தவிர்த்து புடலங்காயை வில்லை வில்லைகளாக வெட்டிவிட்டு, உப்பு கலந்த நீரில்போட்டு, காற்று புகாத ஜாடி ஒன்றில் போட்டு வைத்தால் ஒரு வாரமானாலும் மிக நன்றாக இருக்கும்.

உபயோகிக்கும் துணியில் பென்சில், கிரேயான்ஸ் போன்றவற்றின் கறை பட்டுவிட்டால், முதலில் அப்பகுதியை சாதாரண ரப்பரால் முடிந்தவரை அழித்துவிட்டு, பிறகு துவைத்தால் கறை போயே போச்சு!

பாத்திரம் தேய்க்கப் பயன்படும் ஸ்டீல் உல் கம்பி (ஸ்பிரிங் போல சுருள் சுருளானது) யை ஒரு துணியில் சுற்றிக்கொண்டு சோப்பு நுரையில் நன்கு முக்கி எடுத்துவிட்டு, அதனைக் கொண்டு சமையலறை, குளியலறையில் உள்ள சுவர் டைல்ஸ்களைத் துடையுங்கள். பின்பு அவைகளை நீர் கொண்டு கழுவிட பளிச்சிடும் டைல்ஸ்!

சமையலுக்காக பட்டாணியை முதல் நாள் ஊறவைக்க மறந்துவிட்டால், நீரைக்கொதிக்க வைத்து, அதில் சிட்டிகை அளவில் சமையல் சோடா, கொஞ்சம் உப்பு போட்டு நீரை பிளாஸ்க்கில் ஊற்றி, பட்டாணியையும் அதில் போட்டுவிடவும். இரண்டு மணிநேரம் கழித்து எடுத்தால், முதல் நாள் பட்டாணியை ஊறவைத்து எடுத்தது போல ஆகிவிடும்.

கொத்தமல்லிக் கீரை, பச்சை மிளகாய், கருவேப்பிலை ஆகியவற்றை ஒரு வெள்ளைத் தாளில் வைத்து சுற்றி பிளாஸ்டிக் டப்பாவில் போட்டு பிரிஜ்ஜில் வைத்தால் அவைகள் ரொம்ப நாட்களுக்கு ஃபிரஷ் ஆகவே இருக்கும்.

கொசுவை விரட்டும் நிவாரணி கருவி தீர்ந்து விட்டால் கவலை வேண்டாம். மாற்றாக ஒரு கப்பில் நீர் நிரப்பி, அதில் இரண்டு அல்லது மூன்று கற்பூரக் கட்டிகளை பொடி செய்து அதில் போட்டு கலக்கி, படுக்கை அறையின் மூலையில் வைத்தால், அன்றிரவு கொசுத்தொல்லை இருக்காது!

ஏனாதூர் பத்ரிநாராயணன்

# மனம் ஒரு குரங்கு



சித்திரபுரியின் அரசனாகத் திகழ்ந்தவன் நித்தியவர்மன். சிறந்த வீரனான அவனை எதிர்க்க அக்கம் பக்க தேசத்து மன்னர்களால் முடியவில்லை. அதனால் சற்று ஆணவக் குணத்தைப் பெற்றுவிட்டான் அவன்.

தெய்வம் நித்தியவர்மனை சோதிக்க நினைத்ததோ என்னவோ, ஒருநாள் அதிகாலை சுமார் 4 மணிக்கு அவனுடைய காதில் ஏதோ புகுந்த உணர்வு கொண்டவன் சட்டென்று படுக்கையை விட்டு துள்ளி எழுந்தான். அருகில் உறங்கிக்கொண்டிருந்த ராணி கும்பேசுவரி இதனால் தூக்கம் கலைந்து உட்கார்ந்து கொண்டு கணவரிடம் "என்னாச்சு உங்களுக்கு?" என பரிவுடன் கேட்டாள். "கும்பா! என் காதில் ஏதோ பூச்சி நுழைந்திருக்கிறது. என் காதைப் பார்" என காண்பித்தான். ராணி அவன் காதைப் பார்த்தாள். எதுவும் தெரியாததால் "நாதா! காது வலிக்கிறதா? உடனே அரண்மனை வைத்தியரை வரவழைக்கிறேன்" எனக் கூறி பக்கத்தில் உள்ள மணியை ஆட்ட சில தாதிகள் ஓடோடி வந்தனர்.

கொஞ்ச நாழிகைக்குள் அரண்மனை வைத்தியர்கள் வந்து அரசனை பரிசோதித்துப் பார்த்துவிட்டு, காதில் ஏதோ எண்ணெயை ஊற்றினர். அப்போதைக்கு காது குடைச்சல் நீங்கியதாக மன்னன் கூற, அவர்கள் கிளம்பிவிட்டனர்.

சுமார் அரை மணி நேரம் கடந்தவுடன் நித்தியவர்மன் காது குடைச்சலால் அவதிப்படத் தொடங்கினான். மீண்டும் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்ட வைத்தியர்களிடம் அவன் "என்ன வைத்தியம் பார்த்தீர்கள்? இப்போது என் காது குடைச்சல் முன்னைவிட அதிகமாகி விட்டது" என கூச்சலிட்டான். மறுபடியும் அவனுடைய காதுகளை பரிசோதித்த வைத்தியர்களுக்கு காதில் புகுந்த பூச்சி உள்ளே இருக்கிறதா, செத்து விட்டதா என்பது புரியவே இல்லை. வைத்தியர்களின் செயலற்ற நிலையும், காது தந்த உணர்வும் அரசனுக்கு சினத்தைத் தரவே, "தண்டங்களே, போய்த் தொலையுங்கள்" என பலமாகச் கூச்சலிட, பயந்து போன அவர்கள் தப்பித்தோம், பிழைத்தோம் என அங்கிருந்து ஓடிவிட்டனர்.

அடுத்து ராணி கும்பேசுவரியின் பிறந்த நாட்டிலிருந்து

வந்த ராஜ வைத்தியர், தான் கொண்டு வந்திருந்த மூலிகைச்சாறை, அரசன் காதில் விட்டுப் பார்த்தும் அவன் பிரச்சினை தீரவே இல்லை!
பல மன்னர்களை போரில் வென்று கப்பம் பெற்றுக்கொண்டிருந்த நித்தியவர்மனை கேவலம் ஒரு பூச்சி பாடாய் படுத்திவிட, அக்காது வலி உணர்வால் அரசன் உடல் மெலிய ஆரம்பித்தது. "எப்படி இருந்த இவர் இப்படி ஆகிவிட்டாரே!" என ராணி உள்ளிட்ட அரண்மனை வாழ்வோர், அமைச்சர் குழு ஆகியோர் இரக்கப்பட்டனர்.

இப்பொழுதெல்லாம் காதில் பூச்சி ஆட்டம் போடும் உணர்வு பலமாக அரசனைப் பாதித்துவிடவே, ராணி உட்பட அனைவரிடமும் சிடுசிடுப்பு காட்ட ஆரம்பித்துவிட்டான் மன்னன். இதுவரை செய்யப்பட்ட அனைத்து வைத்தியங்களும் தோல்வியை தழுவிவிட்டதால்!
சோதனையாக, நித்தியவர்மன் பெரிதும் மதிக்கும் உள்ளூரிலேயே வாழ்ந்து வந்த துறவி மணிரத்தின சுவாமிகளும் தன் சீடர்களுடன் காசிக்கு யாத்திரை சென்றிருந்ததால் அவரிடமும் மன்னன் ஆலோசனை பெறமுடியாத நிலை!
இப்படியே சுமார் 30 நாட்கள், அரசனின் காது குடைச்சலால் அரசு நிர்வாகமே ஸ்தம்பிக்கும் அளவிற்கு, அரசன் தன் காது பற்றிய சோக உணர்வால் படுத்த படுக்கையுமாகி விட்டான். நல்லவேளை இந்நிலை குறித்து கப்பம் கட்டிவந்த சிற்றரசர்களின் செவியை இச்செய்தி எட்டவே இல்லை.

காசிக்குப் போன துறவி, அன்று நாடு திரும்பி அவரது ஆசிரமத்துக்கு வந்தவுடன், இச்செய்தி கூறப்பட்ட அடுத்த கணமே தீர்த்தப் பிரசாதத்துடன் மன்னனிடம் விரைந்தார் சீடர்கள் புடை சூழ.
துறவியைக் கண்ட மன்னன் சிரமப்பட்டு மரியாதையின் நிமித்தம் தன் கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயன்றான். ஆனால் துறவி மௌனமாக கையசைத்து "படுக்கையில் இரு" எனக் குறிப்பால் உணர்த்தினார்.

பிறகு துறவி மன்னனின் இரு காதுகளையும் நன்கு பரிசோதித்துப் பார்த்துவிட்டு சுமார் 1.:2 மணி நேரம் தியானத்தில் ஆழ்ந்து போனார். "மன்னா! உன் காதில் நுழைந்த பூச்சியைக் கொன்று வெளிவரச் செய்யும் மூலிகைச் செடி, இங்கிருந்து சுமார் 100 யோஜனை தூரத்தில் உள்ள காட்டில் உள்ளது" என தியானம் முடித்து துறவி சொன்ன வார்த்தைகள் அரசனுக்குத் தெம்பூட்டியது. "மன்னா! கவலை தவிர்! இப்பொழுதே என் சீடர்களை காட்டிற்கு அனுப்பி மூலிகையைக் கொண்டுவரச் செய்து காலையில் மீண்டும் இங்கே வருவேன்" என ஆறுதல் அளித்துவிட்டு கிளம்பிவிட்டார்.

மறுநாள் சொன்னபடியே துறவி தன் சீடர்கள் புடை சூழ அரண்மனைக்கு வந்தார் மூலிகைச்செடியுடன். துறவி ஆணையிட்டபடி, மன்னன் ஸ்நானம் புரிந்து புத்தாடை அணிந்து விட்டான். அவனை தரையில் ஒரு மணையில் அமரச்செய்து துறவி ஹோமம் புரிந்தார். அது முடிந்ததும், அவன் எதிரே தான் கொண்டு வந்திருந்த மூலிகைச் செடியிலிருந்து ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் சாறு பிழிந்துவிட்டு "அப்பனே! நீ இறைவனிடம் உருக்கமாக, காதில் புகுந்த பூச்சி வெளியே வந்துவிட வேண்டும் என்று வேண்டிக்கொள்!" என ஆக்ஞையிட மன்னன் அவ்வாறே செய்தான்.

மன்னனை தன் மடியில் கிடத்தி, கிண்ணத்தில் இருந்த சாற்றில் மூன்று துளிகள் மட்டும் அவனுடைய வலது காதில் விட்டுவிட்டு "பத்து நொடிகள் அசையாதிரு" எனச் சொன்னார். துறவி குறிப்பிட்ட நேரம் முடிவடைய, அவர் கூறியவாறே மன்னன் மறு பக்கம் திரும்பி படுத்தான் அவர் மடியில் இருந்தவாறே. அடுத்த கணத்தில் உற்சாகமாக தனது விரித்த கரத்தை துறவி மன்னனிடம் காண்பித்து "அதில் என்ன தெரிகிறது?" என்று கேட்கவே, அதனைப் பார்த்த அவன் வியப்புடன் "மகானே! ஒரு செத்த பூச்சி தெரிகிறதே!" என பதில் சொன்னான்.

அப்பொழுது துறவி புன்னகையுடன் "மன்னா! உன்னை இதுவரை ஆட்டிப்படைத்த இந்த ஜந்துவை "மனப்பூச்சி" என்பார்கள். இனி உன் காதில் எவ்வித குடைச்சலும் வரவே வராது!" என உறுதியாகச் சொன்னார்.

சில நிமிடங்கள் ஆனவுடன் மன்னன் உற்சாகமுடன் "மகானே! என் காதில் இதுகாறும் தொல்லை தந்து கொண்டிருந்த பூச்சி குடைச்சல் அறவே அழிந்து விட்டது. அப்பாடா!" எனக்கூறி மகிழ்ந்தான்.
"மகானே! இதற்கு யான் என்ன கைம்மாறு செய்ய வேண்டும்?" எனக்கோர, துறவி "அப்பனே! வழக்கம்போல் ஏழை, எளியவர்களும் களிப்படையும் வகையில் உன் நல்லாட்சியைத் தொடர்ந்து செய்" என ஆசீர்வதித்து விட்டு தன் சீடர்களுடன் அரண்மனையை விட்டு புறப்பட்டு விட்டார் தன் ஆசிரமத்திற்கு.
திரும்பும் வழியில் ஒரு சீடன் தயங்கியவாறே துறவியிடம் "குருநாதரே! தாங்கள் மன்னனின் காதில்

விட்ட சாறு எந்த செடியிலிருந்து எடுக்கப்பட்டது?" எனக் கேட்டான்.

அதற்கு கடகடவென சிரித்தவாறு துறவி "சீடனே! நான் அரண்மனைக்குக் கொண்டு வந்தது வெறும் திருநீற்றுப் பச்சிலை செடியை. ஆனால் நான் மன்னன் காதில் விட்டது சுத்தமான நீரை. அவன் தன் காதில் நுழைந்து இம்சை தந்து வந்ததாகக் கூறிவந்த பூச்சி என்றோ மன்னனின் காதை விட்டு வெளியேறிவிட்டது. ஆனால் அவன் அதனைக் கண்ணால் பார்க்காததால், அது தனக்கு குடைச்சல் கொடுத்துக்கொண்டே காதில் இருக்கிறது என்று எண்ணி தவறாக தன்னை வருத்திக்கொண்டு இருந்தான் இத்தனை காலம்" என்று சொன்னார். அப்பொழுது வேறு ஒரு சீடன் "குருவே! அந்த செத்த பூச்சி எங்கிருந்து வந்தது?" எனக் கேட்க, துறவி அங்கு இருந்த வேறொரு சீடனைக் காட்டி, "இவன்தான் நான் கூறியபடி ஒரு செத்த பூச்சியை தன்னோடு அரண்மனைக்குக் கொண்டுவந்தான்" எனச் சொல்ல அனைவரும் ஆச்சரியப் பட்டனர்.

பின்பு சீடர்களிடம் துறவி சொன்னது:
எல்லோரும் கவனமுடன் இதைக் கேட்டுக் கொள்ளுங்கள்! மன்னனின் காது பூச்சி குடைச்சல் எல்லோருக்கும் ஒரு பாடமே!

காதில் இல்லாத பூச்சி ஒன்றுக்காக, அதனை தன் மனக் குடைச்சல் ஆக்கி, பல காலம் மன்னன் அவதியுற்று வந்துள்ளான். இப்படித்தான் இல்லாத பிரச்சினையை இருப்பதாக நினைத்துக்கொண்டு ஜனங்களில் பலபேர் இன்னும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

# மணங்களில் தான் எத்தனை வகை!

சாய் சந்திரன்



## பல்சுவை பக்கம்

# நட்பு மாலை

ஆருரன்

வானுக்கு நிலவு நட்பு
நற்கோனுக்கு நல்லாட்சி நட்பு
பெற்ற கடனுக்கு வட்டி நட்பு
காக்கைக்கு தன் இனம் நட்பு
யாக்கைக்கு ஆன்மா நட்பு
பெண்ணுக்கு கற்பு நட்பு
ஆணுக்கு வீரம் நட்பு
முதுமைக்கு நோய் நட்பு
இளமைக்கு வேகம் நட்பு
வான் சந்திரனுக்கு அல்லி நட்பு
சூரியனுக்கோ தாமரை நட்பு
இறைவனுக்கு பக்தி நட்பு
ரயிலுக்கு சிக்கனல் நட்பு
ஜெயிலுக்கு காவல் நட்பு
ஆறுக்கு வேம்பு நட்பு
பாலுக்கு தண்ணீர் நட்பு
ஆடலுக்கு அபிநயம் நட்பு
பாடலுக்கு மெட்டு நட்பு
மண்ணுக்கு நீர்வளம் நட்பு
கண்ணுக்கு இமை நட்பு
கண்ணனுக்கு கோபியர் நட்பு
தாய்க்கு பெற்றபாசம் நட்பு
தீரா நோய்க்கு இரவு நட்பு
நாய்க்கு நன்றி நட்பு
பேய்களுக்கு புளியமரம் நட்பு
கவிஞனுக்கு கருப்பொருள் நட்பு
நடிப்போர்க்கு பாவனை நட்பு
மழைக்கு கருமேகம் நட்பு
காதலுக்கு மோகம் நட்பு
மயிலுக்கு அந்திமாலை நட்பு
பகைக்கு கோள் கூறல் நட்பு
அரசியலுக்கு போராட்டம் நட்பு
நீதிமன்றத்திற்கு சாட்சி நட்பு
வேதத்திற்கு ஓசை நட்பு
பரந்த கடலுக்கு அலை நட்பு
பொன்னுக்கு செம்பு நட்பு
அரசு ஊழியர்க்கு அகவிலைப்படி நட்பு
மெகா சீரியலுக்கு கண்ணீர் நட்பு
குழந்தைக்கு மழலை நட்பு
ஓடும் வாகனத்திற்கு நற்சாலை நட்பு
நல்லாசிரியனுக்கு சிறந்த மாணவன் நட்பு
வரவு செலவுக்கு வருவாய் நட்பு
புலவர்க்கு மொழி நட்பு
புரவலர்க்கு பெறுபவன் நட்பு
காவலருக்கு அதிகாரம் நட்பு
பண்டிகைக்கு பலகாரம் நட்பு
ஆலயத்திற்கு இறைத்திருவுரு நட்பு
வைத்தியருக்கு நாடி நட்பு
பைத்தியத்திற்கு உளறல் நட்பு
கல்விசாலைக்கு நன்கொடை நட்பு
தொழிலுக்கு வருவாய் நட்பு
நட்புக்கு நட்பு இணைநட்பே!



# பயன் தரும் வீட்டு மருத்துவ செய்திகள்!

## கண் சம்பந்தப்பட்ட பாதிப்புகள்

சிலருக்கு கண்ணில் எரிச்சல் ஏற்பட்டு இடையூறு வரும். அப்பொழுது நந்தியாவட்டை பூவை எடுத்து, அதனை கண் ஒத்தடம் தந்தால், குணம் கிடைக்கும். தினம் உணவில் அரைக்கீரையை சமையலில் பயன்படுத்திவர, உடல் குளிர்ச்சி பெறுவதோடு, கண் எரிச்சல் உணர்வு வரவே வராது.

தாமரை இதழ்களை எடுத்து காய்ச்சி வடிகட்டி தேன் அல்லது சர்க்கரையில் கலந்து பருகி வந்தால் உடலின் உட்சூடு வராது போகும்.



பொன்னாங்கண்ணி கீரை இலையை மென்று தின்று விட்டு, காய்ச்சிய பாலை குடித்து வர தெளிவான கண்பார்வை உண்டாகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் கண் சூட்டுக்கு அது தணிய நெல்லிக்காய் சாற்றை பிழிந்து இரு வேளைகளில் ஒவ்வொரு ஸ்பூன் கொடுத்து வரவேண்டும்.

கண் ஒளி பெருக, தூதுவளை காயை ஊறுகாய் செய்து சாப்பிடலாம்.

கூர்மையான கண்பார்வை பெற, சித்திரை, வைகாசி மாதங்களில் தொடர்ந்து 60 நாட்கள் பொன்னாங்கண்ணி கீரையைச் சாப்பிட வேண்டும்.


கண்களில் அடிக்கடி நீர் வருவதை தடுக்க, நாவற் பழத்தை ஒருநாள் விட்டு ஒருநாள் உண்டு வரலாம்.

சிலருக்கு மாலைக்கண் நோய் வர வாய்ப்புண்டு. அதன் அறிகுறி தென்பட ஆரம்பிக்கையிலேயே பப்பாளிப் பழத்தை சாப்பிட ஆரம்பித்து விட, அது வராமல் போய்விடும்.

கண் வலி, கண் அரிப்பு, அதன் சிவப்புத் தன்மை இவற்றை குணமாக்க, வில்வத்தளிரை வதக்கி இளஞ்சூட்டில் ஒத்தடம் கொடுக்கலாம்.

கண் குளிச்சிக்கும், உடல் பொலிவு பெறவும், பசு நெய், பசு வெண்ணெய் இவற்றை உணவில் சேர்க்கலாம்.

## தொண்டை தொடர்புடைய பாதிப்புகள்



தொண்டைப்புண், பல் ஈறுகளில் ரத்தம் வடிதல், சரியாவதற்கு இலந்தை இலை தளிரை கொதிக்க வைத்துவிட்டு, பொறுக்கும் சூட்டில் அதில் உப்பு போட்டு வாய் கொப்பளிக்கலாம்.

தொண்டைப் புண்ணால் அவதிப் படுவோர், வேப்பம் பூவை வெந்நீரில் போட்டு, அதன் ஆவியில் தொண்டையைக் காட்டி வந்தால், நிவாரணம் கிடைக்கும்.

அடுத்து ஒரு நிவாரணமாக மாதுளம் பூவை உலர்த்தி பட்டை காய்ச்சி தொடர்ந்து சில தினங்கள் வாய் கொப்பளித்து வரல் நன்று.

வறட்டு இருமலால் அவதிப் படுபவர்கள் எழுமிச்சை சாற்றில் தேன் கலந்து குடித்து வர அது போய்விடும்.

குரல் வளம் பெற வாதுமை பருப்பு, ஏலம், சுக்கு, கற்கண்டு, அதிமதுரம், குங்குமப்பூ, ஜாதிபத்ரி, கிராம்பு சேர்த்து தொடர்ந்து சாப்பிட்டு வர, பலன் கிட்டும்.

தொண்டையில் வலி வந்தால் உடனே உப்பு நீரை வாயில் விட்டு தொண்டை வரை படும்படி, வாய் கொப்பளித்து வர நல்ல குணம் கிடைக்கும்.

## கால் ஆணி தொல்லை



மருதாணியுடன் மஞ்சள் சேர்த்து இரவுப் பொழுதில், கால் ஆணிப் புண் மீது கட்டிவிட குணமாகும்.

மற்றொரு வழியாக, மஞ்சள், வசம்பு, சிறிதளவு கற்பூரம், மருதாணி இலை சேர்த்து கட்டிவர, அதன் உபாதை நீங்கும்.

கால் ஆணி பாதிப்பிலிருந்து விடுதலை பெற வேறொரு வழி, அப்புண்ணின் மீது சித்திரப் பாலாடை கீரையின் பாலை தடவலாம்.

## நல்ல பசிக்கு




பிராண்டையை நெய்விட்டு வதக்கி அதனை துவையல் பண்ணி உணவில் சேர்க்க நல்ல பசி உண்டாகிவிடும்.

பசியின்மையும், சுவையின்மையும் இருந்தால் ஆடாதொடை இலையை நெய் போட்டு வதக்கி சாப்பாட்டுடன் சேர்த்து உண்டால் போதுமானது.

பசி மந்தம் போக்கும் இன்னொரு முறை, முன்னைக் கீரையை பருப்புடன் சேர்த்து சாப்பிடுகையில் உண்ணலாம்.

குடந்தை நாராயணி





திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

## எதிரிகளை வெல்ல

# விஜயா நித்ய தேவி யந்திரம்

விஜயா நித்ய தேவியானவள் திதிகளில் பன்னிரெண்டாம் திதியான துவாதசி திதியை ஆள்பவள் ஆவாள். விஜயா என்ற சொல்லுக்கு வெற்றி என்று பொருளாகும். போட்டி மிகுந்த இந்த உலகில் போட்டிகளை வென்று வாழ்க்கை தரம் மேம்பாடு அடைய விஜயா நித்ய தேவி எந்திரம் உதவுகிறது. மாணவர்கள் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவதற்கும், எதிரிகளை வென்று வம்பு வழக்குகளில் வெற்றிபெறவும் இந்த விஜயா நித்ய தேவி எந்திரம் பேருதவி புரிகிறது. மேலும் துவாதசி திதியில் பிறந்தவர்கள் இந்த எந்திரத்தை வழிபட்டுவந்தால் இந்த விஜயா தேவியின் பரிபூரண அருள் கிடைக்கப் பெற்று வாழ்வில் வெற்றிவாகை சூடுவதற்கு காரணமாக அமைகிறது. சிலர் சூழ்நிலை காரணமாக படிப்பை பாதியில் விடவேண்டியது வந்து இருக்கலாம். சிலருக்கு கட்டடம் கட்டி பாதியில் நிறுத்தவேண்டியது வந்து இருக்கலாம். தடை தாமதப்பட்ட காரியங்களை தங்கு தடையின்றி முடித்து வைக்கும் ஆற்றல் இந்த விஜயா நித்ய தேவிக்கு உண்டு. அதுமட்டும் அல்லாமல் நமது வாழ்வில் அனைத்து விதமான செல்வ வளங்களையும் ஏற்படுத்தி கொடுப்பதில் இந்த எந்திரத்திற்கு மிகப்பெரிய பங்கு உண்டு. இந்த விஜயா நித்ய தேவியின் யந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் சாமந்தி மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் எதிரிகளை வென்று அனைத்து செயல்பாடுகளிலும் வெற்றியை பெறமுடியும்.

### விஜயா நித்ய தேவியின் மந்திரம்:

“ஓம் ஐம் ரீம் ஶ்ரீம் ஐம் விஜயா தேவியே நமஹா”

### விஜயா தேவியின் யந்திரம்:



# ஆன்மிக துணுக்குகள்

## மாவிலைத் தோரணம்



முன்னோர்கள் நமக்கு வழிகாட்டியபடி, முக்கியமான மங்கல, நல்ல காரியங்களை நடத்துகையில் கோயில், இல்லம், தொழிற்கூடங்கள், பள்ளிகள் இவைகளின் வாயிற்புறம் மாவிலைத் தோரணம் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் உள்ளது.

புதிய மாவிலையின் காம்பில் உள்ள பால், காற்றில் கலந்து நாம் சுவாசிக்கையில், அது கிருமி நாசினியாகச் செயல்படும். அதனால் கொரானா உட்பட எந்தவித தொற்று நோயும் யாரையும் பற்றாது. மாவிலைகள் வைக்கப்பட்ட சொம்புகளிலிருந்து நம் சிரசில் தெளிக்கப்படும் ஜலமும் கூட நோய் நிவாரணியாகச் செயல்படும்!

## திருமணப் பொருத்த வகைகள்



கல்யாணத்திற்காக ஜாதகப்படி ஆண் - பெண் இருபாலர்களுக்கும் பார்க்க வேண்டிய பொருத்தங்கள் இவை என ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளது வருமாறு:
தினப்பொருத்தம், கணப்பொருத்தம், மகேந்திர பொருத்தம், ஸ்திரீ தீர்த்தம், யோநி பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசி அதிபதி பொருத்தம், வசியப் பொருத்தம், ரஜ்ஜிப் பொருத்தம், வேதைப் பொருத்தம், நாடிபி பொருத்தம் என 11 பொருத்தங்கள்.

ஆனால் சாஸ்திரத்தில் இடம்பெறாத தற்கால பொருத்தம் இது... கல்யாணமாகவுள்ள பிள்ளையும் பெண்ணும் வேலை பார்க்கும் பொருத்தம்!

## ஒன்றும், இரண்டுமானவன்



பகவான் மகாவிஷ்ணு, மகாபலி சக்கரவர்த்தி கொண்ட ஆணவத்தை அடக்குவதற்காக, குள்ள உருவமான வாமனாவதாரம் நிகழ்ந்தது. அடுத்து பகவான் அன்றே விஸ்வரூபமெடுத்து உலகளக்கும் விக்கிரமவதாரத்தையும் எடுத்து ஒன்றுக்கொண்டு முரண்பட்ட அவதாரியாக காட்சி தந்த அற்புதமும் நடந்தேறியுள்ளது.
ஆவணித் திருவோணத்தில் வாமனாவதாரம் நிகழ்ந்ததால் அது விசேடமாகிறது.

வரும் 7-9-22 கூடிய ஆவணி 22 ஆம் தேதி வாமன ஜெயந்தி நாளாகிறது!

## மகாவிய தீபாதம்



யோகங்கள் என்பவை 27 யோகங்களாக உள்ளது. அதில் இடம்பெறுவதே வியதீபாதம் என்கிற மகாவியதீபாதம் எனும் யோகம். மாதத்திற்கு ஒன்றாக, ஒரு வருடத்திற்கு 13 முறை நிகழும். வியதீபாத யோக நாட்களுக்குள் மஹாளய பட்சத்தில் வரும். மகாவியதீபாதம் மற்றும் மார்கழி மாதத்தில் வரும் தனுர் வியதீபாதம் ஆகிய யோக நாட்கள் மிகச்சிறப்பானவை என்று சொல்லப்படுகிறது.

இத்தகைய மகாவியதீப புண்ணிய தினம் நிகழும் ஆவணி மாதம் 29 ஆம் நாள் வர உள்ளது.

அன்றைய தினத்தில் நம் முன்னோர்களாகிய பித்ருக்களை துதித்து வெல்லம், சர்க்கரை இவற்றை தானம் செய்யலாம்.

தவிர பித்ருக்களுக்கான தர்ப்பணம், சிரார்த்தம் புரியவும் அந்த ஆவணி 29 ஆம் தேதி சிறப்பானது.

ஸ்ம்ருதி கௌஸ்துபம் என்ற பண்டைய நூலில் மேற்கண்ட காரியங்களை செய்வதின் மூலம் குடும்ப உறவுக்குள் உள்ள விரிசல், மனக் கசப்புகள் நீங்குவதோடு, பரஸ்பரம் அன்பு ஏற்படும் எனவும், கசப்பான, விரும்பத்தகாத சம்பவங்களை அது தடுத்துவிடும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**ஏனாதூர் பத்ரிநாராயணன்**



# நாயன்மார் வரலாறு

## திருநீற்று மகிமை

# ஏனாதிநாத நாயனார்

சோழமன்னன் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருக்க, அமைச்சர் சிவபாலன் மன்னரையே உற்றுப் பார்த்தபடி இருந்தார். மன்னரின் தீவிரமான யோசனைக்குக் காரணம் புரியவில்லை. சரி, மன்னரிடமே கேட்டுவிடுவோம் என்கிற முடிவுக்கு வந்தவர், “அரசே! இந்த ஆழ்ந்த சிந்தனைக்குக் காரணம் அறியலாமா?” என தயக்கத்துடன் கேட்டார்.

அமைச்சரைக் கூர்ந்து நோக்கிய மன்னன், “ அமைச்சரே! சோழநாடு சோறுடைத்து: என்னும் சொல்லினை மெய்ப்பிக்கும் வண்ணம் முப்போகம் விளைந்து மக்கள் பசியின்றி வாழ்கின்றார்கள். ஆனால் , எந்த வகையிலும் மக்களின் நிம்மதிக்கு பங்கம் நேர்ந்துவிடக் கூடாது! அந்த அளவிற்கு நமது படைபலம் நன்றாகத்தானே உள்ளது?.. அதில் ஏதேனும் குறைவுள்ளதா?...” என சற்றே கவலையுடன் கேட்டார்.

மெல்லச் சிரித்த அமைச்சர், “அரசே! சோழநாடு சோறுடைத்து மட்டுமல்ல; வீரமும் உடைத்து! இது அந்த எம்பெருமான் சிவனை வணங்கும் மண்!

இங்கு மக்களை எந்த பிரச்சனையும்அண்டாது; அண்டவிட மாட்டான் நம் ஆலவாய் அப்பன்! அந்த சிவனருளால், எயினனூர் ஏனாதிநாதர், நம் வீரர்களுக்கு வாட்பயிற்சி அளிப்பதோடு புதியதாக பலநூறு வீரர்களை உருவாக்கி வருகிறார். இரவுபகல் பாராமல், நம் படைபலத்திற்கு ஒரு குறைவும் ஏற்படா வண்ணம் ஓய்வில்லாமல் தன் கடமையை செவ்வனே செய்து வருகிறார் ஏனாதிநாதர்! அவர் தேசபக்தியில் மட்டுமல்ல; சிவபக்தியிலும் சிறந்து விளங்குபவர்! அந்த சிவனே நம் தேசத்தின் காவல் என நிச்சயமாய் நம்பி, தன் கடமையை செவ்வனே செய்து வரும் ஏனாநாதிதர் இருக்கும்வரை நாட்டின் பாதுகாப்பு குறித்து நாம் பயம்கொள்ளத் தேவையில்லை; கவலையை விடுங்கள்!” என்றார்.

“அவர் நீண்ட காலமாக வாட்பயிற்சி அளித்து வருகிறாரோ?...” -மன்னன்!
“ஆம், மன்னா! மூன்றாவது தலைமுறையாய் அவரது

பணி தொடர்கிறது. இப்பணிக்காக பலபேர் முன்வந்தும் ஏனாதிநாதரின் அர்ப்பணிப்பும் கடமை உணர்வும் வேறு ஒருவரை அந்த இடத்தில் வைத்துப் பார்க்க முடியாமல் செய்து விடுகிறது மன்னா!" – அமைச்சர்.

"அவர் அவ்வளவு நம்பிக்கையானவர் என்றால் அவாது பணி தொடரட்டும்"; மன்னன் திருப்தியடைந்தான்.

மன்னனின் நன்மதிப்பை ஏனாதிநாதன் பெற்றுவிட்டான் என்னும் தகவல் அதிசூரனுக்குத் தெரிய வந்தது!

அதிசூரன்....வஞ்சகம், சூழ்ச்சி, பொறாமை ஆகியவற்றின் மொத்த உருவம்! இவனது தந்தையார் காலத்திலிருந்து அரசாங்க படை வீரர்களுக்கு வாட்பயிற்சியளிக்கும் அரசுப்பணி கிட்டவேண்டும் என்று ஆலாய்ப் பறந்த குடும்பம் இது. தந்தையின் வழியே தனயன் என்று சொல்வதற்கேற்ப திறமையை வளர்த்துக்கொள்வதை விட்டுவிட்டு குறுக்கு வழியில் முன்னேறத் துடிக்கும் இவனால் ஏனாதிநாதரின் இடத்தைப் பிடிக்கவே முடியவில்லை.

வஞ்சம் நிறைந்து கிடக்கும் நெஞ்சம் கொண்ட எவராலும் வெற்றிக் கோட்டை எட்டிப்பிடிக்க முடியாது என்பதற்கு உதாரணமாய்த் திகழ்ந்தான் அதிசூரன்!

அதிசூரனின் மனம் அமைதி கொள்ளாமல் அலை பாய்ந்தது "இனி மாற்றுப் பாதையை யோசிக்க வேண்டும்! மன்னனிடம் மண்டியிட்டு வேலை கேட்டுப் பயனில்லை. வாட்பயிற்சியளிக்கும் பணிக்கு அதிசூரனே தகுதியானவன் என்று ஏனாதிநாதனையே சொல்ல வைக்க வேண்டும்; அதற்கு என்ன செய்வது?" யோசித்தான் அதிசூரன்!

ஏனாதிநாதரின் தன்மானத்தைச் சீண்டிவிட்டு, அவரை அக்கினியாய் கொந்தளிக்கச் செய்து, அந்த அனலிலே குளிர்காய வேண்டும் என திட்டம் போட்டான் அதிசூரன்!

திட்டங்கள் வகுக்கப்பட்டன. அதன்படி, அதிசூரனின் கையாள் தன் பணியை செவ்வனே செய்தான். ஏனாதிநாதனிடம் வந்த அதிசூரனின் கையாள், "படை வீரர்களுக்கு வாட்பயிற்சி அளிக்கும் தகுதி, ஒரு சுத்த வீரனுக்கே வாய்க்கப் பெற்றது. அப்படி ஒரு திறம் வாய்ந்த வீரம் உங்களுக்கு இல்லை என்கிறான் அதிசூரன்! அப்படி ஒரு வீரம் இருக்குமானால் அதிவீரனிடம் பயிற்சிபெற்ற அவனது பத்து வீரர்களை வென்று காட்ட வேண்டுமாம்! அந்த வீரர்களை வென்றுவிட்டால், வாட்பயிற்சியளிக்க தகுதியுள்ளவர் ஏனாதிநாதர் என்று ஒப்புக்கொள்கிறேன். மாறாக, அவர் தோற்றுவிட்டால் மன்னரிடம் சென்று வாட்பயிற்சியளிக்கும் தகுதி எனக்கில்லை என்று பதவி விலக வேண்டும்; செய்யமுடியுமா?". என்று அதிசூரன் சொன்னதாக தகவலை சொன்னான் அதிசூரனின் கையாள்.

இதனைக் கேட்டு, சிலிர்த்தெழவில்லை. சினங்கொண்டு பொங்கவில்லை: வாளெடுத்துத் தாவி ஓடவில்லை.'இறைவா' என்று ஈசனை நினைத்தார், ஏனாதிநாதர்!

'வாளின் நீளமும் வாளேந்திய கரத்தின் நீளமும் வகுத்தளந்து அதற்கேற்ப கால்களை பாவவிட வேண்டும் என்று வாள்வீச்சின் இலக்கணத்தை வீரர்களுக்கு சொல்லிக் கொடுப்பதோடு தேசபக்தியும் சிவபக்தியும் கொண்டு நன்னெறியோடு வாள்வீசிட வெற்றிமகள் விரைந்து வந்து மாலையிடுவாள்' என நேர்மையோடு பயிற்சிதரும் தனக்கு அதிசூரன் அனுப்பிய தகவல், தங்கத்தை புடம்போட தணலில் இடுவது போல் உள்ளது; "இறையே! என் ஈசனே! நடப்பதெல்லாம் உன்செயல் என்றே நம்புகிறேன்; உன் சித்தம் எதுவோ அப்படியே நடக்கட்டும்!" என வேண்டிய ஏனாதினாதர், அதிசூரனின் சவாலை ஏற்று அவனது வீரர்களுடன் சமர்செய்ய சம்மதித்தார்!

நாளும் இடமும் அதிசூரனால் குறிக்கப்பட்டு, அந்த நாளும் நெருங்கி வந்தது. தன்னிடம் பயிற்சி பெற்ற வீரர்களை சந்தித்தான் அதிசூரன்!

"நான் கற்ற வாட்பயிற்சியையெல்லாம் என் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் உங்களுக்குப் பயிற்றுவித்திருக்கிறேன். அதன் பலனை நான் அனுபவிக்க, அப்பெரும்பயனை நானடையும் நாள் நெருங்கி விட்டது. ஏனாதிநாதனை வென்றோ அல்லது கொன்றோ உங்களில் ஒருவர் வெற்றி பெற வேண்டும். என் வெற்றி உங்கள் கைகளில்!; என உணர்ச்சியை தூண்டிவிட்டான்.

அதே நேரத்தில்..

அதிசூரனின் சவாலைப்பற்றிய சிந்தனையே சிறிதுமில்லாமல் தன் மாணாக்கர்களுக்கு வாள்வீச்சு பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார், ஏனாதிநாதர்!

ஏனாதிநாதரின் உதவியாள் ஒருவன், "அய்யா சவாலுக்கான நாள் நெருங்கிவிட்டது. ஆனால், தாங்களோ அதனைப் பற்றிய நினைப்பே இல்லாமல் வழக்கமான வாள்பயிற்சியில் மூழ்கிக்கிடக்கின்றீர்களே", எனக் கேட்டான்.

"சொல்லிக் கொடுப்பதோடு நிறுத்திக்கொள்; அது போதும்! என்று எனக்கு சொல்லிக் கொடுத்துவிட்டான் இந்த அகிலத்தை ஆள்பவன். அதனால் கவலையில்லை" என்றார் ஏனாதிநாதர்! உதவியாள் புரியாமல் கேட்டான்.

"ஆள்பவன் என்றீர்களே; நம் அரசரைத்தானே சொன்னீர்கள்?"

"இல்லையில்லை; ஆண்டவனை, சொன்னேன்" என்றார் ஏனாதிநாதர். ஆமாம்! இறைவனின் சித்தம் எதுவோ, அதையே சிரமேற்கொண்டு செயலாற்றும் ஏனாதிநாதர், தன்னிடம் பயிற்சிபெறும் மாணாக்கர்களை நெற்றியில் நீறுபூச வேண்டாம் என்பார். இதென்ன வினோதம்?! எந்நேரமும் சிவனின் நினைப்பிலும் அணைப்பிலும் உள்ள இவர் , தன் மாணவர்களை சிவச்சின்னமான திருநீற்றுப் பட்டையை அணிய வேண்டாம் என்பாரா?.. ஏன் என்ற கேள்வி அங்குள்ள அனைவருக்குமே உண்டு! அதற்கெல்லாம் ஏனாதிநாதர் சொல்லும் பதில் இப்படித்தான் இருக்கும்; அதாவது, 'வாள்பயிற்சி கொடுப்பது எனது தொழில்! ஆனால், வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கே அர்ப்பணித்தவன் நான் அதனால் சிவச்சின்னம் அணிந்த எந்த ஒரு பக்தனையும் வாள்கொண்டு தாக்கவோ கொலை ஆயுதம் எதையும் கைக்கொள்ளவோ விடமாட்டேன். சிவனடியார் ஒருவர் என்னைக் கொல்லவே வந்தாலும் தலைவணங்கி, மரணத்தை ஏற்பேன்", என அடிக்கடி சொல்வார், ஏனாதியார்!

இதனை நன்றாகவே அறிந்திருந்த அதிசூரன் தன் வீரர்களிடம் சிவச்சின்னம் அணியாதிருக்குமாறு கேட்டுக்கொண்டான்! அப்போது தான் ஏனாதியாரை வம்புக்கிழுத்து, போருக்கழைத்து தன் வஞ்சத்தை தீர்த்துக்கொள்ள முடியும் என திடமாய் நம்பினான்.

அந்த நாளும் வந்தது
தன்னுடைய வீரர்களில் முரட்டுத்தனம் கொண்ட பத்துபேரை பயிற்சிகொடுத்து தயார் செய்திருந்த அதிசூரன், பந்தயக்களத்திற்கு அவர்களுடன் வந்தான்.

இப்படி ஒரு பெரும்போட்டி நடக்கவிருக்கும் அறிகுறியே தெரியாவண்ணம் அமைதிதவழும் முகத்தோடு ஒரு ஓரமாய் அமர்ந்திருந்தார் ஏனாதிநாதர்!

இந்த விஷயத்தை அறிந்திருந்த மன்னன், அரசவைப் பிரதிநிதிகளாக இருவரை அனுப்பிவைக்க அவர்கள் முன்னிலையில் தான் இந்தப் போட்டி அரங்கேறவிருந்தது.

அரசப் பிரதிநிதிகளில் ஒருவர், அனைவரும் வந்து சேர்ந்து விட்டதை உறுதிப்படுத்திக்கொண்டு ,போட்டி ஆரம்பமாகட்டும்' எனச் சொன்னதும் காவலர் மணியை அடித்து ஓசையெழுப்ப..

கையில் பிடித்த உடைவாளோடு, அமைதி பொங்கிட, புன்சிரிப்போடு களத்தின் மையத்தில் வந்து நின்றார், ஏனாதிநாதர்!

கோபப் பார்வையுடன் அவரை நோக்கிய அதிசூரன், தன் வீரர்களில் மிகவும் கொடூரரூபம் கொண்ட முதலாமவனைப் பார்த்து கண்ஜாடை காட்டிட, அவன் மதயானை ஒன்று தன் துதிக்கையில் வாளையேந்தி சுழற்றி வருவதைப் போல் வேகமாய் வந்து கொடூர சிரிப்போடு ஏனாதியரின் முன் வந்து நின்றான். ஏனாதியரோ அதே அமைதியுடன் வாளை நிலத்தில் ஊன்றியபடி நின்றார்.

அதே வேகத்தோடும் அதிசூரனால் புகட்டப்பட்டிருந்த வெறியோடும் முதலில் தாக்குதலைத் தொடுக்காமல் பலவாறாய், பலவிதமாய் வாளைச்சுழற்றி களத்தையே திகைப்பில் ஆழ்த்தினான் அவன்!

அரசு பிரதிநிதிகளும் பார்வையாளராய் இருந்த மக்களும் பொறுமை இழந்தனர். இன்னும் எவ்வளவு நேரந்தான் இப்படியே வாள்வித்தை காட்டுவான்? தாக்குதல் தொடுக்கவே மாட்டானா? அதே நேரத்தில் பொறுமை இல்லாவிட்டாலும் அமைதியாய் – திட உறுதியோடு கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார் ஏனாதியார்!

வாளை சுழற்றிக் கொண்டேயிருந்தவன், திடீரென ஆவேசம் கொண்டவனாய் ஏனாதிநாதரின் மேல் பாய்ந்து அசுரத்தனமாய் வாள்வீசி தாக்கத் தொடங்கினான். அவன் முகத்தில் வெறி இருந்தது. ஏனாதிநாதரின் முகத்தில் அதே புன்னகை மாறாதிருந்தது.

அவன் தாக்குதலிருந்து லாவகமாக ஒதுங்கினார். அவன் மேலும் ஆவேசமானான். அவனுடைய கோபம்

தலைக்கேறியது! இதனை நன்கு கவனித்த ஏனாதிநாதர், சரியான தருணத்தில், தன் வாளினை வீசினார், மின்னல் தெரித்ததுபோல் ஒளி! ஒற்றை இடியாய் ஓசை! அவனது கையில் இதுவரை இருந்த வாள், களத்திற்கு வெளியே போய் விழுந்தது.

கூட்டம் ஆர்ப்பரித்துக் கோஷமிட்டது. சண்டையிடவந்தவன் தலை குனிந்து வெளியேறினான்.

அதிசூரனின் ஆத்திரம் பன்மடங்காய்ப் பெருகியது இரண்டு வீரர்களை ஒரே நேரத்தில் ஏவிவிட்டான். இது இயற்கை தானே?.! போர்க்களம் என்றால், ஒருவரோடு ஒருவர்தான் பொருந்திட வேண்டும் என்று இல்லையே! அதனால் இருவரை அனுப்பினான்.

சிலநொடிகள் தான்! அவர்களையும் தலைகுனியச் செய்தார் ஏனாதியார்!

இப்படியே அடுத்தடுத்து இரண்டிரண்டு பேராக அதிசூரன் அனுப்ப அவர்கள் என்னதான் ஆவேசத் தாக்குதல் நடத்தினாலும் அனாயாசமாக அவர்களைத் தோல்வியுறச் செய்தார் ஏனாதிநாதர்!

இறுதியாக, இவனது ஆட்கள் இருவர் களம் காண அவர்களுக்கும் தோல்விதான் கிடைக்கும் என்பதை உணர்ந்த அதிசூரன், ஏனாதியாரை வாள் வீச்சில் வெல்லவே முடியாது என்பதை நன்கு அறிந்தான்.

ஆயிற்று! ஒன்பது பேர் களங்கண்டு முடியப்போகிறது இன்னும் ஒரே ஒரு வீரன்! அது நான் தான் என சங்கல்பம் செய்து கொண்ட அதிசூரன், மறைவாக சென்று, தன் நெற்றியில் பளிச்செனத் தெரியும்படி திருநீறை தண்ணீரில் குழைத்து நெற்றியில் பட்டை தீட்டிக் கொண்டான்.

கடைசியாக சென்ற இருவரும் தோல்வியைத் தழுவி, வெளியேறினர்..

கடைசி மணி ஒலிக்க..ஒற்றை ஆளாய் தன் நீறுபூசிய நெற்றியையும் முகத்தையும் தன் கையில் இருந்த கேடயத்தால் மறைத்தபடி அதிசூரன் களத்திற்கு வந்து, வாளை உயர்த்த புன்னகை மாறாமல் தனது வாளினை ஓங்கினார் ஏனாதியார்!

அதே நேரம் தனது முகத்தை மறைத்திருந்த கேடயத்தை எடுத்து, தன் நீறுபூசிய நெற்றி ஏனாதியாருக்குத் தெரியும்படி செய்தான் அதிசூரன்!

அவனது நெற்றியில் பளிச்சிட்ட திருநீற்றுப் பட்டையைக் கண்ட ஏனாதிநாதர், “ஓம் நமசிவாய” என்றபடி வாளை கீழே போட்டுவிட்டு இரு கைகளையும் உயர்த்தி வணங்க இதுவே தக்க தருணம் என எண்ணிய அதிசூரன், தனது வாளினை ஏனாதிநாதரின் நெஞ்சில் பாய்ச்சினான். மலர்ந்த முகத்தில் நிறைந்த பக்தியோடு ஏனாதியார் “சிவ சிவ”, என்றபடி மண்ணில் வீழ

வான்வெளியில் ரிஷபத்தின் மீது அமர்ந்தபடி காட்சியளித்த சிவபெருமான், “திருநீறணிந்தவரிடம் அன்பு காட்டிய ஏனாதிநாதரே! இக்கணம் முதல் நாயனாராய் விளங்கும் நற்பேறு பெற்றீர்!” என வாழ்த்தி மறைய ஏனாதியார், நாயன்மார்களில் ஒருவராய் வணங்கப்படுகிறார்.



ரா. பன்னீர்செல்வம்



## தீராத வினைகளைத் தீர்த்து வைக்கும்

# தில்லைக் காளி!!

தில்லை (சிதம்பரம்) என்றவுடன் எல்லோருடைய மனதிலும் நினைவுக்கு வருவது தில்லை நடராஜர் கோயில். தில்லை நடராஜர் கோயிலுக்குச் செல்பவர்கள், தனிக்கோயிலில் எழுந்தருளும் தில்லைக்காளியைத் தரிசித்துவிட்டுத்தான், நடராஜரைத் தரிசிக்கவேண்டும் என்பது ஐதீகம்!

தில்லை நடராஜர் கோயிலைக் காட்டிலும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுவது பார்வதிதேவியே காளியாக வீற்றுள்ள தில்லைக் காளி கோயில் ஆகும். தில்லை நடராஜர் கோயில் சிவபெருமாள் ஆனந்த தாண்டவம் ஆடிய திருத்தலம் என்பது மட்டுமே அனைவரும் அறிந்தது. ஆனால் அவருக்கு இணையாகச் சக்தியும் நடனமாடிய இடம் தில்லைக்காளி கோயிலைத் தரிசிப்பவருக்கு மட்டுமே தெரியும்.

இக்கோயில் கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் தில்லை நடராஜர் கோயிலிருந்து சுமார் அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

காளி உருவம் கொடியோரை வேரறுத்து நல்லோரைக் காப்பதற்கான தெய்வமாகும். “காளி” என்ற பெயரைச் சொன்ன உடனே, பயங்கரமான உருவமும், பயமும் மனதில் தோன்றும். ஆனால் காளி ஒரு அனுக்கிரக தெய்வம், துஷ்டர்களைத் தண்டிப்பதற்கும் எடுத்த அவதாரம்.

காளிதேவி சாபவிமோசனம் பெற்ற இத்தலத்தில் சாப விமோசனம் வேண்டுவோரும், எதிரிகளால் சிரமத்திற்கு உள்ளானவர்களும், தீராத வினைகளால் கஷ்டப்படுபவர்களும்
இங்கு வந்து வழிபட்டுச் செல்லலாம்.

தில்லைக் காளியம்மன் கோயிலில் ஒரு சந்நிதியில் உக்கிர காளியாக ஆயுதங்களுடன் எட்டுக் கைகளைக் கொண்ட தில்லைக் காளியாகவும், மற்றொரு சந்நிதியில் சாந்தமான நான்கு முக பிரம்ம சாமுண்டீஸ்வரி அம்மனாகவும் பார்வதி தேவி காட்சியளிக்கின்றார்.

### ஸ்தல வரலாறு:

அரக்கர்கள் தேவர்களையும், முனிவர்களையும் பலவாறாகத் துன்புறுத்தி வந்தார்கள். தேவர்களும், முனிவர்களும் பிரம்மாவிடமும், விஷ்ணுவிடமும் சென்று முறையிட்டனர். அவர்கள் இருவரும் சிவனால் தான் முடியும் என்று, ஈஸ்வரனிடம்

பார்வதியால் காளி அவதாரம் எடுத்தால்தான் அழிக்க முடியும் என்பது விதியாக இருந்தது. ஆகவே பார்வதி தேவி சிவபெருமானை விட்டுப் பிரிந்து செல்லவில்லை என்றால் உக்கிர குணத்தைக் கொண்ட காளி அவதாரத்தை எடுக்க முடியாது. மேலும் பார்வதி முன்னர் ஒரு கட்டத்தில் பெற்று இருந்த சாபத்தினால் சிவபெருமானைப் பிரிந்து சில காலம் வாழ வேண்டும். இவை அனைத்தையும் அந்த ஈசன் அறிந்து இருந்தார். ஆகவே அதற்காக அவர் ஒரு திருவிளையாடலை நடத்தத் துவங்கினார்.

ஒரு முறை கைலாயத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் பெரிய வாக்குவாதம் ஏற்படுகின்றது. அதில் யார் பெரியவர் எனத் துவங்கிய சண்டை. சக்தி இல்லையேல் சிவனும் இல்லை எனப் பார்வதி வாதாடும் நிலைக்குப் போக, சினமுற்ற சிவபெருமான், உக்கிர காளியாக உருமாறும்படி சபித்து விட்டார். உருமாறிய காளி, தன் தவற்றை உணர்ந்து சிவபெருமானிடம் மன்னிப்பும், சாபவிமோட்சனம் அருளும் படி வேண்டினார். சிவபெருமானும் தேவியை நோக்கி, "என்னுள் பாதியான உன்னைக் கொடிய அரக்கர்களை அழிக்கவே, உக்கிர காளியாக உருமாறும்படி சபித்தேன். அதற்காகவே இக்கோலம் கொண்டாய் . காளி உருவில் போரிட்டு அசுரர்களை அழிப்பாய். உன் கடமைகளை முழுவதும் நிறைவேற்றிய பிறகு, "நீ தில்லை மரங்கள் சூழ்ந்த தில்லையில் என்னை நோக்கி தவம் செய்வாயாக. தக்க தருணம் வரும்போது மீண்டும் என்னுடன் இணைவாய்" என்றுரைத்தார். காலங்கள் ஓடியது, காளி உருவில் இருந்த பார்வதி கொடிய அரக்கர்களை அனைவரையும் அழித்து வெற்றி அடைந்தார். வெற்றி கொண்டபின்னும் கோபம் அடங்காமல் வெறியாட்டம் போல ஊழித்தாண்டவம் ஆடத் துவங்கினார்.

அந்த நேரத்தில் அங்கு இருந்த வியாக்கிரபாதர் மற்றும் பதஞ்சலி முனிவர்களின் வேண்டுகோளை ஏற்று, சிவபெருமான் அவர்களுக்குத் தில்லையில் திருநடனக் காட்சி தந்தார். அதை மெச்சி அனைவரும் அமர்ந்திருந்த வேளையில், சிவபெருமானின் வருகைக்காகப் பல காலங்களாகக் காத்துக்கொண்டிருந்த உக்கிர காளிக்குச் செய்தி எட்டியது , கடும் சினம் கொண்டார். தன்னை மேலும் காக்கச் செய்து, தன் பக்தர்களுக்காக ஆனந்த தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கும் சிவபெருமானை நேரில் சென்று காண எண்ணினார், பெண்களே நடனத்தில் சிறந்தவர்கள். தன்னால் ஆடமுடியாததையா சிவபெருமான் ஆடிவிடப்போகிறார் என்று ஆவேசம் கொண்டார். ஆனந்த தாண்டவம் நடந்து கொண்டிருந்த திருத்தலத்தை அடைந்து காளி சிவனை நடனப் போட்டிக்கு அழைத்தார். சிவ சக்திக்கு இடையிலான போட்டிக்குத் திருமால் நடுவரானார். போட்டியில் யார் தோற்றாலும் அந்த ஊரின் எல்லைக்குச் சென்று விட வேண்டும் என்ற நிபந்தனையோடு சிவபெருமானும் உக்கிர காளியும் தாண்டவமாடத் துவங்கினர். இருவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவர் அல்ல. வெற்றித் தோல்வியை நிர்ணயிக்க முடியாமல் அனைவரும் திகைத்து நின்றபோது சிவபெருமான் ஊர்த்துவத் தாண்டவம் ஆடினார். அதில் அவர், தனது காலால் கீழே விழுந்த குண்டலத்தை எடுத்துக் காலை மேலே தூக்கி குண்டலத்தைத் தன் காதில் அணிந்து கொண்டார். அதே ஊர்த்துவத் தாண்டவத்தைப் பெண்ணான காளியினால் செய்ய முடியாமல் நாணம் தடுத்தது. அதனால் போட்டியில் தோற்றதாக ஒப்புக்கொண்டார். போட்டியின் நிபந்தனையின் படி ஊர் எல்லைக்குச் சென்று உக்கிரத்துடன் எல்லைக் காளியாக அமர்ந்தார். அதைக் கண்ட அனைவரும் அதிர்ந்து போனார்கள். சக்தி இல்லையேல் சிவம் இல்லை. இருவரும் இணைந்து இல்லாத பொழுது பிரபஞ்சம் எப்படி இயங்கும் எனக் கவலைப்பட, அனைத்து தேவர்களும், திருமாலும் பிரும்மாவும் ஒன்று சேர்ந்து காளியிடம் சென்று அவரைச் சாந்தமடையுமாறு வேண்டிக் கொண்டனர். அவரது கோபத்தைப் போக்கும் வகையில், பிரம்மா அவரை வேதநாயகி எனப்புகழ்ந்து பாடி, நான்கு வேதங்களைக் குறிக்கும் வகையில், நான்கு முகங்களுடன் உருக் கொள்ள வேண்டினார். அதன்படி காளி, "பிரம்ம சாமுண்டீஸ்வரி" என்ற பெயரில் பிரம்மனைப்போல் நான்கு முகத்துடன் காட்சி தந்தார். அவர் பூஜையை ஏற்றுக் கொண்ட காளி, சாந்த நாயகி ஆகி, அதே இடத்தில் இன்னொரு சன்னிதியில் சென்று அமர்ந்தார்.

ஆக அந்த ஆலயத்தில் ஒரு சந்நிதியில் உக்ரகாளி தேவியாகப் பல ஆயுதங்களையும் ஏந்திய எட்டுக் கைகளைக் கொண்ட தில்லைக்காளியாகவும், இன்னொரு சந்நிதியில் சாந்தமான நான்கு முக பிரும்ம சாமுண்டேசுவரி அம்மனாகவும் காட்சி தந்தவாறு பக்தர்களை அருள்பாலித்து வருகின்றார்

## பல்லவ மன்னர் கட்டிய தில்லைக் காளி கோயில்:

தில்லைக் காளிக் கோயில் பல்லவ மன்னர் கோப்பெருஞ்சிங்கன் தன் ஆட்சியை நிறுவுவதில் ஏற்பட்ட இடையூறுகளைக் களைந்து வெற்றியருளவேண்டும் என்று காளிதேவியை வேண்டினான். அதைத் தில்லைக் காளியம்மன்



நிறைவேற்றிக்கொடுத்ததனால் தில்லைக் காளிக்கும், பிரம்ம சாமுண்டீஸ்வரிக்கும் கிபி 1229 மற்றும் 1278-க்கு இடைப்பட்ட காலத்தில் கோயில் கட்டியதாக என்று அங்குள்ள கல்வெட்டில் உள்ளது. மற்றும் ஜடாவர்மன் சுந்தர பாண்டிய மன்னரால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது என்றும், இத்திருக்கோயிலின் வருமானத்தை நிதி நிர்வாகத்திற்கும், ஊர் மக்கள் தேவைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் திருக்கோயிலின் கல்வெட்டில் உள்ளது.

## ஸ்தல அமைப்பு:

மேற்கு நோக்கிய திருக்கோயிலுக்கு மூன்று நிலை ராஜகோபுரம் கோபுரத்திற்கு முன்னால் சிவப்பிரியை தீர்த்தம் உள்ளது. இந்தக் கோயிலுக்கான தீர்த்தமாகவும், நடராஜ பெருமானின் பத்து தீர்த்தங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. கோயில் உள்ளே நுழைந்ததும் வலது பக்கத்தில் ஆனந்த நர்த்தனமாடும் விநாயகரும், இடதுபுறத்தில் வள்ளி-தெய்வானை சமேத சுப்பிரமணிய ஸ்வாமி கிழக்கு திசையை நோக்கி அருள்பாலிக்கின்றனர். மகாமண்டபத்தைத் தாண்டி பிரகார வாசலில் துர்கா, ஜெயதுர்கா என்னும் துவார சக்திகள் உள்ளனர்.

இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் அம்மன் காளி பிரம்மசாமுண்டேஸ்வரி என்ற பெயரால் நான்கு முகங்களும் நான்கு திருக்கரங்களும் கொண்டு சாந்த சொரூபியாக மேற்கு முகம் நோக்கி அருள்பாலிக்கிறார். வலது மேல் கரத்தில் ருத்ராட்ச மாலையும், கீழ் கரத்தில் கமலகிண்ணியும், இடது மேல் கரத்தில் சூலமும், கீழ் கரத்தில் அமலோற்பவமும் தாங்கி அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கிறாள். இந்த அன்னை 'நான்முகி' தேவி என்றும் குறிப்பிடப்படுகிறார். தொடர்ந்து அர்த்தமண்டபத்தில் ஆலயத்தின் கிழக்கு நோக்கிய சந்நிதியில் எட்டு கரங்களில் ஆயுதங்களைக் கொண்ட தில்லைக் காளியாக அருள் பாலிக்கிறார். தில்லைக் காளியம்மனுக்குத் தினமும் நல்லெண்ணெய் அபிஷேகம் மட்டுமே நடைபெறுகின்றது. உடம்பு முழுவதும் மஞ்சளினால் ஆன குங்குமம் பூசப்படுகின்றது.

(இதனைக் காப்பிடுதல் என்று கூறுகிறார்கள்) வெள்ளைப் புடவையைச் சாத்துகிறார்கள். கண்கள் மட்டும் ஜொலிக்கும் வகையில் காட்சியளிக்கிறார். இந்த சந்நிதியில் தில்லைக் காளியைத் தரிசிப்பவர்கள் கண்டிப்பாக அவர் உக்கிரமான கண்களை உற்று நோக்கி அவளை வேண்டிக் கொண்டால்தான் பலன் உண்டு என்பது ஐதீகம். காளி சந்நிதிக்கு பக்கத்திலேயே அவரை ஆராதித்து தீபம் ஏற்றி வேண்டிக் கொள்ள விளக்கு பீடமும் அமைக்கப்பட்டுள்ளது. தில்லைக்காளியின் சந்நிதிக்கு அருகில், அவரது உற்சவமூர்த்தி சந்நிதி மற்றும் அகோர வீரபத்திரர் சந்நிதி காணப்படுகின்றன. வடக்கு பிரகாரத்தில் துர்க்கை, சண்டிகேஸ்வரர், பைரவர் அருள்கின்றனர். காளி சந்நிதிக்கு பக்கத்தில் சுமார் ஐந்து அடி உயரமும் நான்கு அல்லது ஐந்து அடி சுற்றளவும் கொண்ட மிகப் பெரிய நாகதேவர் சிலை உள்ளது. காளியை வணங்கிய பின் அவரையும் வணங்க வேண்டும். அதன் பக்கத்திலேயே போர் வீரர்கள் தமது தலைகளை வெட்டிக் கொண்டு பலி தந்த காட்சியைக் காணலாம். கருவறை பிரகாரத்தில், விநாயகப்பெருமான் ஏழு திருக்கரங்களுடன் கூத்தாடும் கோலத்தில் காட்சி தருகிறார். மற்றும் நின்ற கோலத்தில் "வீணை வித்யாம்பிகை" என்ற பெயரில் சரஸ்வதியும், தட்சிணாமூர்த்தி பெண் உருவத்தில் "கடம்பவன தக்ஷண ரூபிணி" என்ற பெயரிலும் அருளுகிறார்கள். கல்வியில் சிறந்து விளங்க வியாழக்கிழமைகளில் இவர்களுக்கு விளக்கேற்றி வழிபாடு செய்கிறார்கள். தட்சிணாமூர்த்தியைப் பெண் வடிவில் இங்கு மட்டுமே தரிசிக்க முடியும்.

## மகம் நட்சத்திர அதிதேவதை:

தில்லைக் காளி மகம் நட்சத்திரத்தின் அதிதேவதை என்பதால், அந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வேண்டுதலை இத்தலத்தில் முறையிட்டால் விரைவில் காரியம் கைகூடும். தோஷங்கள் நீங்க,

குடும்பத்தில் நிலவும் கருத்துவேறுபாடுகள் அகலக் காளிக்கு அபிஷேகம் செய்து குங்கும அர்ச்சனை செய்து வழிபடலாம்.

## விசுவாமித்திர மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட காளி:

இந்தக் கோயிலில் உள்ள காளி சிலை விசுவாமித்திர மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தனது யாகத்திற்குத் தடையாய் இருந்த தாடகை என்னும் அரக்கியைக் கொன்ற காரணத்தினால் இராமர், இலட்சுமணர்களுக்கு ஏற்பட்ட தோஷத்தைப் போக்க யாகம் செய்ய விரும்பிய விசுவாமித்திரர், தில்லை வனக்காடாக இருந்த இப்பகுதிக்கு இராமர், இலட்சுமணர்களுடன் வந்தார். பின்னர் இங்கு காளிதேவியைப் பிரதிஷ்டை செய்து யாகத்தை நடத்தியதாக ஸ்தல வரலாறு கூறுகின்றது.

'உத்தர பிரத்யங்கரகாளி' (வடபத்ரகாளி)

ஹிரண்யகசிபுவை வதைத்த பிறகும், நரசிம்மரின் உக்கிரம் தணியவில்லை. காடு மேடுகளில் சுற்றித் திரிந்த அவரை சாந்தப்படுத்த வேண்டியது அவசியமானது. நரசிம்மரின் உக்கிரத்தால், எவராலும் அவரை அணுக இயலவில்லை. அனைவரும் சிவபெருமானைத் துதித்தனர். சிவபெருமானும் நரசிம்மரின் உக்கிரத்திற்கு இணையாக சரபேஸ்வர் அவதாரம் எடுத்து, எல்லை காளியிடம் இருந்து உக்கிரத்தைப் பெற்று நரசிம்மரைச் சாந்தப்படுத்தினார் என புராணங்கள் கூறுகின்றன. இதனால் தில்லைக்காளிக்கு 'உத்தர பிரத்யங்கரகாளி' (வடபத்ரகாளி) என்ற பெயரும் ஏற்பட்டது.

## பாஸ்கர க்ஷேத்திரம், சந்திர க்ஷேத்திரம்:

பொதுவாகச் சூரியன் வழிபடும் சிவாலயங்களே உண்டு, இவ்வாலயங்களுக்கு" பாஸ்கர க்ஷேத்திரம் "என்று பெயர், அம்மன் திருக்கோயில்களில் பாஸ்கர க்ஷேத்திரம், அதாவது சூரிய தேவன் வழிபடும் திருத்தலம் என்பது மிக அரிது.

சந்திர க்ஷேத்திரம் அதாவது சந்திர தேவன் வழிபடும் திருத்தலம். இது அரிதிலும் அரிது. அரிதிலும் அரிதாகச் சூரியனும் சந்திரனும் வழிபடும் ஒரே ஸ்தலம் தில்லைக் காளியம்மன் திருக்கோயில் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் மாசி பௌர்ணமி திதியின் போது காலை 6 மணிக்குச் சந்திர கதிர்கள் அம்மன் திருமேனியில் படர்கிறது பௌர்ணமியின் இரண்டு நாட்களுக்குப்பிறகு திருதியை திதியில் மாலை 6 மணி முதல் 6.15 மணிக்குள் சூரியனும் தன் பொன்னொளியை பரப்பி அம்பிகையைத் தரிசிக்கும் அரிய காட்சி காணக் கிடைக்காத ஒன்றாகும்.

## ஸ்தல விருட்சம் :

இத்திருக்கோயிலின் ஸ்தல விருட்சம் தில்லை மரம்

## திருவிழாக்கள்:

இக்கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் பத்து நாட்கள் பிரம்மோற்சவம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. ஆடி மாதம் முழுவதும் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் விசேஷ வழிபாடுகளும் நடைபெறுகின்றன. ஆடியில் கொள்ளிடம் ஆற்றிலும், மாசியில் கடலிலும் தீர்த்தவாரி, புரட்டாசி-ஐப்பசியில் வரும் நவராத்திரி ஆகியவை முக்கிய திருவிழாக்களாகும்.

## வழிபாட்டுப் பலன்கள்:

ஆடி மாதத்தின் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள், அமாவாசை மற்றும் பௌர்ணமி என ஆடி மாதம் முழுவதும் எந்த நாளிலேனும் இங்கு வந்து தில்லைக்காளியம்மனுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து, வெள்ளை நிற வஸ்திரம் சார்த்தி, குங்கும அர்ச்சனை செய்து, மாவிளக்கேற்றி வழிபட்டால், தீராத நோயும் தீரும். திருமணத் தடை விலகும், தொட்டில் கட்டிப் பிரார்த்தித்தால் பிள்ளை வரமும் கிடைக்கும் மற்றும் இத்தலத்திற்கு வந்து வழிபட்டால் செய்வினை, பில்லி சூனியத்தால் அவதிப்படுபவர்கள் அதிலிருந்து விடுபடுவார்கள், கடன் தொல்லையிலிருந்து மீள்வார்கள், எதிரிகள் தரும் இன்னல்களிலிருந்து விடுபட வழி தெரியாமல் தவிப்பவர்களுக்கு விடுதலை கிடைக்கும் என்பது ஐதீகம்

மனக் குழப்பம், தேவையற்ற பயம், ஆகிய



பிரச்சனை உள்ள பக்தர்கள் இந்தக் கோயிலுக்கு வந்து தில்லைக் காளியம்மனைப் பூஜித்து வணங்கினால் அனைத்து பிரச்சனைகளும் விலகி அவர்கள் வாழ்வில் மகிழ்சியும், வளமும் பெருகும். தீராத வினைகள் அனைத்தும் விலகி நற்பலன்கள் உண்டாகும்.

## கோயில் திறந்திருக்கும் நேரம்:

கோயில் காலை 6.30.மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

## கோயிலுக்குச் செல்லும் வழி:

சிதம்பரம் பேருந்து நிலையத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவிலும், ஸ்ரீநடராஜர் கோயிலில் இருந்து 1 கி.மீ. தொலைவிலும் உள்ளது

இரயில் மார்க்கமாக: சென்னையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் தடத்தில் சிதம்பரம் உள்ளது.

சாலை மார்க்கமாக: சென்னையிலிருந்து 245 கி.மீ. தூரத்திலுள்ளது சிதம்பரம். பேருந்து அல்லது வாகனத்தின் மூலம் 4 முதல் 5 மணி நேரம் பயணம் செய்து இத்திருத்தலத்தை அடையலாம்.

சிதம்பரத்திற்கு மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் சாலை, இரயில் போக்குவரத்து இணைக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீ காளி மூல மந்திரம்:

க்ரீம் க்ரீம் க்ரீம் ஹூம் ஹூம் ஹ்ரீம் ஹ்ரீம் தக்ஷிணே காளிகே
க்ரீம் க்ரீம் க்ரீம் ஹூம் ஹூம் ஹ்ரீம் ஹ்ரீம் ஸ்வாஹா

## ஸ்ரீ காளி காயத்ரி மந்திரம்:


ஓம் காளிகாயை ச வித்மஹே!!
ஸ்மசான வாசின்யை தீமஹி!!
தன்னோ கோரா: ப்ரசோதயாத்!

ஓம் சக்தி..!! பராசக்தி…!!!



திருவாரூர் சு.சேகர்

# காவியத்தில் ஓர் இலக்கண ஓவியம்!





சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்

கவிதைகளின் கவின்மிகு அணிவகுப்பே காவியம். நீண்ட நெடிய செய்யுள்களை தொடர்நிலைச் செய்யுள்கள் என்பர். காவியம் என்றும் காப்பியம் என்றும் அழைப்பர். கவிச்சக்ரவர்த்தியின் கிராம காவியமும், வில்லிபுத்தூராரின் பாரதமும் இன்றளவும் வியக்க வைக்கின்றன.

கம்பனின் கவிச்சுவை காலத்தை வெல்லக்கூடியவை. வில்லிபுத்தூராரும் சளைத்தவரா என்ன? புலமையில் இருவருமே வலிமை கொண்ட கவிவாணர்கள். இலக்கிய இன்பம் தருவது கம்பனுக்கோ கைவந்த கலை. இலக்கண இன்பம் தருவது வில்லிபுத்தூராருக்கு கை வந்த கலை என்பதை சான்றுடன் காண்போம்.

இலக்கண இன்பத்தை இனி நுகர்வோம்...
இலக்கணம் என்றாலே சற்று தள்ளிப் போகும் ஆட்கள் கூட வில்லிபுத்தாராரின் கவியாற்றலை காண நேர்ந்தால் ஆர்வம் மிக கொள்வார்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை.

வில்லிபுத்தாரார் எழுதிய பாரதத்தில் மகாபாரத போர் நடைபெறுகிற போர்க்களத்தில் கர்ணன், அர்சுனனின் கூர்மையான அம்புகளால் துளைக்கப்பட்டு விழுந்து கிடக்கின்றான்.தேர்ச் சக்கரத்தில் சாய்ந்தபடி ஓராயிரம் அம்புகள் ஒருசேர கர்ணனின் உடலை துளைத்தெடுத்த போதும் அவன் உயிர் அவனைவிட்டு அகலவில்லை.


ஏன் அவன் உயிர் போகவில்லை என்பதை கண்ணன் ஞான திருஷ்டி மூலம் பார்க்கின்றார். கர்ணன் செய்த தான தர்மங்கள் அவன் உயிரை காத்துக்கொண்டு இருக்கின்றன. அவன் முன்னோர்கள் செய்த புண்ணியமும், அடுத்த பிறவிக்காக கர்ணன் செய்த மகா புண்ணியங்களும் கர்ணனின் உயிரை காப்பாற்றுகின்றன.

இதை உணர்ந்த கண்ணன், வயோதிக அந்தணராக கர்ணனிடம் யாசகம் கேட்டு நிற்கிறார். “கர்ணா இந்த முதிய ஏழை எளிய பிராமணனுக்கு அருள்கூர்ந்து உதவ வேண்டும்” என்று பணிவுடன் கையேந்தி நிற்கின்றான்.
அந்த ஏழை அந்தணரை பார்த்த கர்ணன் நான் நல்ல நிலையில் அரண்மனையில் இருந்த போது வந்திருந்தால் நீங்கள் கேட்காமலேயே அள்ளி அள்ளி கொடுத்திருப்பேனே. குற்றுயிரும் குலை உயிருமாய் கிடக்கும்போது வந்துள்ளாரே, அவர் கேட்பதை இல்லை என்று கூறிவிட்டால் அவர் கேட்பதை கொடுக்க முடியாமல் போனால் கேட்டு நின்றவருக்கு இல்லை என்று சொன்னவன் கர்ணன்

என்ற மிகப்பெரிய பழி என்னை வந்தடையுமே என்று மனம் கலங்கினான் கர்ணன்.

“ஐயா! இப்படிப்பட்ட நிலையில் என்னால் இயன்றதை; எதை கொடுக்க முடியுமோ அதை கேளுங்கள்” என்றான் கர்ணன்.
“கர்ணா! கலங்காதே! உன்னால் இப்போதும் கொடுக்கக் கூடியதையே நான் கேட்க வந்துள்ளேன்” என்றான் வயோதிகன். “கேளுங்கள் தருகிறேன்” என்றான் கர்ணன்.
“புண்ணியம் செய்யாமல் சொர்க்கத்துக்கு செல்ல முடியாது என்பார்கள். எனக்கு உன்னிடம் உள்ள புண்ணியங்களை தானமாக தாரை வார்த்து கொடு” என்றான் வயோதிகன்.
கர்ணன் அக மகிழ்ந்து உடனே தன் மார்பில் தைத்திருந்த ஓர் அம்பை எடுத்து அதில் இருந்து பெருகிய குருதியில் “செய் புண்ணியம் தந்தனம்” என்று கூறி, குருதி தாரை வார்த்து கொடுத்தான்.
உலகையே படைத்து காத்து அருள்பாலிக்கும் கண்ணனின் திருக்கரங்களோ யாசகம் பெற கர்ணனின் கரங்களோ கொடுக்கும் இடத்தில் மேலே நிற்கிறது.

கண்ணன், இப்படியும் ஓர் வள்ளலா!? என்று கர்ணனை எண்ணி மனம் நெகிழ்ந்து, விழிகளில் விழிநீர் பெருக, “கர்ணா! என்னை யாரென்று இன்னும் தெரியவில்லையா? கண்ணன் நான்!” என்று தன் விசுவரூபத்தை காட்டி, “கர்ணா உனக்கு என்ன வரம் வேண்டும்?” என்று ஸ்ரீகிருஷ்ணர் கேட்க,
கர்ணன் போரில் வாகை சூட வேண்டும் என்று கேட்கவில்லை. உயிர் போகாமல் இவ்வுலகில் நீண்டு



நிலைத்து வாழவேண்டும் என்று கேட்க வில்லை.
“எத்தனை பிறவிகள் எடுத்தாலும் அத்தனை பிறவிகளிலும் எனக்கு இல்லை என்று சொல்லாத வள்ளல் மனத்தை தா” என்று கர்ணன் வரமாக கேட்கின்றான்.

கண்ணன் கர்ணனின் அமுதமொழிகளை கேட்டு ஆனந்த கண்ணீர் வடித்தான். இது பாரத நிகழ்வு – இதில் என்ன இலக்கண நயம் என்று காண்போம்.
கர்ணன் தன்னிடம் இருந்த புண்ணியம் அனைத்தும் தந்திருக்கிறானே, அப்படியானால் அவனுக்கு முன்பிருந்ததை விட ஆயிரம் மடங்கு புண்ணியம் அல்லவா அவனிடம் திரும்பவும் கிடைத்திருக்கும். அவை அவனை காப்பாற்றி இருக்குமே. அப்படி இருக்க அவன் எவ்வாறு இறக்க முடியும்? என்ற கேள்வி எழுமே! என்பதை உணர்ந்த வில்லிபுத்தூரார் பாடலில், “செய் புண்ணியம்“ என்ற சொல்லை பயன்படுத்துகிறார். கர்ணன் கூறுவதாக அமைத்துள்ளார். அதாவது செய் புண்ணியம் என்பது வினைத்தொகை அச்சொல் ஒரு காலத்தை மட்டும் காட்டாது. இறந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்ற முக்காலத்தையும் காட்டும் பொதுவான சொல் ஆகும்.

கர்ணனின் முன்னோர்கள் அவனுக்கு ஈட்டித் தந்த புண்ணியம், கர்ணன் ஈட்டிய புண்ணியம், இந்த புண்ணியங்களை வழங்கியதால் எதிர்காலத்தில் கிடைக்கப்போகும் புண்ணியம் அனைத்தையும் குறிப்பிடுகிற சொல்லே செய் புண்ணியம் என்ற வினைத்தொகையை பயன்படுத்துகிறார். செய் புண்ணியம் தந்தனம் என்று ஒருவேளை சொல்லாமல் கர்ணன் இருந்திருந்தால் அவன் உயிர் போயிருக்காது. தர்மம் அவன் தலையை காத்திருக்கும்.

வில்லிபுத்தூராரின் இலக்கண நுண்மாண் நுழைபுலமும் இலக்கண ஆளுமையும் ஈண்டு நோக்கத்தக்கது. போற்றத்தக்கது.
ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும். அர்ஜுனனை பார்த்து – காண்டீபத்தை எடு. அம்பை விடு என்றார். அம்பை விட்டான் அர்ஜுனன். கர்ணன் உயிர் பிரிந்தது. அய்யோ கண்ணா! கர்ணனை நான் கொன்று விட்டேனே என்று அர்ஜுனன் புலம்ப – கர்ணனை கொன்றது பலர் – செத்த பாம்பை அடிப்பது போல – நீ கொன்றாய் என மார்தட்டிக் கொள்கிறாய் “செய் புண்ணியம்” என்ற வினைத்தொகையே அவனுக்கு வினையாக முடிந்தது என்பதை நம்மாலும் உணர முடிகிறது என்பதே நிதர்சனமான உண்மை.

# பெண்களின் அழகு கூட
# லால் கிதாப் பரிகாரங்கள்



**திரு. செந்தில் நாதன்**
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

உலகில் தன்னை அழகாகவும், வயது குறைவாகவும், வனப்பை கூட்டிக்காட்டவும் விரும்பாத பெண்கள் இருக்கவே மாட்டார்கள். நவீன காலங்களில் பெண்களின் அழகுணர்ச்சி என்பது அதிகரித்து வருகிறது. அதற்கு ஏற்றார் போல் நவீன அழகு சாதன பொருட்களும் சந்தைப்படுத்தப்பட்டு விற்பனையும் அதிகரித்து காணப்படுகிறது. தனது வருவாயில் குறிப்பிட்ட பகுதியை தன்னை அழகு படுத்திக் கொள்ள அழகு நிலையங்களில் செலவிடும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவ்வாறு செலவிடாமல் தன்னை அழகுபடுத்திக் கொள்ள லால் கிதாப் என்னும் சிகப்பு புத்தகம் பயனுள்ள பரிகாரங்களை கொடுத்துள்ளது. அவை என்ன என்று கீழே பார்ப்போம்.

1. இளவயதுள்ள கன்னிப்பெண்களுக்கு இனிப்பு பதார்த்தங்களை தானமாக கொடுப்பதினால் தோலின் பளபளப்பு கூடும்.
2. வெள்ளிக் கிழமைகளில் எதாவது அம்மன் கோவில்களில் சுத்தமான பசு நெய்யை தானமாக கொடுத்துவர வசீகரம் கூடும்.
3. வெள்ளை நிறமுள்ள மல்லிகை அல்லது முல்லை மலர்களை ஓடும் ஆற்றில் விட்டு வர முகப்பொழிவு கூடும்.
4. வெள்ளியில் ஆன ஆபரணங்களை தினமும் உபயோகித்து வர அழகு கூடும்.
5. எதாவது ஒரு வாசனை திரவியங்களை அனுதினமும் உபயோகித்து வர வனப்பு அதிகரித்து காணப்படும்.
6. லால் கிதாப் புத்தகத்தின் படி அழகு என்பது சுக்கிரன் மற்றும் வெண்மை சம்மந்தப்பட்டது என்பதால் வெள்ளை நிற ஆபரணம் மற்றும் ஆடைகளை வசதி இல்லாத இளம் பெண்களுக்கு கொடுத்து வர அழகும் வசீகரமும் கூடும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள மிக எளிமையான லால் கிதாப் பரிகாரங்களை பெண்கள் தொடர்ந்து செய்து வருவார்களே யானால் தன்னுடைய அழகையும் வசீகரத்தையும் அதிகரித்து மற்றவர்களால் பாராட்டப்படுவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

# ஆன்மீக குட்டிக்கதைகள்



## இன்னல்கள் தீர்க்கும் இஞ்சிமேடு திருத்தலம்.....!!!

தெண்ணீர் வயிற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து என்று ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் கொண்டாடப்படும் தொண்டைநாடு பல்வளம் பெருகும் பொன்னாடாக விளங்கியதோடு கலை, கலாசாரம், பண்பாடு, அறம் மற்றும் நன்னெறிகளைப் போற்றி வளர்த்துப் புகழ் பெற்று விளங்கிய திருநாடாகும். இத்தகைய பெருமைகள் நிறைந்த தொண்டை நாட்டில் பாஹுநதி என்று போற்றி வணங்கப்படும் செய்யாற்றின் கரையில் யக்ஞ வேதிகை (யாகமேடு) என்று பூஜிக்கப்படும் மிகப் புராதனமான திருத்தலம் இஞ்சிமேடு திருத்தலமாகும். இத்திருத்தலத்தில் கேட்கும் வரங்களைக் கேட்டபடி அருளும் திருக்கோலத்தில் ஸ்ரீபெருந்தேவித் தாயார் சமேதராக ஸ்ரீவரதராஜப் பெருமாள் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். வேதகாலம்தொட்டு எண்ணற்ற பல மகரிஷிகளும், மகான்களும், யக்ஞஸ்வரூபனான எம்பெருமானை யாக, யக்ஞங்களினால் ஆராதனை செய்து சதாசர்வகாலமும் வேத முழக்கங்கள் ஒலித்துக்கொண்டிருந்த மிகப் புனிதமான திருத்தலம் இத்திருத்தலம் என்பதால் யக்ஞவேதிகை என்று பூஜிக்கப்பட்டு தற்போது இஞ்சிமேடு என்று வணங்கப்பட்டு வருகின்றது.

மாதவத்தால் மண்ணுலகில் அவதரிக்கும் பேறு பெற்று நித்தம் நித்தம் ஸ்ரீமந் நாராயணனின் புகழ் பாடிய அருளாளர்கள் பலர் அவதரித்த இப்புண்ணிய பூமியில் வைணவ சித்தாந்தக் கோட்பாடுகளை இப்பூவுலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஸ்ரீமத் அஹோபில மடத்தின் 34-ஆவது பட்டம் ஸ்ரீசடகோப ராமானுஜ யதீந்த்ர மஹாதேசிகன் மற்றும் 42-ஆவது பட்டம் ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்ற இரு மகான்களும் அவதரித்ததால் மேலும் புனிதமடைந்த புண்ணிய பூமி இத்திருத்தலமாகும்.

ஸ்ரீபரத்வாஜ முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ராமபிரான்: அழகிய நிலவு போன்ற தன் திருமுக மண்டலத்தால் எதிரிகளையும் ஈர்க்கக் கூடிய பேராற்றல் படைத்த ரகுகுல திலகன் ஸ்ரீராமபிரான் இஞ்சிமேடு திருத்தலத்தில் ஸ்ரீசீதா லட்சுமண சமேதராக தன்னை நாடிவந்து தரிசிக்கும் பக்தர்களுக்கு அருளை வாரிவழங்கி வரப்பிரசாதியாக சேவை சாதிக்கின்றார். இந்த இராமபிரானின் மூல விக்கிரகம் ஸ்ரீபரத்வாஜ முனிவரால் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்யப்பட்டது என்பது மேலும் சிறப்பாகும். ரகுவம்ச மன்னர்கள் தங்களின் குலதெய்வமான ஸ்ரீரங்கநாதப் பெருமானை யாகங்கள் மற்றும் வேள்விகளால் ஆராதித்தது போன்று இங்கு

எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமபிரானும் ஆராதிக்கப்பட்டதாக மிகப் பழமையான ஓலைச் சுவடிகளிலிருந்து அறிய முடிகின்றது.
ஸ்ரீராமபிரான் தன் திருக்கரத்தில் ஏந்தியிருக்கும் தனுசின் (வில்) மேல்புறத்தில் நரசிம்ம மூர்த்தி எழுந்தருளியிருப்பது வேறு எங்கும் காணக் கிடைக்காத அரிய தரிசனமாகும். ஸ்ரீராமபிரானின் திருச்சந்நிதியில் அஞ்சனை மைந்தன் ஸ்ரீ அனுமன் அஞ்சலி அஸ்தத்தில் ஸ்ரீராமனைத் தொழுதவாறு எழுந்தருளியிருக்கின்றார்.

திருத்தலம் செல்லும் வழி: வந்தவாசியிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில் உள்ள சின்ன கொழப்பலூர் கூட்டுச்சாலையில் இறங்கி இஞ்சிமேடு திருத்தலம் செல்லலாம். வந்தவாசி - ஆரணி செல்லும் சாலையில் உள்ள பெரணமல்லூர் வழியாகவும் இஞ்சிமேடு தலத்திற்கு செல்லலாம்.



## மகாபாரதம் இதைவிட சுருக்கமாக சொல்ல முடியுமா?

# இது, என் மனதை தொட்ட ஒரு பதிவு

பாரதப் போர் – உண்மையில் யாருக்கிடையே நடைபெற்றது?

பதினெட்டு நாட்கள் நடைபெற்ற பாரதப் போரில் மக்கள் தொகையில் கிட்டதட்ட 80கிமு ஆண்கள் இறந்துவிட்டனர் என்பதை அறிந்த வருண் என்கிற மாணவன், பாரதப் போர் நடைபெற்றதாக கூறப்படும் குருஷேத்ரத்திற்கு நேரில் சென்று பார்த்தான்.

'கௌரவர்களும் பாண்டவர்களும் போரிட்ட ரத்த பூமியின் மீது தான் நாம் நிற்கிறோமா?

கிருஷ்ண பரமாத்மா இங்கே தான் பார்த்தனுக்கு பார்த்தசாரதியாக தேர் ஓட்டினாரா?

பல்வேறு சந்தேகங்கள் அவனுக்குள் எழுந்தன.

அந்த மண்ணையே வெறிச்சென்று பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில்,

“உன்னால் ஒரு போதும் உண்மையை கண்டுபிடிக்க முடியாது மகனே” என்கிற குரல் கேட்டது. குரல் வந்த திக்கை ஆச்சரியத்துடன் நோக்கினான்.

புழுதி பறக்கும் மண்ணுக்கிடையே
காவி உடை அணிந்த ஒரு உருவம் தென்பட்டது.

“குருக்ஷேத்திர போரை பற்றி தெரிந்துகொள்ள நீ இங்கே வந்திருக்கிறாய் என்று தெரியும். ஆனால் அந்த போர் உண்மையில் யார் யாருக்கிடையே எதன் பொருட்டு நடைபெற்றது என்று தெரிந்து கொள்ளாமல் நீ அந்த போரை அறிந்து கொள்ளமுடியாது.”

“நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?” – சற்றே குழப்பத்துடன் கேட்டான் வருண்.

“மகாபாரதம் ஒரு இதிகாசம். ஒரு மாபெரும் காவியம். அது உண்மை என்பதை விட அது ஒரு தத்துவம்.

அதை தான் அனைவரும் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும்

அந்த காவியுடை பெரியவர் வருணைப் பார்த்து மர்மப் புன்னகை ஒன்றை உதிர்த்தார்.

“அது என்ன தத்துவம் ஐயா?

எனக்கு கொஞ்சம் விளக்குங்களேன்...”

“நிச்சயம்! அதற்காகத் தானே வந்திருக்கிறேன்”

“பஞ்சபாண்டவர்கள் வேறு யாருமல்ல. கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய நம் ஐம்புலன்கள் தான்!!!!

கௌரவர்கள் யார் தெரியுமா?”

“இந்த ஐந்துபுலன்களை தினந்தோறும் தாக்கி தங்களுக்கு இரையாக்க முயற்சிக்கும் தீமைகள் தான் கௌரவர்கள்!!!”

“எண்ணிக்கையில் பெரிதான இவர்களை எதிர்த்து உன்னால் (ஐம்புலன்களால்) போரிட முடியுமா?

“முடியும்...! எப்போது தெரியுமா?”

வருண் மலங்க மலங்க விழித்தான்.

“கிருஷ்ண பரமாத்மா உன் தேரை செலுத்துவதன் மூலம்.”

வருண் சற்று பெருமூச்சு விட்டான்.

பெரியவர் தொடர்ந்தார்.

“கிருஷ்ணர் தான் உன் மனசாட்சி. உன் ஆன்மா. உன் வழிகாட்டி. அவர் பொறுப்பில் உன் வாழ்க்கையை நீ ஒப்படைத்தால் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை.”

வருண் பெரியவர் சொல்வதை கேட்டு மெய்மறந்து போனான். ஆனால் வேறொரு சந்தேகம் அவனுக்கு தோன்றியது.

“கௌரவர்கள் தீயவர்கள் என்றால் அப்போது பெரியவர்களான துரோணாச்சாரியாரும் பீஷ்மரும் அவர்கள் பக்கம் நின்று அவர்களுக்காக போரிடுகிறார்கள்?”

“வேறொன்றுமில்லை.... நீ வளர வளர உனக்கு மூத்தவர்கள் குறித்த உன் கண்ணோட்டம் மாறுகிறது.

நீ வளரும் காலகட்டங்களில் யாரெல்லாம் குற்றமற்றவர்கள், அப்பழுக்கற்றவர்கள் என்று எண்ணினாயோ அவர்கள் உண்மையில் அப்படி கிடையாது.

அவர்களிடமும் தவறுகள் உண்டு என்று உணர்கிறாய்.

எனவே அவர்கள் உனது நன்மைக்காக இருக்கிறார்களா, அவர்கள் உனக்கு தேவையா இல்லையா என்று நீ தான் தீர்மானிக்க வேண்டும்.”

“மேலும் அவர்கள் உன் நன்மைக்காக போராடவேண்டும் என்று நீ ஒரு கட்டத்தில் விரும்புவாய்.

இது தான் வாழ்க்கையின் கடினமான பகுதி.

கீதையின் பாடமும் இது தான்.”

வருண் உடனே மண்டியிட்டு தரையில் அமர்ந்தான்.

களைப்பினால் அல்ல. கீதை உணர்த்தும் பாடத்தை ஓரளவு புரிந்ததும் அதன் மீது ஏற்பட்ட பிரமிப்பினால்.

“அப்போது கர்ணன்?” அவன் கேள்வி தொடர்ந்தது.

“விஷயத்துக்கு வந்துவிட்டாய் மகனே.

உன் ஐம்புலன்களின் சகோதரன் அவன். அவன் பெயர் தான் ஆசை. மோகம். அவன் உன் இந்திரியங்களின் ஒரு பகுதி. உன்னுடன் பிறந்தவன்.

ஆனால், தீமைகளின் பக்கம் தான் எப்போதும் நிற்பான். தான் செய்வது தவறு என்று அவனுக்கு தெரியும். ஆனாலும் ஏதேனும் சாக்குபோக்கு சொல்வான். உன் விருப்பம் போல. ஆசை போல.”

“நான் சொல்வது உண்மை தானே? தீயவற்றுக்கு துணைபோகத் தானே மனம் ஆசைப்படுகிறது…?”

வருண் “ஆம்…” என்பது போல தலையசைத்தான்.

இப்போது தரையை பார்த்தான்.

அவனுக்குள் ஓராயிரம் எண்ணங்கள். சிந்தனைகள். எல்லாவற்றையும் ஒன்றாக்கி தலைநிமிர்ந்து மேலே பார்த்தான்.

அந்த காவிப்பெரியவரை காணவில்லை.
அவர் புழுதிகள் எழுப்பிய திரையில் மறைந்துவிட்டிருந்தார்.

மிகப் பெரிய உண்மை. பிடித்தது மட்டுமல்ல
யோசிக்க வைத்ததும் கூட

**சரபேஸ்வரன்**

# அரிய ஆன்மிக தகவல்

## பரங்குன்றின் சிறப்புகள்

தமிழகத்தின் கந்தக்கடவுள் புராணரீதியில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் திருத்தலங்களை அறுபடை வீடுகள் என முருக பக்தர்கள் கொண்டாடி மகிழ்கின்றார்கள். அப்படிப்பட்ட அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் என்கிற பரங்குன்றில் பரமேஸ்வரனின் மைந்தனான அழகன் முருகன் பேரருள் புரிந்து வருவது நம் அனைவருக்கும் தெரியும்!



தெய்வத் திருமகனான முருகப் பெருமான், தெய்வயானை என்னும் தேவமங்கையை மணம்புரிந்த பெருமை இந்தத் தலத்திற்கு உண்டு. மணக்கோலம் கொண்ட முருகப் பெருமான், மகிழ்வான மனநிலையில் வீற்றிருந்து, தன்னை நாடி வருவோரின் மனக்குறையைப் போக்கி நல்வாழ்வு அருளும் தலமாக இத்தலம் சிறப்புற்று விளங்குகின்றது.

ஒரு தலைவன், தன்னுடன் இருக்கும் தொண்டர்களை நல்வழிப்படுத்தி நன்மை செய்ய வைப்பவனாக இருக்க வேண்டும் என்பது தர்மநியதி! அப்படிப்பட்ட நியதியை அழகன் முருகன் இந்த தலத்தில் வகுத்து வைத்துள்ளான் என்றே நம்ப வேண்டும்! ஆம்! தனது ஆலயத்தில் பரிவார தெய்வங்களாக சன்னதி கொண்டுள்ள சில தெய்வங்களுக்கு அபரிமிதமான சில சக்திகளைக் கொடுத்துள்ளான் என்பதே உண்மை!

பொதுவாக, சனீஸ்வர பகவான் என்றாலே பக்தியை விட பயமே மேலோங்கி நிற்கும். அந்த அளவுக்கு சனி என்றாலே சங்கடங்களைத் தருபவன் என்றே அனைவரும் நினைக்கின்றோம். ஆனால், அது உண்மையல்ல.

சனிபகவான் நீதியின் தெய்வம்; கர்ம வினைகளுக்குத் தக்கவாறு பலன்களைக் கொடுக்கும் நீதி தேவன்! எனவே, நல்ல மனம் கொண்டோர் சனிபகவானைக் கண்டோ, ஏழரைச் சனியைக் கண்டோ பயப்பட வேண்டாம். ஊழ்வினை காரணமாக ஏழரைச் சனியால் துன்பப்படுபவர்கள் பொங்குசனி எனப்படும் திருக்கொள்ளிக்காடு தலத்தில் உள்ள சனியை வணங்கிட, பொங்குசனியாக இரண்டாவது சுற்று ஏழரை ஆண்டுகள் வரும் போது இன்பங்களையும், செல்வத்தையும் வாரிவழங்குவார் என்பது பக்தர்களின் நம்பிக்கை! இதே போல...

திருப்பரங் குன்றத்தில் உள்ள குமரக்கடவுளின் ஆலயத்தில் சன்னதி கொண்டு விளங்கும் சனிபகவான், தனிப்பெரும் சக்திகளைப் பெற்றுள்ளார். எத்தலத்து சனிபகவானையும் சனிக்கிழமைகளில் வணங்குவதே சிறப்பு என்னும் வழக்கம் பக்தர்களிடையே நிலவிவருகிறது.

ஆனால், திருப்பரங்குன்றில் தனி சன்னதியில் அருள் புரியும் சனிபகவானை எந்த கிழமையாக இருந்தாலும் சென்று வழிபடலாம். ஏனென்றால், இங்குள்ள



சனிபகவான், முருகப் பெருமானின் பரிபூரண ஆசியோடு மனநிறைவும், மனமகிழ்வும் பெற்றவராக வீற்றிருக்கிறார். எனவே, தன்னிடம் குறைகளோடு வந்து வேண்டிக்கொள்ளும் பக்தர்களுக்கு தனது தீவிரமான பார்வையைக் குறைத்து அவர்களின் வாழ்க்கை வளம்பெற அருள்புரிகிறார்.

அப்படி வேண்டிக் கொள்வோரின் மனக்குறைகள் தீர்ந்துள்ளது. பிரிந்திருந்த கணவன், மனைவி ஒன்று சேரவும், நிலுவையில் உள்ள வழக்குகள் தீரவும், குடும்பப் பிரச்சினைகள் விலகிடவும், திருமணத்தடை, குழந்தையின்மை போன்ற சங்கடங்கள் சரியாகவும் இந்த சனிபகவானை 7 முதல் 9 வாரங்கள் வரை நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் அந்த 9 வாரங்களுக்குள்ளாகவே வேண்டியவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித்தரும் அருட்தெய்வமாக இங்கே சனிபகவான் விளங்குகின்றார்.

திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் தமிழ்க் கடவுளான முருகன் நியாயம் தவறாமல் தராசு நிலையில் இருப்பதால் இம்முருகனுக்கு தராசு முருகன் என்ற பெயரும் உண்டு.

இப்படிப்பட்ட முருகப்பெருமான், தன் ஆலய சனிபகவானை அருள்வழங்கும் ஆண்டவனாய் மாற்றி அருள்புரியச் செய்கிறார் என்பது உண்மைதானே!?



ரா. பன்னீர்செல்வம்



# எதை தேடுகிறோமோ அது நம்மிடமே....

எந்த தேடல்களிலும் வசந்த தேடல்களாக அமையும் பட்சத்தில் வாழ்வே சுகமாகும்! கருணையே உருவானவர் கடவுள்! எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் ஈசன். சிலைகளாக தெரிந்தாலும் தயவுடைய கருனணக் கடல்!
கடவுளின் கிருபை கிடைக்க அனைவரும் வழிபடுகின்றோம். குருவடிவாய் பிரகாசிக்கின்ற ஞான ஒளியே இறைவன். "அஞ்சாதே! அஞ்சாதே! நான் என்றும் உன்னோடு. எந்த துன்பம் வந்தாலும் என் அன்பு உன்னோடு" என்று நம் இதயக்கமலத்தில் இனிதே வீற்றபடி நமக்கு மட்டும் கேட்கும்படியாக மௌன உணர்த்தல்களை புரிபவர் சாட் சாத் கடவுள் தானே!
அன்பு தெய்வத்திடம் எதை எதையோ எதிர்பார்க்கின்றோம். அழிகின்ற இன்பம் வேண்டி அடம் பிடிக்கின்றோம். சாக்லேட்டுக்காக (இனிப்பு மிட்டாய்) அழும் குழந்தையை சமாதான படுத்தி முடிந்தால் அதட்டி அதன் உடல் நலத்தை காக்கும் பிரியமான பெற்றோரை போல இறைவனும் நமக்கு தேவயானதை தரும் தாயுமானவன் ஆயிற்றே!
கேட்காமலேயே ஞான சம்பந்த பெருமானுக்கு முத்துச்சிவிகை உள்ளிட்ட பொருள்களை தந்து மகிழ்ந்தவன் உமா மகேஸ்வரன். எந்த சூழலிலும் நம் இதயத் தாமரை மலர ஞான சூரியனே இறைவன்!
பசிக்கு உணவு தரும் படியளக்கும் பரமன். தவம் செய்பவர்கள், மகா மந்திரங்களை உச்சரிப்பவர்கள், ஆன்றோர்கள், அவர்களது பக்தியை மட்டுமே இறைவன் ஏற்பான் என்பது இல்லை. அன்புடன் அரை நொடி உள்ளம் உருக வழிபட்டாலே போதும் அக மகிழ்ந்து அருள்பாலிப்பான் ஈசன்!
மாலுமி இல்லாத கப்பலாய், புயற்காற்றில் அலைக்கழிக்கபடும் கப்பல் போல நாம் துன்ப துயாக் கடலில் தத்தளிக்கும் போது கைகொடுக்கும் கருணை தெய்வம் ஈசன்.
எப்போதும் விலகாமலும், எப்போதும் கைவிடாமலும் பரிவோடு பாதுகாக்கும் அருள் ஒளியே ஈசன்! தன்னை நம்பியவர்களை காப்பாற்றும் கடவுள் என்றும் நம்மை காப்பாற்றுவார் என்ற திடமான நம்பிக்கை நமக்கு வேண்டும்.
பகலில் நட்சத்திரங்கள் கண்களுக்கு தெரியவில்லை என்பதால் வானில் நட்சத்திரங்களே இல்லை என்று கூறி விட முடியுமா? கடவுள் கண்ணுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் இதயப்பூர்வமாக உணர முடியும்.

பாலை குடித்தவன் எப்படி சொன்னாலும் அதன் சுவையை அடுத்தவனுக்கு உணர்த்த முடியாது. அவனும் அப்பசும் பாலை குடிக்கும் போதுதான் அதன் சுவையை முழுமையாக உணர முடியும். அதுபோலதான் இறைவனின் பெருமையை அற்புதத்தை என்னதான் எடுத்து சொன்னாலும் இறைநிலையை உணரும் போதுதான் பேரானந்தம் பெற முடியும். பரமாத்மாகிய இறைவனிடம் ஜீவாத்மா தன்னிலை உணர்ந்து, ஒன்று பரம் பொருளான இறைவனிடம் மனமொன்றி முழுமையாக சரணாகதியாகிறதோ அப்போதுதான் ஜீவன் முக்தி அடைந்து விடுகிறது.
எல்லாம் சித்திக்கிறது ! மனமெல்லாம் தித்திக்கிறது! எத்திக்கும். எழுந்தருளும் இறைவன் கல்லினுள் தேரைக்கும் படியளக்கும் பரமன் நமக்கும் படியளக்காமலா போய் விடுவான் ?
எங்கும் நிறைந்துள்ள ஆத்ம ஸ்வரூபமே ஆகாச லிங்கம். பஞ்ச பூதங்களின் வடிவே அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி அன்னை உலகம்மை.

பஞ்ச புராணங்களை பாடி, பஞ்ச சிவாலயங்களை பாவித்து – பஞ்சாட்சர மகா மந்திரங்களை ஆத்மார்த்தமாக மனம், மொழி, மெய் ஒன்றுபட உச்சரித்து காதலாகி கசிந்துருகினால் கடவுளின் காட்சி கிடைக்காமலா போகும்.



சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்

# தினசரி தீர்வுகள்!

01 கோதுமை மாவுடன், கொஞ்சம் வேர்க்கடலை மாவையும் சேர்த்து பூரி, சப்பாத்தி தயார் செய்து சாப்பிடுவோர்கள்; குறிப்பாக கடினமாக உழைப்பவர்கள் உண்டால் அவர்களுக்கு களைப்பே உண்டாகாது!

02 எந்த எண்ணெயில் தயாரிக்கப்பட்டாலும் பலகார, பட்சணங்களில் காரல் வாடை வீசுவது தவிர்க்க முடியாது. அந்த பலகார டப்பாவில் கொஞ்சம் உப்பைத் துணியில் முடித்து போட்டு வைத்தால், காரல் வாடை வரவே வராது என்பது அனுபவ பாடம்!

03 பொறியல் செய்யப்படும் உருளைக்கிழங்கை, முன்பே எடுத்து அதன்மீது கொஞ்சம் பயத்தமாவை தெளித்து பொறியல் செய்தால், மொரமொரப்பான சுவையுடன் கூடிய கூடிய பொறியல் ஆவிடும்.

04 வித்தியாசமான இட்லி டிபனைப் பெற இது ஒரு வழி!
அளவோடு கூடிய கேரட், வெந்தயம், கொத்தமல்லி இவற்றை இட்லி மாவில் போட்டுவிட்டு கலந்த பிறகு பிரட் துண்டுகளை அதில் முக்கி தோசைக்கல்லில் போட்டு திருப்பி எண்ணெய் விட்டு சாப்பிட்டு பாருங்கள். அதன் சுவையே தனிதான்!

05 வைக்கப்படும் ரசம் இன்னும் ரசம் தர, சுலபமான வழி அதனை தயாரித்து அடுப்பிலிருந்து இறக்கும் முன்பாக ஒரு டீஸ்பூன் கருவேப்பிலைப் பொடி தூவி இறக்கி விட்டால் போதும். நறுமணம் வீடெங்கும் பரவி சாப்பிடும் ஆசையை தூண்டிவிடும்.

06 லட்டு தயாரிக்கையில் அதில் அளவுடன் ரோஸ் எசென்ஸை கலந்து தயாரிக்க, கூடுதலான சுவை கிடைக்கும்.

07 இட்லி பக்கோடா பற்றி கேள்வி பட்டதுண்டா? பரவாயில்லை, இப்போது தெரிந்து கொள்ளலாமே... மீந்து போன இட்லிகளை நன்றாக உதிர்த்துவிட்டு, அத்துடன் தேவையான அளவு கடலை மாவு, பெருங்காயம், வெங்காயம், உப்பு, பச்சை மிளகாய், கொத்தமல்லி, கருவேப்பிலை ஆகியவைகளை சேர்த்து அதில் தண்ணீர் விட்டு பிசைந்து விடவும்.

08 அடுத்து வாணலியில் தேவையான எண்ணெய் விட்டு மேற்கண்ட கலவை இட்லி வகையை பொரித்து எடுங்கள். ஆஹா அருமையான பக்கோடா என்று சாப்பிடுபவர்கள் ஆனந்திப்பார்கள்.

09 மொசைக் தரையில் போடப்படும் கோலம் அழியாமல் இருக்க, கோலம் போடும் போது அதில் பெவிகாலை[Fevicol] சேர்த்துக் கொள்ளலாம்.

10 ஊறுகாய் மேல் அதிக எண்ணெய் மிதக்கும் வாய்ப்பு உண்டு. அந்த எண்ணெயை எடுத்து அதனை காரக் குழம்பு தயார் செய்கையில் கலந்து பாருங்களேன்..! அடடா.. என்ன வித்தியாச சுவை என்று சாப்பிடுவோர் சொல்வார்கள்!

11 மென்மையான, அதிலும் சுவையான பூரி வேண்டுமானால், மாவை பிசையும் போதே ஒரு சிட்டிகை ஜீனி சர்க்கரையை சேர்த்து விட்டால் போதுமானது.

12 தேங்காய் மூடி காய்ந்து போய் விட்டால், உடைக்கப்பட்ட தேங்காய் வெள்ளைப்பகுதி முழுவதிலும் பாலை ஊற்றி சுமார் 10 நிமிடம் வைத்து விட்டு பயன்படுத்தினால், அது புதிய தேங்காய் போல் ஆகிவிடும்

13 கையில் மண்ணெண்ணெய் பட்டு வரும் துர்நாற்றம் விலக, எண்ணெய் பட்ட இடத்தில் சிறிது தயிரை விட்டு 2 நிமிடங்கழித்து கழுவி விடலாம்.

14 வாணலியில் சமையல் எண்ணெய் விட்டு சூடாக்குகையில் சில சமயங்களில் திடீரென புகை வரும் வாய்ப்புண்டு. எனவே அவ்வாறு நேராதிருக்க எண்ணெயில் சிறிதளவு புளி போட்டுவிட்டால் அது தவிர்க்கப்பட்டு விடும்.

15 குழம்பில் உப்புச்சுவை அதிகமாகி விட்டால் 'குழம்பு வேண்டாம்'! ஒரு உருளைக்கிழங்கை நன்கு நீர்விட்டு சுத்தம் செய்து, சின்ன சின்ன துண்டுகளாக நறுக்கி குழம்பில் போட்டு விடவும்.

16 தீபாவளி பண்டிகையில் முக்கிய அங்கம் பெறுவது தீபாவளி லேகியம். அதனை செய்யவிட்டு விட்டால் கவலை ஏன்? ஓமம், சுக்கு, பெருங்காயம், மிளகு இவற்றை சம அளவு எடுத்து அரைத்து தேன் அல்லது வெல்லம் கலந்து சாப்பிட கொடுக்க, அது தீபாவளி லேகியப் பயனைத் தந்துவிடும்.

17 காய்கறிகளை நீரில் வேக வைக்கையில், அதில் கொஞ்சம் வெண்ணெயும் சேர்த்து விட, செய்யப்படும் பதார்த்தம் கூடுதல் சுவை அளிக்கும்!

18 சாம்பார் பண்ண பருப்பை வேக வைக்கும் போது அதில் சிறிதளவு வெந்தயம் சேர்த்துவிட்டால் சாம்பார் விரைவில் கெட்டுப்போவது தவிர்க்கப்படும்.

எஸ். கீதா




# யாமிருக்க பயமேன்!

மும்பை நகரைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்கு தீராத மன சோகம் உண்டாகும் அளவுக்கு, அவளுடைய ஒரே பையன் தீர்க்க முடியாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தான். எத்தனையோ டாக்டர்கள் அவனை பலவித சோதனைகளுக்கு உட்படுத்தி நோயை குணமாக்க எடுத்த முயற்சிகள் தோல்வியைத் தழுவிவிட்டன.

நாளுக்கு நாள் தேய்பிறைபோல் இளைத்து வந்த அந்தப்பிள்ளை தன்னை விட்டு பிரிந்து விடுவானோ என்ற அச்சம் அந்தப் பெண்மணிக்கு. அவளுக்கு தெரிந்த உறவினர் ஷீர்டி பாபாவைப் பற்றி எடுத்துச் சொல்லி, "பையனுடன் அவரை தரிசித்து விட்டு வாயேன். பலன் கிடைக்கும்" என அனுதாபத்துடன் கூற, அவள் ஷீர்டிக்கு பிள்ளையுடன் பயணமானாள். பெண்மணி ஷீர்டியில் பாபா வழக்கமாக பக்தர்களுக்கு தரிசனமளிக்கும் இடத்திற்கு சென்ற போது, அங்கு வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக இருந்தது. அங்கு இருந்த நீண்ட க்யூ வரிசையில் தன் பிள்ளையுடன் இணைந்து கொண்டாள் அவள். நாழியாக நாழியாக கூட்டம் வரிசையில் சேர்ந்துகொண்டே போனது. பெண்மணிக்கு ஒரே பயம். அச்சமயம் ஒவ்வொரு பக்தரின் குறைகளைக் கேட்டு தீர்வு கூறி, உதி பிரசாதமும் அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தார் மகான் பாபா. ரொம்ப நேரமாகி விட்டால் தரிசனம் முடித்து தனது ஓய்வு இடத்திற்கு திரும்பி விட்டால் என்ன செய்வது என்று நினைத்தாள். எல்லாம் உணர்ந்த மகானுக்கு அது புரிந்து விட்டதோ என்னவோ!
மகான் பாபாவின் தீர்க்கப் பார்வை பெண்மணி பக்கம் திரும்பியது. அப்பொழுது அவர் தன் சீடன் ஷாமாவை அருகில் கூப்பிட்டு, பெண்மணியை சுட்டிக்காட்டி, “அந்த அம்மாவையும், பிள்ளையையும் உடனே அழைத்து வா இங்கே” என ஆக்ஞையிட்டார்.

ஆச்சரியமடைந்த பெண்மணி ஷாமா கூப்பிட்டவுடன், பையனுடன் மகான் வெகு அருகே சென்று தானும் நமஸ்கரித்து விட்டு, மெலிந்த பிள்ளையையும் பண்ணச் செய்தாள். அவளை கனிவுடன் பார்த்த மகான் "அம்மா எதற்கும் கவலைப்படாதே!" என ஆறுதல் அளித்து விட்டு, பெண்மணியிடம், அப்பிள்ளையைப் பற்றிய விவரங்களை பொறுமையுடன் கேட்டு அறிந்து கொண்டார்.

"அம்மணி! நீ இப்பொழுது கிளம்பிப் போய், உணவு சாப்பிட்டு விட்டு மதியம் 2 மணிக்கு திரும்பி வந்து என்னைப்பார்!" என கட்டளையிட்டு, உதி பிரசாதத்தை அம்மாவுக்கும், பிள்ளைக்கும் தந்து அனுப்பிவைத்தார்.
தன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அன்று மதியம்

2 மணிக்கு சில நிமிடங்களுக்கு முன்பே, மீண்டும் பாபாவை தரிசிக்க, மகானின் மசூதிக்கு வந்து சேர்ந்துவிட்டாள் பிள்ளையுடன்.

பெண்மணி பாபாவை தரிசிக்கையில், அவர் மட்டுமே தனித்து இருக்கையில் அமர்ந்திருந்தார். மகான் அப்பொழுது பாசமுடன் அவளுடைய பிள்ளையை தன்னருகே அழைத்து "குழந்தாய்! எனது பாதங்கள் வலியாக உள்ளதால் உனது மென் கரங்களால் பிடித்து விடுவாயா?" எனக் கேட்டார். உடனே "ஓ! செய்யறேன் தாத்தா" என தன்னைப் பிடித்திருந்த தாயின் கைகளை உதறிவிட்டு அவரிடம் ஓடி, பாதங்களை மெல்ல பிடித்து விட ஆரம்பித்தான்.

சுமார் 10, 15 நிமிடங்கள் கடந்திருக்கும் அவ்வேளையில் மசூதியே இடிந்து விடும் அளவிற்கு பெரிய இடி சப்தம் உண்டாயிற்று. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒளியிலிருந்து ஒரு பெரிய உடலும், கோரப்பற்களும், தொந்தியும், பயமுறுத்தும் உருட்டு விழிகளுடன் ஒரு அரக்கி போன்ற ஒருவள் காட்சி தந்தாள். பெண்மணியும், பிள்ளையும் இதனைக்கண்டு நடுநடுங்கி விட்டனர். அப்போது பாபா அப்பிள்ளையை தனது கரங்களால் பிடித்துக் கொண்டார்.

வந்த அரக்கி, மரியாதை இன்றி உதாசீனமாக பாபாவை நோக்கி, "ஏய்! அந்தப் பயல் இப்பொழுது எனக்கு உரியவன். நான் யார் என்று உனக்குத் தெரியுமா? நான்தான் காலரா தேவி! இந்த சிறுவனின் உயிரை எடுக்க வந்த யமதேவதை! நேரமாகி விட்டது அவன் உயிரைப் பறிக்க. கொடு சீக்கிரம் அவனை!" என கர்ஜிக்கும் குரலில் அதட்டிச் சொன்னாள்.

மகான் பிள்ளையை இறுக அணைத்துக் கொண்டவாறே அரக்கியிடம் "ஏய்! நீ யாராக இருந்தாலும் சரி! என்னிடம் அடைக்கலமாக வந்த இக்குழந்தையை உனக்குத் தரமாட்டேன். போ! இங்கிருந்து." எனக்கூறி அதட்டினார்.

"ஏ! பக்கிரி, என் சக்தி என்னவென தெரியாது உளறுகிறாய்! விடு அவனை என்னிடம்! தராவிடில் அதன் விளைவு மிக பயங்கரமாக இருக்கும் ஜாக்கிரதை!" என தன் அகல விழிகளை உருட்டி, பயமுறுத்தினாள் காலரா தேவி.
இந்த வார்த்தைகளைக் கேட்டு மகான் பாபா சீற்றமுடன் "என்ன சொன்னாய்? என உரத்துக்கூறி, தன் இருக்கையைவிட்டு வேகமாக எழுந்தவர், தனது வலது காலைத்தூக்கி காலரா தேவியின் வயிற்றுப் பகுதியில் பலமாக உதைத்தார். அக்கணமே அவள் பலத்த வலியால் துடித்துக் கொண்டே "ஐயோ! என்னை விட்டுவிடுங்கள் பக்கிரி!" என ஓலமிட்டாள், இக்காட்சியைக் கண்டு வெலவெலத்துப்போன பெண்மணியையும், பிள்ளையையும் ஆதுரத்துடன் பார்த்துவிட்டு பாபா "தாயே! இங்கே இப்போ வந்தவள் நோய் தேவதையான காலரா தேவி ஆவாள். பயம் தவிர்! நீ காலையில் தரிசனம் பெற வந்தபோதே, உன் குழந்தையின் உயிர் மதியம் முடியும் என எனக்குத் தெரிந்து விட்டது. அதனால்தான் இங்கே பிற்பகல் 2 மணிக்கு உன்னை திரும்பி வரச்சொன்னேன்.

நீ வந்த நோக்கம் இப்பொழுது முழுமையாக நிறைவேறி விட்டது. இனி இப்பிள்ளையைப் பற்றிய நோய் பயம் உனக்கு வேண்டாம். அவன் முழுமையாக குணம் பெற்று விட்டான். பல்லாண்டு இவன் சீரும், சிறப்புமாக ஆரோக்கியமுடன் வாழ்வான்! அச்சம் நீக்கி நீ பம்பாய் திருப்பலாம்" என்று கருணையுடன் கூறி, உதி பிரசாதத்தை பிள்ளையின் நெற்றியில் இட்டார் மகான் பாபா.
பலமுறை நன்றிகள் கூறி, பிள்ளையுடன் மகான் பாபாவை வணங்கிவிட்டு விடை பெற்று, கிளம்பினாள் அந்த பாக்கியம் பெற்றவள்!
பம்பாய்க்கு திரும்பியவுடன் அவள் தனது உறவினர்கள், வேண்டியவர்கள் என அனைவரிடமும், பலநாட்கள் மகான் பாபாவின் இந்த அற்புத நிகழ்வை சொல்லி சொல்லி ஆனந்தப்பட்டாள். அவர்களும் அதனைக் கேட்டு ஆச்சரியப் பட்டனர்.
"என் பக்தன் இந்த உலகின் எப்பக்கம் இருந்தாலும், என் கண்கள் அவன்பால் இருக்கும்" என்பது ஷீர்டி சாய்மகான் அருளிய வாக்குகளில் ஒன்றாகும்.

## ஜெய் சாய்ராம்!



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

# அருள் முத்துக்கள்



கீதா மணி

பிரம்மத்தைச் சொல்லும் "ஓம்" என்கிற ஒரு அட்சரத்தை சொல்லிக் கொண்டும் என்னையே நினைத்துக் கொண்டும் உயிர் விடும் எவனும் நிச்சயம் உயர்ந்த கதியை பெற்றுவிடுவான்!
தன் தோழர்கள், பகைவர்கள், தன்னை வெறுத்து துவேஷம் காட்டுவோர், உறவினர்கள், கண்டுகொள்ளாது தன்னிடம் நடப்பவர்கள், சாதுக்கள், அன்பர்கள், பாவம் புரிவோர் என அத்தனை பேர்களுடன் சமநோக்கு கொண்டு நடப்பவன் மிக உயர்ந்தவன் ஆகிறான்.

மரணவேளையிலும் என்னையே தியானித்தவாறே எவன் தன் சரீரத்தை விடுகிறானோ, அவன் என் நிலையை சந்தேகமின்றி பெற்றுவிடுவான்!
அக்னி, ஜோதி, பகல், சுக்லபட்சம், உத்திராயண கால ஆறுமாதங்கள் போன்ற இக்காலங்களில் இறப்படையும் ஞானிகள் அக்னி முதலியவைகளின் அபிமான தேவதைகளுக்குரிய லோகங்களின் வழியே பிரம்மத்தை அடைவார்கள்.

ப்ரகிருதி, புருஷன் (ஆத்மா) இவை இரண்டுமே அநாதி என்று அறிக! விகாரங்களும், குணங்களும் ப்ரகிருதியிலிருந்து உண்டானவை.

சத்வ குணமுள்ளவர்கள் மோட்சம் பெறுவார்கள். ராஜஸ குணமுள்ளோர் மனித உலகில் தங்கி விடுவார்கள். நீச குணங்கொண்டவர்களான தாமஸர்கள் பசுபட்சிகளாகத் தாழ்ந்த நிலையைப் பெறுவர்.
ஸத் என்பது இருப்பது என்ற பொருளிலும், "நல்லது" என்ற பொருளிலும் உச்சரிக்கப் படுகிறது. அம்மாதிரியே மங்கலகரமான காரியங்களிலும் "ஸத்" என்பது பிரயோகிக்கப்படும்.
யாகங்களிலும், தவத்திலும், தானத்திலும், நிலைத்தலானதும் "ஸத்". ஆக, அது சம்பந்தப்பட்ட கர்மமும் "ஸத்" ஆகிறது.

அப்படியென்றால் அஸத் என்பதென்ன?
சிரத்தையின்றி செய்யப்படும் யாகம், தானம், தவம் இவையெல்லாமே அஸத். ஆக, இறந்தபின் மோட்சத்திற்கோ, இம்மையில் மற்ற பலனுக்கோ அது உதவாது.

## அறிக!

யக்ஞம், தானம், தவம், என்ற கருமங்களை விடவே கூடாது. அவைகளைக் கட்டாயம் செய்தே தீரவேண்டும். ஏனென்றால் யக்ஞம், தானம், தவம், என்ற இவை மூன்றும் புத்திமான்களை தூய்மைப் படுத்தக்கூடியவை ஆகும்.
உடலைத் தாங்கும் எவனும் கர்மங்களை அறவே துறந்துவிடல் என்பது முடியாத காரியம். ஆகவே கர்மபலனைத் துறந்தவனே "தியாகி" எனப்படுவான்.
அறிவு, அறியப்படும் பொருள், அறிபவன் என்ற இம்மூன்றும் கர்மத்தைச் செய்ய தூண்டுபவை; கருவி, செயல், தேகம் என்ற இம்மூன்றும் கர்மத்தை நிறைவேற்றுபவை ஆகிறது. பகவான் கண்ணன், யுத்த களத்தில் தன் தோழனும் பக்தனுமான வீரன் அர்ஜுனனுக்கு அருளிய சில "பகவத் கீதை" துளிகள் இவை!




## மகான் ஷீர்டி சாய்பாபா

அக்காலத்தில் எங்கோ ஒரு இடத்தில் அவதாரமாகி, வட இந்தியாவில் உள்ள ஷீர்டி புனித தலத்திற்கு ஒருநாள் திடீரென வருகை புரிந்து, பின்பு அங்கேயே தான் சித்தி பெறும் வரை ஒரு மசூதியில் தங்கி, எண்ணற்ற சீடர்களையும், அணுக்கத் தொண்டர்களையும், பக்தர்களையும் கொண்டு எத்தனையோ அற்புத லீலைகளுக்கு காரணமாக இருந்தார் மகான் ஷீர்டி சாய்பாபா அவர்கள்.
மதங்களை கடந்த ஷீர்டி மகான் சாதி, பேதமின்றி தன்னை துதித்த, துதிக்கும் லட்சக்கணக்கானவர்களின் தொழில், குடும்பப் பிரச்னைகள், நோய் பாதிப்பு, குடும்பக் கஷ்டங்களைப் போக்கி அவர்கள் கோரும் திருமண, மக்கட் பேறு, வளமான செல்வ வாழ்வு அருளிய இறைவனாக என்றும் போற்றப்படுகிறார்.



திருமணம் என்பது இரு மனங்கள் (ஆண், பெண்) இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தப்பெறும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தம். ஒரு மனிதனின் வாழ்வில் பெற்றோருக்கு பிறகு அன்பான, ஆதரவான, நம்பிக்கையான, தன்னுடன் இறுதி காலம் வரை பயணிக்க ஒருவர் தேவை. அந்த ஒருவர் வாழ்க்கைத் துணையாக மட்டுமே இருக்க முடியும். அந்த வாழ்க்கைத் துணையை சரியாக தேர்வு செய்து திருமணம் செய்வதின் மூலம் இனிமையான வாழ்க்கை அமைகிறது மற்றும் வம்சவிருத்தி ஏற்பட்டு மனித இனம் மலர்கிறது.

ஆனால் அனைவருக்குமே இனிமையான திருமண வாழ்வு அமைவதில்லை. பலர் திருமணத்திற்கு பின் பல இன்னல்களை சந்திக்கின்றனர் மற்றும் பிரிவினையை மேற்கொள்கின்றனர்.

ஜோதிடரீதியாக, தனக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேர்வு செய்து சரியான காலத்தில் திருமணம் செய்வதின் மூலம் மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும். திருமணம் செய்ய உகந்த காலம் எப்போது வரும் என்பதையும், மற்றும் தீமை தரக்கூடிய காலங்கள் எவை என்பதையும் ஜோதிடரீதியாக காண்போம்.

## திருமணம் எப்பொழுது:-

திருமண காலம் வந்துவிட்டதா அல்லது எப்பொழுது என்று கேட்பார்கள். வியாழ நோக்கம் என்பது வேறு ஒன்றுமில்லை. கோச்சாரத்தில் குரு ஜாதகத்தில் 2, 7 ஆம் பாவத்துடனோ அல்லது 7 ஆம் அதிபதி அல்லது சுக்கிரனுடன் தொடர்பு கொண்டால் அந்த காலமே திருமணத்திற்கு உகந்த காலம்.

இக்காலக்கட்டத்தில் தான் திருமணம் நடக்கும். இல்லையெனில் திருமணமே நடக்காது என்று அர்த்தமில்லை. ஆண் பெண் இருவரில் ஒருவருக்கு இருந்தாலே திருமணம் செய்யலாம். அவர்கள் வெற்றிகரமாக வாழ்ந்து கொண்டிருப்பர்.

குரு பார்வையை வேறு ஒரு கணக்கீடு மூலமும் திருமண காலத்தை அறியலாம். சூரி + சுக் + குரு ஸ்புடங்களை கூட்டி வரும் பாகையை மேஷ ராசி முதல் எண்ணி வரும் ராசியே திருமண ராசி எனக் கொண்டு, அந்த ராசிக்கு கேந்திரத்தில் 1, 4, 7, 10 ல் குரு வந்தாலோ அல்லது நவாம்சத்தில் அதே ராசிக்கு திரிகோணத்தில் 1, 5, 9 ல் கோச்சார




செவ்வாய் வரும் காலம் திருமண காலம் எனக் கூறலாம்.

குறிப்பு:- சகட யோகம் உடையவர் ஜாதகத்தில் குரு லக்னத்திற்கு 12 ல் வரும் காலம் திருமண காலமாகும்.

## திருமண திசை புத்தி காலம்:-

கோச்சாரத்தில் குரு பார்வை திருமணத்திற்கு உள்ளதா என பார்த்தது போல, நடக்கும் திசா புத்தி காலம் திருமணத்திற்கு உகந்த காலமா என அறியலாம்.
ஒருவருக்கு நடக்கும் தசா புத்தி ஆனது 2, 7 பாவாதிபதிகளின் தசா புத்தியோ அல்லது வேறு கிரகங்கள் 2, 7 ஆம் பாவத்தில் இருந்து திசை, புத்தி நடத்தினாலும் திருமணம் செய்யலாம்.
ஆனால் 6, 8, 12 ஆம் அதிபர்களின் திசா, புத்தி காலங்களில் திருமணம் செய்தால் பிரிவினை ஏற்படுத்தும். மேலும் நடக்கும் தசா புத்தி நாதர்கள் 2, 7 ஆம் பாவங்களை குறிகாட்டினாலும் அவர்கள் தங்களுக்குள் 2/12, 6/8 என்ற நிலையில் இருப்பின் அக்காலத்தை தவிர்ப்பது நலம். மேலும் அஷ்டமாதிபதி, பாதகாதிபதி, மாரகாதிபதி, அவயோகி போன்றோரின் தசா புத்திகளைத் தவிர்ப்பது நலம்.



விஜய்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# கருணை மனம்



திருநின்றவூர் தலம் தொண்டை மண்டலத்தில் உள்ளது. அக்காலத்தில் அந்நாட்டை ஆண்டு வந்த பல்லவ மன்னன் காடவராஜா ஒரு சிறந்த சிவபக்தன். திருநின்றவூரில் எளிய அந்தணர் குலத்தில் பிறந்த சிவனடியாரான பூசலார் நாயனார் என்பவர் வாழ்ந்து வந்தார். எப்பொழுதும் இறைவனுக்கும், சிவத் தொண்டர்களுக்கும் இடையறாது திருப்பணிகள் செய்து வருவதை தனது நித்ய கடமையாக்கிக் கொண்ட அவருக்கு ஒரு நீண்டகால ஆசை ஒன்று இருந்தது. இப்படி…

பரமேஸ்வரனுக்கு தானே ஒரு கோயில் கட்டி, தினசரி சிவாராதனை புரிந்து வர வேண்டும் என்று. ஆனால் அதற்கேற்ற பொருள் வசதி என்று கிட்டுமோ என்ற தீரா ஏக்கத்தில் இருந்த அவருக்கு திடீரென பொறி தட்டியது போன்று ஒரு யோசனை தோன்றி விட்டது.

வெளியே ஆலயம் உருவாக்கத் தானே ‘பணம்’ வேண்டும்? நமது மனதிற்குள்ளேயே சிவாலயம் கட்ட பொருள் எதற்கு? நாளை முகூர்த்தநாளாக இருப்பதால், அன்றைக்கே இப்பணியைத் தொடங்கி விடலாம் என அன்றிரவு முடிவு செய்து, அப்படியே உறங்கி விட்டார்.

அன்று நல்ல முகூர்த்தநாள். அதிகாலை ஸ்நானம் முடித்து, உரிய சிவ பூஜைகள் புரிந்து ஏகாந்தமாக ஒரு தனியிடத்தில் அமர்ந்தார் பூசலார். பிறகு தன் சிந்தனையை தூண்டி விட்டார்.

கொஞ்ச நேரம் செலவழிந்தது. பூசலார் சிவாலயம் கட்ட பல இடங்களை மனதில் தேர்ந்தெடுத்து கடைசியாக திருநின்றவூரில் உள்ள ஒரு அமைதியான பகுதியில் கோயில் அமைப்பதாக முடிவு செய்து விட்டார். படிப்படியாய் ஆலய நிர்மாண பொருட்கள், உபகரணங்கள், பல சிற்பிகள் என பற்பல பூசலாரின் எண்ணங்களில் தோன்ற, கற்பனை ஆலயப்பணி தொடங்கிவிட்டது. சிலதினங்களில் அழகிய சிவாலயமொன்று அந்த நாயனாரின் உள்ளத்தில் உருவாகி கும்பாபிஷேக நிகழ்வுக்கு தயாராகவிருந்தது.

கிட்டத்தட்ட இதே சமயம் பல்லவ அரசன் காடவராஜா, காஞ்சிபுரத்தில் சிரத்தையாக சில திங்களில் பாடுபட்டு பல சிற்ப நிபுணர்கள் உதவியுடன் ஒரு எழிலான சிவாலயத்தை அமைத்து முடித்திருந்தான். கும்பாபிஷேகத்திற்கான முகூர்த்த நாளும் குறித்தாகி, மக்களுக்கு தண்டோரா மூலம்

அறிவிப்பும் செய்யப்பட்டு விட்டது.

தெய்வ சங்கல்பமோ என்னவோ, பூசலார் மனக்கோயிலில் சிவ பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்த நிர்ணய தேதியும், காஞ்சி சிவாலய கும்பாபிஷேக தேதியும் ஒன்றாகவிருந்து விட்டது!



இறை பிரதிஷ்டை நடக்கவிருந்த புண்ணிய நாளின் முதல் நாள் இரவு பஞ்சணையில் பல்லவ மன்னன் கண் அயர்ந்திருந்த நேரமது. நள்ளிரவு நேரம் வர, அப்பொழுது சிவபிரான் மன்னனின் கனவில் திருக்காட்சி அளித்து, “காடவர் கோனே! திருநின்றவூரில் வசிக்கும் எனது அடியவன் பூசலார் கட்டியுள்ள ஆலயத்திற்குள் நான் பிரவேசிக்க சிந்தை கொண்டுள்ளதால் உனது கோயில் பிரதிஷ்டை தினத்தை மறுதினத்திற்கு மாற்றிக்கொள்க!” என ஆக்ஞையிட்டு மறைந்துபோனார். தூக்கம் கலைந்த மன்னன் நான் இதுவரை கேள்விப்படவில்லையே, என் ஆட்சி எல்லைக்குள் இன்னொரு சிவாலயம் கட்டப்படுகிறதா? என வியப்புற்றான்.

அதிகாலையில் எழுந்து காடவர்கோன் குளியலை முடித்து, புத்தாடை பூண்டு தன் பரிவாரங்களோடு பூஜை சாமான்கள், புது வஸ்திரங்கள் இவற்றுடன் திருநின்றவூருக்கு புறப்பட்டு விட்டான்.

திடீரென தன் எளிய இல்லத்திற்கு பல்லவ மன்னன் பரிவாரங்களோடு வந்து நின்றதை பார்த்து, பூசலார் திகைத்து ஆச்சரியப்பட்டார். பரபரப்புடன் அவர் மன்னனை மகிழ்ச்சியுடன் வரவேற்று, “அரசே! தாங்கள் சொல்லி அனுப்பியிருந்தால், நானே



தங்களுடைய அரண்மனைக்கு வந்திருப்பேனே!” எனக் கூறி மன்னனுக்கு ஆசனமளித்து கைகட்டி நின்றார்.

“பரவாயில்லை! பூசலாரே, தாங்கள் இன்று இறை பிரதிஷ்டை செய்ய உள்ள திருக்கோயில் எங்கு கட்டப்பட்டுள்ளது?” என ஆவலுடன் மன்னன் வினவவே, பூசலார் திகைத்து நின்றார். மன்னனே தொடர்ந்து பூசலாரிடம் தான் முதல் நாள் கண்ட கனவில் இறைவன் தெரிவித்த சேதியைக் கூறினார். இதனால் பரவசமுற்ற பூசலார், “அரசே! கோயில் கட்ட வசதியற்ற யான், என் மனதிலேயே கற்பனையில் அதனை கட்டி முடித்து இன்று புண்ணிய தினமாக இருப்பதால் இறை பிரதிஷ்டை செய்ய இந்நாள் குறிக்கப்பட்டது.” என்று எடுத்துரைக்க, அதனை பிரமிப்புடன் காடவர் கோன் கேட்டான். உண்மையான சிவனடியார்கள் முன்பு தன்னை போன்ற அதிகாரம் படைத்த எவருமே, அவர்களுடைய கால் தூசுக்கு சமம் என்பதை உணர்ந்து, பூசலாரை தக்கபடி கௌரவித்து வணங்கி விடைபெற்றான் பல்லவர் கோன்.

அதன் பின்பு, பூசலார் தான் இருக்கும் இடத்தில் நின்றவாறே

“நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே”

என கண்ணீர் மல்க ஆண்டவனுக்கு வேண்டுகோள் விடுத்தார் இரு கைகூப்பியவாறு, அடுத்த கணமே அந்த சிவத்தொண்டரின் பக்திக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் பேரொளியுடன் இக்கோலத்தில் பூசலாரின் திருவுள்ளமான ஆலயத்தில் அமர்ந்தார்.

“பூங்கமல வதனமும்
பொழி கருணை நயனமும்
புன்முறுவல் நிலவெறிப்பும்
பொலிசடா டவியும் அதில்
உறை நிலா மதியும் ஒளி
புனை குழை இலங்கு காதுமாய்”

உள்ளார்ந்த உள்ளத்துக் குகையில் இருக்கும் வேதநாயகனாக வந்ததால் குகன் என்ற பெயர் பெற்ற உலக உட்பொருள் நாயகனை கண்டு கண்டு ரசித்து புளகாங்கிதமுற்ற பூசலார் கண்களிலிருந்து ஆனந்த மழை பொழிந்தவாறே இருந்தது!


“இறைவனை நான் அகத்தில் அழகுடன் விளங்க அருள்வாய் என்று வேண்டிக் கொள்கிறேன்” என்பது கிரேக்க நாட்டு பிரபல தத்துவ மேதை சாக்ரடீஸ் உதிர்த்த பொன் மொழிகளில் ஒன்று இச்சம்பவத்திற்கு பொருத்தமாக உள்ளதல்லவா!

“கச்சி ஏகம்பா! உன்னை தரிசித்த யான் இழந்துவிட்ட வலது கண்பார்வையை அருள்வாய்” என மகான் சுந்தரர் சிவனை மனமுருக வேண்ட, ஏகம்பன் அருளிய கருணையில் மீண்டும், இழந்த பார்வையை மகான் சுந்தரர் பெற முடிந்தது!

**தொடரும்...**



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்



# சித்தர் பூமி

## ரமணகிரி சுவாமிகள்

# அண்ணாமலையில் ஞானம்

மதுரை மாவட்டம், சிறுமலை அடிவாரத்தில் அமைந்துள்ள குற்றாலம் பட்டியில் அமைந்திருப்பது தான் ரமணகிரி தர்மஸ்தாபனம்! இங்கே ஜீவசமாதி அடைந்து சகலருக்கும் தன் அதீத ஜீவசக்தியால் அருள்மாரி பொழிகின்ற மகான்தான் ரமணகிரி சுவாமிகள்.

யார் இவர்? பூர்வீகம் எது? இவர் ஞானம் பெற்றது எவ்விதம்? ஜீவசமாதி அடைந்தது எங்ஙனம்? என்கிற கேள்விகளுக்கெல்லாம் விடையினை அறிய நாம் நமது கற்பனைக் குதிரையை அயல்நாடு நோக்கி தட்டி விடுவோம்.

ஸ்வீடன் நாடு! அங்கே ஓர் ராஜவம்சம்! அந்த அரச குடும்பத்தில் இறையருளால் பிறந்தவர் அலெக்சாண்டர் வெஸ்டிம்!

இறைவன் ஒருவருக்கு ஞானத்தை அருள அவரது முற்பிறப்பும் காரணம்... அவரது இப்பிறப்பும் காரணம்! "எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குமோ?" என்னும் பழமொழியினை மாற்றி "எந்த நாட்டில் எப்படிப்பட்ட ஞானி பிறப்பாரோ?" என்று மாற்றிப் போற்றும் வகையில் இறைவனின் திருவுளம் ஒரு மகானை எங்கு வேண்டுமானாலும் அவதரிக்க வைக்கும்! ஆனால், பிறக்குமிடம் எதுவென்றாலும் கலக்குமிடம் கடல் தான் என்னும் உண்மை போல! நதியைப் போல கருவாகி, செல்லும் இடமெல்லாம் சீராக்கி, இறுதியில் இறைவனடியில் சங்கமிக்கும் ஞானியர் எங்கு பிறந்தால் என்ன? ஞானியர் எவரும் அவனுக்கே அர்ப்பணம் அல்லவா!?

சரி... நமது ஞானி அலெக்சாண்டர் வெஸ்டிம் அவர்களைப் பார்ப்போம்!

ஸ்வீடன் நாட்டின் மாளிகை பல அடுக்குகள் கொண்டது! அந்த மாளிகையின் ஆறாவது தளத்தில் விளையாடிக் கொண்டிருந்தான் குழந்தை அலெக்ஸாண்டர் வெஸ்டிம்! இறைவனின் திருவருளோ அல்லது எவரது கவனக்குறைவோ, விளையாடிக் கொண்டிருந்த அந்த ஆறு வயதே நிரம்பிய சிறுவனான அலெக்சாண்டர் அந்த ஆறாவது மாடியிலிருந்து தவறி கீழே விழுந்தான்.

விழுந்தது ஆறாவது மாடியிலிருந்து! ஆயுள் அவ்வளவுதான்; முடிந்தது! என அனைவருமே பதறி, சொல்லவொண்ணா தவிப்போடும், ஓலத்தோடும் இறங்கி ஓடிவந்தனர். மகன்... கை, கால்கள் உடைந்து ரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பான்! முழுதாய் இருக்குமா? அந்த அழகு முகம் சிதையாமல் இருக்குமா? இப்படி ஆயிரம் சிந்தனைகள் கலவரத்தை உண்டாக்கிட... கீழே வந்து பார்த்தவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். இது அதிசயமா? அற்புதமா?... ஆண்டவன் கருணையா? அனைவரும் அதிசயத்தில் வாய்பிளந்து நின்றார்கள்!

காரணம்?...

ஆறாவது மாடியிலிருந்து கீழே விழுந்த சிறுவன், மின் தூக்கியில் இறங்கி வந்ததைப் போல எதுவுமே நடக்காதது மாதிரி கீழே நின்று கொண்டிருந்தான். பதட்டத்தோடு அவனை நெருங்கியவர்கள் ஆச்சரியத்தோடு தொட்டார்கள்; தூக்கினார்கள்; கொஞ்சினார்கள்!

“அன்னை மேரியின் அற்புதம் என்றார் ஒருவர்! இயேசுவின் கருணையே இவனைப் பிழைக்க வைத்தது என்றனர் பலர்.

மகிழ்ச்சி. மகிழ்ச்சி. மட்டில்லா மகிழ்ச்சி. ‘இது எப்படி சாத்தியமாயிற்று?’ என்ற குழப்பம் ஒருபுறம் இருந்தாலும் “எப்படியோ!? பிள்ளைக்கு ஒன்றும் ஆகவில்லையே... அது போதும்!” என நிம்மதி அடைந்தனர். ஆனால்...
இவை எதையும் காதில் வாங்காமல் யாரையும் கவனிக்காமல், அலெக்சாண்டர் வெஸ்டிம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அவனுடைய சிந்தனையெல்லாம், தான் விழுந்த போது திடீரென ஒரு பெரிய பறவை வந்து, தன் அழகிய சிறகினை விரித்து, தன்னை கீழே விழாமல் சிறகினில் தாங்கி, பத்திரமாய் தரையில் இறக்கி விட்டதே, அது என்ன பறவை? அதை அனுப்பியது யார்? இப்படிப்பட்ட பறவையை நான் இதுவரை பார்த்ததில்லையே!” என்று சிறுவனின் மனம் குழம்பியது.

தன் மனதில் தோன்றிய சந்தேகங்களை, தன் குழப்பத்தை வெளியில் சொல்லவோ, விடை தேடவோ அவனால் இயலவில்லை. ஆயினும் அந்த சிறுவனின் அடி மனதில் அந்த பறவையும் அது தன்னை காப்பாற்றி தரை சேர்த்ததும் ஆழமாய் பதிந்துவிட்டது.

இதுதான் பின்னாளில் இவரது ஞான ஒளி பிரகாசிக்க இறைவன் பற்றவைத்த சிறு தீபம் என்பதை அன்று எவரும் அறியவில்லை.
ஆனால் சிறுவன் அலெக்ஸாண்டரோ தான் போகின்ற இடத்திலெல்லாம் அந்த பறவை கண்ணில் படுமா என தேடிக்கொண்டே இருந்தான்.

காலம் சுழன்றது. சிறுவன் வளர்ந்தான்! அரச வம்சத்தில் உதித்ததினால் இளவயதிலேயே போர்ப்பயிற்சி, குதிரையேற்றம் போன்ற அரச கலைகள் பயிற்றுவிக்கப்பட்டது. அனைத்திலும் தேர்ச்சி பெற்று ராஜகுமாரனாக அலெக்சாண்டர் வெஸ்டிம் வலம் வந்த வேளையில்...
இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அந்நாட்டு வழக்கப்படி, ராஜ வம்சத்தை சேர்ந்த அலெக்சாண்டரும் களம் காண வேண்டிய சூழல்!
துப்பாக்கி ஏந்திய வீரனாய் களம்புகுந்து தன் துணிச்சலை வெளிப்படுத்தினான் இளைஞனாக இருந்த அலெக்சாண்டர்!
அப்போது தான்... தனக்குள் ஆன்மஜோதி ஒன்று சுடர் விட்டு பிரகாசிப்பதை இவர் அறியும் சந்தர்ப்பம் அமைந்தது. ஆம்!....
களத்தில் நின்று எதிரிகளை கதிகலங்க வைத்துக் கொண்டிருந்த அலெக்சாண்டர் வெஸ்டிம் சற்றும் எதிர்பாராத தருணத்தில் எதிரியின் துப்பாக்கிக் குண்டு ஒன்று அலெக்சாண்டரை நோக்கி சீறி வந்தது. சீறி வந்த தோட்டா இவரை சிதைக்காமல் இவரது மூக்கு நுனியை உரசிக்கொண்டு சென்றது! அந்த நொடி! என்னவாகுமோ என்ற திகைப்பு! ஒரு கணம் சுவாசம் ஸ்தம்பித்தது. அந்த சுவாசம் இரண்டு நாசிகளிலும் ஒரே நேரத்தில் சீராக இயங்கியது.

இதுதான் குண்டலினி சக்தி என்பது. அந்த சக்தி இவருக்கு தானாய் வசப்பட்டது இறையருள்தானே!? இதை அன்று அவர் அறிந்தாரில்லை. ஆனால், தன்னில் ஓர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை நன்றாக அறிந்தார்.

கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய அலெக்சாண்டர் அந்த இளம் வயதிலேயே ஆறு மொழிகளில் தேர்ந்து விளங்கினார்.



இந்த நிலையில் இவரது கல்வி அறிவை மேம்படுத்த எண்ணிய பெற்றோர் இவரை காசியில் பனாரஸ் பல்கலைக்கழகத்தில் M.Aசைக்காலஜி படிப்பிற்காக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்கள்!
உலகிலேயே ஆன்மீகம் செழிக்கும் புனித பூமியான இந்தியா அந்த மகானை தன்னில் அனைத்துக் கொண்டது! இந்திய தேசத்திற்குள் இவர் வந்ததிலிருந்து இந்து மதம் பற்றி அறிய ஆர்வம் கொண்டார். போகப்போக அந்த ஆர்வம் ஆராய்ச்சி

செய்யத் தூண்டியது. இவரை இமயம் நோக்கி இழுத்தது.

அங்கு ஒரு குகையின் உட்சென்று தியானம் செய்ய அமர்ந்தார். அப்போது திடீரென ஒரு ஒளிக்கீற்று தோன்றியது! அது ஒளிவெள்ளமாய்ப் பெருகி ஓர் உருவமாய் மாறியது.
அந்த உருவம் வேறு யாருமல்ல... மகா அவதார் பாபாஜி அவர்கள்.
கண்ணை பறிக்கும் ஒளிவெள்ளத்தின் ஒருவராய் காட்சியளித்தார் பாபாஜி! திகைப்பு மேலிட மெய்மறந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தார் நம் மகான்!
பாபாவின் கண்களிலிருந்து புறப்பட்ட ஒளி, இவரது கண்களை ஊடுருவி உள்ளே செல்ல... சொல்ல முடியாத பரவசம், விவரிக்க முடியாத இன்ப உணர்வு. உடலெல்லாம் உணர முடியாத அதிர்வலை.

ஏதோ ஒரு பேரின்ப வெள்ளத்தில் மிதந்தவராய் குகையை விட்டு வெளியேறினார். இதுதான் இவருக்கு கிடைத்த நயன தீட்சை! அதை வழங்கியவர் மகா அவதார் பாபாஜி அவர்கள்.
இமயமலையில் தவமியற்றி வந்த கிரி வம்சத்தை சேர்ந்த ஞானிகள் இவருக்கு ரமணகிரி என்கிற திருநாமம் சூட்டி சன்னியாசம் கொடுத்தனர். அதற்கு முன்னர் சக்தி வழிபாட்டில் இவரது கவனம் சென்றது. கல்கத்தா சென்றவருக்கு சிவசங்கரி மாதாஜி என்பவர் சக்தி உபாசனை செய்து, சக்தி தீட்சை கொடுத்தார்.

சிவசங்கரி மாதாஜி மூலம் ராஜயோக தீட்சையும் பெற்றார். இந்த சிவசங்கரி மாதாஜி மதுரையைச் சேர்ந்த குழந்தையானந்த சுவாமிகளின் சிஷ்யை ஆவார்.
எல்லாம் நல்லபடியாக நடந்து முடிந்தது. கிரிவம்சத்தை சேர்ந்த ஞானிகளிடம் துறவு தீட்சையை பெற்று ரமணகிரி என்ற திருநாமத்துடன் சன்னியாசம் பெற முனைந்தார். முதல் நாள் எதுவுமே கிடைக்கவில்லை. தங்கத்தட்டில் அரண்மனையில் உணவருந்தியவர் காவி உடுத்தி, யாசகம் பெற கையேந்திய நிலையில் முதல் நாளில் ஒரு பிடி அன்னம் கூட கிடைக்காமல் போனது இறைவனின் திருவிளையாடல் என எண்ணினார்.
இரண்டாவது நாளின் இறுதியில் ஏதும் கிடைக்காத நிலையில் காசி விஸ்வநாதர் ஆலயம் சென்றவருக்கு ஒரு அழகிய கனி ஒன்று இறையருளால் கிடைத்தது. கனியின் அழுகிய பகுதியை நீக்கிவிட்டு மீதத்தை உண்டார். அது கடவுளின் அருட்பிரசாதமாய் தோன்றியது! பிறவிப் பயன் பெற்றார் ரமணகிரி சுவாமிகள்.

மூன்றாவது நாள்...
காசி மன்னரின் அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது! அங்கு சென்றவர் வியந்து போனார். காரணம்... சுவீடன் நாட்டில் தனது அரண்மனையில் இருப்பதைப் போன்ற உணர்வு!
ராஜ உபசரிப்பு! உயர்தர ஆசனத்தில் அமர வைக்கப்பட்டார். தங்கத்தட்டு, அறுசுவை உணவுகள்! ஆனால்...
அனைத்து ஏற்பாடுகளையும் மறுத்த சுவாமிகள், தரையில் அமர்ந்து சாதாரண தட்டிலே ஏதோ கொஞ்சம் உணவருந்தினார்.

இந்நிலையில் சுவாமிகள் ஞான தீட்சை பெற வேண்டும் என்று எண்ணினார். ஞானம் பெற்றால் தானே முக்தி அடைய முடியும்!? ஞான தீட்சை பெற எங்கே செல்ல வேண்டும்? தென்னாடு சென்றால் தான் ஞான தீட்சை கிடைக்கும் என பலரும் சொல்ல... அங்கு எங்கே செல்வது?!
'ஞான தபோதனரை வாவென்று அழைக்கும் திருவண்ணாமலை!'

இந்த திருவண்ணாமலை தானே ஞானியரின் சொர்க்க பூமி! அன்றைய நாளில் இப் புண்ணிய பூமியில் இருந்த மகான்கள்; மகான் ரமண மகரிஷியும் அருகில் பாண்டிச்சேரியில் இருந்த அரவிந்தரும் தான்.

ரயிலில் பயணித்த நம் ரமணகிரி சுவாமிக்கு திருவண்ணாமலைக்கு சென்று ரமணரை சந்திக்கும்படி வழிகாட்டியவர் ஒரு முஸ்லிம் நண்பர்! திருவண்ணாமலையை வந்தடைந்த சுவாமிகள், தான் அடியெடுத்து வைக்கும் இடத்தில் எல்லாம் சிவலிங்கம் முளைத்ததைக் கண்டு இறைவனை தனது மனமுருக வேண்டி, ஆலயம் சென்று அண்ணாமலையாரை தரிசனம் செய்தார்.

பகவான் ரமணரை சந்திக்க அவரது ஆசிரமத்திற்கு நம் ரமணகிரி சுவாமிகள் சென்றார். அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே வருகையின் நோக்கத்தை புரிந்து கொண்டார் பகவான் ரமணர்!

ஆசிரமத்தில் தங்கிக் கொள்ளும்படி அனுமதியை சைகையால் வழங்கிய பகவான், இவரிடம் ஒரு

வார்த்தை கூட பேசவேயில்லை.

இரண்டாவது நாள் இரவு! ஆசிரமத்தில் நம் ரமணகிரி சுவாமிகள் ஒரு குடிசையில் தங்கியிருந்தார். நள்ளிரவில் குடிசையின் கதவு திறந்தது. திறந்த கதவின் வழியாக உள்ளே வந்த ஒரு ஒளி சுவாமிகளின் வலது கால் வழியாக உட்பகுந்து இவரது தலையை வியாபித்துக் கொண்டது!

கண்விழித்துப் பார்த்தார். எதிரில் பகவான் ரமண மகரிஷி ஒளிக் குவியலாய் தன்முன்னே அமர்ந்திருப்பது போல் தோன்றியதை உணர்ந்தார்.

எதிரே அமர்ந்திருந்த பகவான் நம் சுவாமிகளிடம் “உனக்கு என்ன வேண்டும்?” என கேள்வி கேட்க தனது ஆத்ம விசாரணைக்கான அனைத்து கேள்விகளையும் கேட்டு பகவானின் பதிலைப் பெற்று தெளிவு பெற்றார் சுவாமிகள்! நம் சுவாமிகளுக்கு ஒரு பிச்சை பாத்திரத்தை வழங்கிய பகவான் ரமணர் சில கட்டளைகளையும் இட்டார்!

ஆசிரமத்திலேயே தங்கிவிட நினைத்த நம் சுவாமிகளுக்கு பகவான் இட்ட கட்டளை என்னவென்றால், ‘நீ தனியே ஆசிரமம் அமைத்து பயிற்சி செய்’ என்பதுதான்.

அதன்படி, ஆசிரமம் அமைக்க இடம் தேடி, பல இடங்களுக்கும் சென்றார். அப்படி இந்த சிறுமலையின் அடிவாரத்தில் வந்தபோது தனது குருவின் பாதங்கள் காட்சியளிக்க, இதுதான் சரியான இடம் என்று எண்ணி, அங்கேயே ஆசிரமம் அமைக்க முடிவு செய்தார். குருவின் பாதம் காட்சி கொடுத்ததால் அவ்விடத்தை குருபாதம் என்று பெயரிட்டு அழைத்தார்.

பகவான் ரமணரின் ஞான வெள்ளத்தினைப் பெற்றவுடன் ஆறு வயதில் மேலிருந்து விழுந்த தன்னைக் காப்பாற்றியது மயில் என்பதனை அறிந்து, திருவண்ணாமலையிலேயே தமிழ் கற்று, அருணகிரிநாதரின் திருப்புகழை பாடி மகிழ்ந்தார்.

ஆசிரமம், ரமணகிரி தர்மஸ்தாபனம் என்ற பெயரில் சிறப்பு பெற்று விளங்க... நாடி வந்தோர் அனைவரும் கர்ம வினைகளும், நோய்களும் நீங்கப் பெற்றார்கள்.

பகவான் ரமண மகரிஷி அவர்களால் ஞான தீட்சை வழங்கப்பட்டு சிறுமலை, குற்றாலம் பட்டியில் ஆசிரமம் அமைத்த நம் ரமணகிரி சுவாமிகள், பலகாலம் அருள்புரிந்து 1955 ஆம் வருடம் மஹா சமாதி அடைந்து, இறைவனுடன் கலந்தார்.

ஆயினும், இன்றும் உலக மாந்தரின் நலன்களைப் பேணிக்காக்கும் மகாபுருஷராக இங்கே உயிர்ப்புடன் விளங்கி, உய்வினை நல்குகிறார், நம் ரமணகிரி சுவாமிகள்.

சுவீடன் என்னும் நாட்டில் பிறந்து, நம் தமிழ் மண்ணாம் புண்ணிய பூமியில் ஐக்கியமாகி, மனிதனிலிருந்து மகான் என்னும் நிலையையடைந்து திருவருள் புரிந்து வரும் ரமணகிரி சுவாமிகள் என்னும் அருளொளியை அன்புடன் வணங்கி, மேன்மைகள் பெறுவோம்.



ரா. பன்னீர்செல்வம்

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

### நந்தி தேவருக்கு தருமவிடை என்ற சிறப்புப் பெயரும் உண்டாமே?

அழிவற்றது தருமம். அது விடை எனும் ரிஷப வடிவத்தில் சிவனை சென்று அடைவதால் நந்திக்கு தரும விடை பெயரும் வந்தது.
இந்த தருமம் மீது ஈசுவரன் அமர்ந்திருக்க, நந்தியின் மூச்சுக் காற்றே மூலவருக்கு உயிர்நிலை தருகிறது.
நந்தியம் பெருமாளுக்கு ருத்திரன், சைலாதி, தூயவன், சிவவாஹனன், தனப்ரியன், கனகப்பிரியன், வீரமூர்த்தி தருணா கரமூர்த்தி, மிருதங்கப்பிரியன், சிவப்ரியன் போன்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

### நந்தி தேவரின் சீடர்கள் யார் யார்?

சனகர், சனந்தனர், சனாதனர், சனத் குமாரர், பதஞ்சலி, சிவயோக மாமுனி, வியாக்கிரமர், திருமூலர் ஆகிய எண்மர் ஆகியோர் நந்தி பெருமானின் சீடர்கள் ஆவார்.
சனத்குமாரர் நந்தியிடம் உபதேசம் பெற, சனக்குமாரிடமிருந்து சத்தியஞான தெரிசினிகளும், சத்யஞான தெரிசினிகளிடமிருந்து மெய்கண்டாரும் உபதேசம் ஏற்க, இக்குரு வரிசைதான் “திருக்கயிலாய பரம்பரை“ ஆனது.

### திருவிளக்கின் அம்சமென்ன?

திரு விளக்கின் உச்சிப் பகுதி சதாசிவ அம்சம். நெய் - நாதனாக, திரி - பிந்துவாக, சுடர் திருமகளைக் குறிக்க, பிழம்பு - சரஸ்வதியைக் குறிக்கும். தீ தான் சக்தி வடிவு.
விளக்கின் நடுத்தண்டு விஷ்ணு அம்சமாக, ஆசனமான அடிப்பாகம் பிரம்ம அம்சமாகும்.

### கஞ்சனூர், சுக்கிரன் தலத்தில் என் சுரைக்காய் நைவேத்தியமாகிறது?

ஒரு சந்தர்ப்பத்தில் பக்தர்களை சோதிக்க எண்ணிய கைலாயநாதர் வேறு உருவெடுத்து நடந்தே சென்று கஞ்சனூரில் உள்ள பக்தர் ஒருவர் வீடு சென்று தன் பசிக்கு உணவு தர யாசித்தார். அவனுடைய மனைவி, இல்லத்தில் கணவர் இல்லாத நிலையில், அவர் தோட்டத்தில் வளர்த்து வந்த செடியில் முளைத்த சுரைக்காயைப் பறித்து சமையல் செய்து இறைவனுக்கு அமுது படைத்துவிட்டாள். வயோதிகராக வந்த சிவனும் அவளை ஆசீர்வதித்து விட்டு சென்றுவிட்டார்.
இல்லம் திரும்பிய கணவனிடம் நடந்ததை அப்பெண்மணி சொல்ல, மிகச்சினம் கொண்ட கணவன், “ஏண்டி நான் எனக்காக ஆசைப்பட்டு வைத்திருந்த அக்காயை ஏனடி பறித்தாய்” எனக் கூறி தண்டனையாக அவளுடைய மணிக்கட்டை உடைக்க முயல்கையில், இறைவன் அசரீரி ஆக “வந்து உண்டவன் நானே” என அறிவிக்க, கணவன் மெய்சிலிர்த்துப் போய் ஆகாயம் நோக்கி வணங்கி மன்னிப்பு கோரினான்.
எனவேதான் கஞ்சனூர் சிவாலயத்தில் குடிகொண்ட அருள்மிகு கற்பகாம்பாள் சமேத அக்னீசுவரனுக்கு மகா அன்னத்துடன் சுரைக்காயும் வைத்து நைவேத்தியமாகிறது.

### ராஜஸ்தானில் கங்க்வர் என்ற திருவிழா கொண்டாடப்படுகிறதாமே?

ராஜஸ்தானத்தில் உள்ள உதய்ப்பூர், ராணா அரசவம்சத்தைச் சேர்ந்த குறிப்பாக திருமணமாகாத பெண்கள் பெரும்பாலும், ஆறு, குளக்கரைகளில் தங்களுடைய சிறப்பான ஹோலிப்பண்டிகையை கொண்டாடிவிட்டு அடுத்துச் செய்யும் திருவிழாவே “கங்க்வர்” ஆகும்.
கங்க்வர் திருவிழாவிற்காக, ஹோலிப்பண்டிகை நடத்தி முடித்த 18ஆம் நாளன்று அதில் தீ மூட்டி உருவான சாம்பலிலிருந்து இத்திருவிழா தொடங்கும்.
இளம் கன்னிப்பெண்கள் களிமண்ணால் ஆன ஒரு பொம்மையை செய்து அதனை “கௌரி“யாக

பாவிப்பார்கள். பின்பு மற்றொரு பொம்மையும் உருவாக்கப்பட்டு அவர் ஈசுவரனாகக் கருதப்படுவார். பிறகு ஈசுவரனையும், கௌரியையும் கன்னிப்பெண்கள் கூடி விமரிசையாக பூஜிப்பார்கள். மரத்திலான 'மரப்பாச்சி" வகை பொம்மைகளையும் இவர்கள் பூஜை செய்வதுண்டு.
இப்பூஜை மூலம் தங்களுக்கு இணைபிரியாத நல்ல கணவன் கிடைப்பான் என்பது ராஜஸ்தான் பெண்கள் கொண்ட நம்பிக்கை.

## தர்ம சாஸ்திரத்திற்கு விரோதமான சில காரியங்கள் எவை?

தினமும் சமையல் செய்யப்படும் அரிசியை மூன்று முறை தண்ணீரால் சுத்தி செய்யாமல் சாதம் தயார் செய்ய வேண்டாம்.
குக்கரில் சமைக்கப்பட்ட சாதத்தை ஹோம காரியங்களில் பயன்படுத்தக் கூடாது. (உள் ஆவி வெளியேறாத காரணத்தால்)
பகல் நேரங்களில் உப்பு கலந்த உணவை உண்டவர்கள், மாலை நேரங்களில் நடைபெறும் ஹோம காரியங்களில் பங்கேற்பது சரியல்ல.
திங்கட்கிழமையன்று பஞ்சால் ஆன திரியை (விளக்கு) கையால் தொடுவது தவறான செயல்.
வீட்டின் வெற்றுச் சுவரைப் பார்த்தவாரோ, வீட்டு வாசலுக்கு தன் முதுகைக் காட்டியவாரோ அமர்வது தவிர்க்க வேண்டிய செயல்.
மகா விஷ்ணு, மகாலட்சுமி படங்களை வீட்டு வாசலின் நுழையுமிடத்திலோ, வராண்டா, ஹாலிலோ தெரு வாசலை நோக்கியவாறு மாட்டுதல் தோஷம் தரும்.

## "வாழாது வாழ்ந்தாலும் வடக்கில் தலை வைத்துப் படுக்காதே" என்ற பழமொழி ஏன் வந்தது?

நமது நாட்டின் வடக்குப் பகுதியில் இமயமலை உள்ளது.
இம்மலையில் மின்னணு காந்தக் கதிர்கள் இருப்பதாக உணரப்படுவதால், வடக்கில் தலை வைத்துப் படுத்தால் அக்கதிர்கள் தலையை ஆகர்ஷித்து அதில் உள்ள மூளைக்கு கெடுதல் ஏற்படும் வாய்ப்பு உண்டு. எனவே இப்பழமொழி ஏற்பட்டிருக்கலாம்.
இமயமலையில் கங்கை உற்பத்தியாவதாலும், பல ரிஷிகள் மகான்கள் சம்பந்தப்பட்டதாக உள்ளதாலும், சிவபிரான் அதில் குடியேறி உள்ளதாக ஐதீகமுள்ளதாலும் அந்த திசை நோக்கி அமர்ந்து தியானம் புரிவது மட்டும் நல்லதாகும்.

## "ஆற்றங்கரை சொற்கிழத்தி" இது யாரைக் குறிப்பது?

கலைமகளை இது குறிக்கும். புலவர் ஒட்டக்கூத்தர் தனது "தக்கயாகப்பரணி" நூலில் இப்படி அழைப்பார் சரஸ்வதி தேவியை.

## திருப்பதி திருமலையில் உள்ள ஏழு மலைகளின் காரணப் பெயர் விளக்கமென்ன?

ஆதிசேஷன் போன்ற தோற்றத்தை அளிப்பதால் ஒரு மலை "சேஷமலை" ஆகிறது.
வேதங்கள் பரவிக் கிடக்கும் மலைப்பகுதி "வேதாசலம்" என்று அழைக்கப்படுகிறது.
கருட பகவான் விண்ணுலகத்திலிருந்து மண்ணுக்கு கொண்டு சேர்த்த மலையாக 'கருடாசலம்" விளங்குகிறது.
ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீனிவாசன் விருஷபன் என்ற அரக்கனை அழிக்க நேர, அவனை சம்ஹரித்து அவனுக்கு மோட்சமளித்த மலை கொண்ட பெயர் "விருஷாபசலம்" என்பது.
அஞ்சனாதேவி அனுமனின் தாய். இவள் கடுந்தவம் இயற்ற அமர்ந்த மலை "அஞ்சனாத்திரி", இதன் பலனாகவே அப்பெண்மணிக்கு ஆஞ்சநேயர் உதித்தார்.
ஒரு சந்தர்ப்பத்தில் தானே ஆதிசேஷன், வாயுத்தேவனை பலப்பரிட்சையில் ஈடுபடுத்தி, பரிசோதித்து ஆனந்தமுற்ற இடமே "ஆனந்தாத்திரி" மலை.
மானிடர்களின் அனைத்துப் பாவங்களையும் தீயினால் அழித்து புனிதப்படுத்தும் வேங்கடவநாதன் மலை இது என பக்தர்களுக்கு விளக்குவதே "வேங்கடாத்திரி" மலை.

## சிவபூஜை புரிந்து பாக்கியமடைந்த சிலர் எவர்?

திருச்செங்காட்டாங்குடியில் கணபதியும், திருச்செந்தூர், திருவிடைக்கழி தலங்களில் சுப்பிரமணியரும், மயிலாப்பூரில் கற்பகாம்பிகையும், காஞ்சிபுரத்தில் காமாட்சியும், திருவானைக்காவில் அகிலாண்டேசுவரியும், அவினாசியில் கருணாம்பிகையும், சீர்காழியில் பிரம்மனும், இராமேசுவரத்தில் இராமரும், திருக்கடவூரில் மார்க்கண்டேயரும், இமயத்தில் பாண்டவ அர்ஜுனனும் சிவலிங்க பூஜை செய்து நற்பேறு பெற்றுள்ளதை புராணங்கள் கூறுகின்றன.

# ஆன்மீக கதைகள்



சரபேஸ்வரன்

வேடன் திண்ணப்பன் என்பவன் தான் வசித்து வந்த கிராமத்தின் சமீபம் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்று தினமும் மிருக வேட்டையாடி, அவைகளின் மாமிசத்தை ஜனங்களுக்கு விற்று, பிழைத்து வந்தான்.

அவன் வேட்டைக்கு செல்லும் போதெல்லாம், வழியில் உள்ள பெரிய அரச மரத்தின் கீழ் ஒரு முனிவர் எப்போதும் தவமிருக்கும் காட்சியைக் காண்பான். அன்றொரு நாள் அவன் முனிவரை பார்த்தபோது அவர் நிஷ்டை முடிந்து கண் திறந்து அமர்ந்திருந்தார். தவம் பற்றி எதுவும் அறிந்திராத அப்பாவி வேடன் அவரிடம், “ஏஞ்சாமி! தினம் குந்திக்கினு கண்ணை மூடி என்ன பண்றீங்க?” என்று கேட்டான்.

அதற்கு முனிவர் “வேடா! நான் இங்கு உட்கார்ந்து மனித உடலும் சிங்க முகமும் (நரசிங்கம்) கொண்டதை நேரில் காண நினைத்து தியானம் பண்ணுகிறேன். இதற்கு மேல் அதுபற்றி உனக்கு மேலும் சொன்னால், புரிந்து கொள்ள முடியாத ஒரு தற்குறி நீ!” என ஏளனமாகப் பதில் கூறினார்.
வேடன் பணிவாக அவரை கும்பிட்டு, “சாமி! அப்படி கொறச்சு என்ன பேச வேணாம். நீங்க சொன்ன அடையாளத்தோடு உள்ள எந்த மிருகமும், இந்த காடு மட்டுமல்ல... இங்கே உள்ள பக்கத்து காட்டிலும் கிடையாது. ஏன்னா, நான் அந்த காடுகள் மொத்தமும் வேட்டையாடினவன் ஆக்கும்!” என பெருமையுடன் சொன்னான்.

பிறகு என்ன நினைத்தானோ என்னவோ, வேடன் “சாமி! நான் இன்னிக்கு சூரியன் மறையதுக்குள்ள நீங்க சொன்ன மிருகத்தை தேடி கண்டுபிடித்து, அதனை உங்கள் கண் முன் நிறுத்துவேன். இல்லைனா, திண்ணப்பன் என்ற என் பெயரை மாத்திக்கிட்டு உங்க அடிமையா உழைப்பேன்!” என சபதம் போட்டு, அங்கிருந்து அந்த மிருகத்தைத் தேட உடனே புறப்பட்டு விட்டான். அப்போது முனிவரோ அவனுடைய அறியாமையைக் கண்டு எள்ளி நகைத்தார்.

திண்ணப்பன் அந்த காட்டின் பல பகுதிகளுக்கு புயல் வேகத்தில் நடந்து அலைந்து திரிந்தான். அவன் புத்தியில் அந்த சிங்க உருவம் மட்டுமே சுற்றி, சுற்றி வந்து கொண்டிருக்க; பசி, தாகம், களைப்பு போன்ற உணர்வுகள் அவனைப் பற்றவே இல்லை. காலணி அணியாத அவன் பாதங்களில் காட்டு முட்கள் குத்தி ரத்தம் கசிந்ததோ, அதனால் ஏற்பட்ட வலியோ தெரியாத ஒரு உத்வேக நிலை வேறு அவனுக்கு!

கதிரவன் மறையத் தொடங்கியது. ஆஹா! முனிவரிடம் நான் போட்ட சபதம் தோற்றுவிட்டதே” என வருந்திய வேடன் இனி வாழ்ந்து என்ன ஆகப்போகிறது என்ற விரக்தியுடன் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்து விட்டான்.

தன் இடுப்பில் இருந்த கூறிய, குத்துவாளை எடுத்து கண்களை மூடி தன் மார்பில் சொருக அவன் முயற்சி செய்தபோது திடீரென ஒரு குரல் அவனை அதட்டியது “நில் வேடா!” என. சட்டென்று கண் விழித்த வேடன் ஆச்சரியத்திலும், திகைப்பிலும் மூழ்கினான். காரணம் அவன் எதிரே சிங்க முகமும், மனித உடலும் கொண்ட ‘நரசிங்க பெருமாள்’ காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

எதிரே நிற்பவர் கடவுள் என்பதை அறிய வாய்ப்பில்லாத வேடன் பெருமாளை உடனே தன் கையில் இருந்த கயிற்றால் இறுகக்கட்டி, அவரை இழுத்துக் கொண்டு முனிவரை முன்பு சந்தித்த இடத்திற்கு இழுத்துச் சென்றான். தவம் முடிந்த நிலையில் அப்பொழுது இருந்த முனிவர் வேடன் தரதரவென இழுத்து வந்த பெருமாளை பார்த்து விட்டு பயந்து, திடுக்கிட்டார். “ஏய் வேடா! என்ன இது!” என கத்தியவாறே பாய்ந்து எழுந்து வேடனின் கையைப் பிடித்தார்.

தன் முன்னால் கைது ஆனது போல் காட்சி தந்த பகவானை மெய்சிலிர்க்க தரிசித்த முனிவர் கை கூப்பி, “இறைவா! என்னை மன்னித்து விடுங்கள். நான் அகந்தையால் வேடனை பேசியது மிகத் தவறு!” என கண்ணீர் மல்க கதறினார்.

அவ்வேடன் கொண்ட ஒரே இறை சிந்தனை, செயல் சுலபமாக அவனுக்கு பகவானையே கைது செய்து இழுத்து வரும் சக்தியை அருளி விட்டதே, என முனிவர் புலம்பிய கணத்தில் வேடனுடன் அங்கு வந்த நரசிங்க பெருமாள் ஒரு பெரும் கர்ஜ்ஜனை செய்து விட்டு சற்றென்று மறைந்து விட்டார்.

தன் தவ பக்தியை விட, ஒரே சிந்தனை, செயல் புரிந்து வெற்றி கொண்ட இந்த வேடனே தன்னிலும் மேலானவன் என்று உணர்ந்த முனிவர் சடாரென அவன் காலில் விழுந்து நமஸ்கரித்தார். அது மட்டுமின்றி அவனிடம் மன்னிப்பும் கோரினார்.

இச்செயலால் பதறிய வேடன் “சாமி! சாமி! இது வேண்டாம்” என பதறிப் போனான்.
கடவுள் உண்மை பக்தியை, சிந்தனையை மட்டுமே ஏற்பார் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு பெரிய பாடமாக அமைந்து விட்டது.


# பகவத் கீதை பாராயணப் பலன்

சிம்மள த்வீபத்தில் அரசனாக செங்கோல் ஆட்சி புரிந்த மன்னன் பெயர் விக்ரம வேதாளன் என்பது. அவன் ஒரு வேட்டைப் பிரியன். தனது புதல்வர்களுக்கும் வேட்டைப் பயிற்சி தருவான் அவன்.

தனக்கு கப்பம் கட்டும் வேறு சில ராஜகுமாரர்களுடன் ஒரு நாள் வன வேட்டைக்கு தான் பிரியமுடன் வளர்க்கும் வேட்டை நாய்களுடன் விக்ரம வேதாளன் சென்றான். அப்பொழுது விளையாட்டாக ஒரு ராஜகுமாரன் அரசனிடம் “ஐயனே! அதோ பதுங்கி மறைந்திருக்கும் முயலை பிடித்துக் கொடுத்தால் அதிக பணம் பரிசாக தருகிறேன்” என்று பந்தயம் வைத்தான். அரசனும் சவாலை ஏற்றுக் கொண்டான்.

அப்பொழுது ராஜகுமாரன் நைசாக முயல் பொந்தருகே சென்று அதனை பிடித்து ஓட விட்டான். “அப்பாட! நான் பிழைத்தேன்” என மனதில் எண்ணினான். முயல் வேகவேகமாய் அங்கிருந்து தாவி, தாவி ஓட ஆரம்பித்தது. அதனைப் பிடிக்க அரசன் தனது இரண்டு நாய்களில் ஒன்றான பெண் நாயை அதன் மீது ஏவி விட்டான்.

அந்த நன்றி உள்ள நாயும், ஓடும் முயலை குறிபார்த்து துரத்தத் தொடங்கியது.
முயல் ஓட, நாய் ஓட, ஒரு பந்தயம் சுவராசியமான கட்சியாக இருந்தது அரசனுக்கும் இதரர்களுக்கும்.



நாயின் வேகம் மிக அதிகமாக இருக்கவே, தாக்குப்பிடிக்க இயலாத சோர்வு நிலைக்கு முயல் போய்விட்டது. இருப்பினும் முடிந்தவரை சமாளிப்போம் என்ற நிலையில் முயல் ஓடி வர, தவறுதலாக ஒரு பள்ளத்தில் விழுந்து விட்டது.

பள்ளத்தில் இறங்க நாய் யோசித்துக் கொண்டிருக்கும் போதே முயல் சாமர்த்தியமாக அதிலிருந்து வெளிப்பட்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மீண்டும் ஓடத் தொடங்கவே, நாய் கோபத்துடன் குறைத்துக் கொண்டே அதை பிடிக்கும் பணியைச் செய்ய ஆரம்பித்தது.

முயலின் அதிர்ஷ்டமோ என்னவோ, அதன் கண்ணில் அங்கு தென்பட்ட ஆசிரமத்திற்குள் ஓடிச் சென்று ஒளிந்தது. அந்த ஆசிரம குருவான வத்சர் என்பவரும் அவரது சீடரான ஸ்வசுந்தரரும் தொடர்ந்து பகவத் கீதை பாராயணம் புரிந்து கொண்டே இருப்பவர்கள். அதனால் அவர்களுக்கு கிடைத்த அற்புத சக்தியால் புலியும், பசுவும் ஓரிடத்தில் நின்று தண்ணீர் குடிக்கும். யானையும், சிங்கமும் நட்புடன் விளையாடும்.

ஆசிரம மூலையில் பதுங்கி இருந்த முயல், நாய் திரும்பிப் போய் இருக்கும் என்ற எண்ணத்தில் வெளியே வந்து ஓட ஆரம்பித்த அடுத்த கணமே புறப்பதிதம் தேங்கியிருந்த சேற்றில் சிக்கி, மீள முடியாது இறந்து விட்டது. ஆசிரம சீடர் ஸ்வசுந்தரர் அடிக்கடி அவ்விடத்தில் நீர் விட்டு காலை சுத்தம் செய்து வந்ததால் ஏற்பட்ட சேற்றுப்பள்ளம் அது.

இதை அறியாத, முயலை பின் தொடர்ந்து வந்த நாய் முயலை தாவிப் பிடிக்க எத்தனித்த போது, அதுவும் சேற்றில் மாட்டி உயிரை விட்டுவிட்டது.

அதற்குள் அந்த அரசனும், ராஜகுமாரர்களும் ஆசிரமப் பகுதிக்கு வந்து விட்டனர். அப்பொழுது அனைவரும் காண்கையிலேயே ஒரு அதிசய சம்பவம் நடந்தது இப்படி…

சேற்றில் உயிரை விட்ட முயல் திவ்ய தேகம் பெற்றுவிட, இறந்த நாய் அழகிய பெண்ணாக உருப்பெற்று விட்டது. இதைவிட நடந்த அற்புத சம்பவம், இரண்டு புதுப் பிறவிகளையும் அங்கு வந்த ஒரு தேவ விமானம் வானிலிருந்து இறங்கி இருவரையும் சுமந்து கொண்டு, மீண்டும் வானில் பயணம் செய்து விட்டது.

விக்ரம வேதாளனும், அவன் கூட வந்த ராஜகுமாரர்களும் இதனை ஆச்சரியமுடன் பார்க்க, அதுகண்டு ஆசிரம சீடர் கலகலவென சிரித்தார். அப்பொழுது அரசன் அவரிடம "எனக்கு இரண்டு விஷயங்களுக்கு தாங்கள் விளக்கம் தருவீர்களா?" என வணங்கிக் கேட்டான்.

"கேள் அரசே!" என்று சீடர் பதிலளிக்க, அரசன் "அந்த முயலும், நாயும் எவ்வாறு விண்ணுலகம் செல்லும் தகுதியைப் பெற்றன என்பதையும், நீங்கள் இப்போது நகைத்ததற்கு என்ன காரணம்?" என பணிவுடன் கோரினான். அதற்கு அவர் எங்கள் இந்த ஆசிரம குருநாதரும் அவரது ஆணைப்படி நானும் தினமும் தவறாது பகவத் கீதை பாராயணம் புரிந்து வருவதால், நான் காலை சுத்தம் செய்ய விழும் நீர் சக்தி பெற்றிருக்கும். அந்த நீர் கலந்த சேற்றில் முயலும், நாயும் கீதையின் மகிமையால் அவைகளுக்கு அரிய முக்தி கிடைத்துவிட்டது.

நான் சிரித்ததற்கு காரணம் என்ன தெரியுமா?

அக்காலத்தில், மகாராஷ்டிர தேசத்தில் உள்ள ப்ரத்யுதகம் என்ற நகரத்தில் வாழ்ந்து வந்தவன் கேசவன் என்ற துர்நடத்தை கொண்ட குடிமகன். அவனுடைய மனைவியின் பெயர் விலோபனா. அவள் கொண்டிருந்த கெட்ட குணத்தால் பல புருஷர்களுடன் நட்பு பூண்டு, உல்லாசமாக திரிந்தாள். அதனால் கோபம் கொண்ட கேசவன் ஒருநாள் அவளை கொன்று விட்டான். இந்த கொலை பாவத்தால் அவனது இந்த அடுத்த பிறவியில் முயலாகப் பிறந்தான்.

கேசவன் மனைவி, பாவப்பிறவியாகி இந்த ஜென்மத்தில் பெண் நாயாகப் பிறந்து விட்டாள். இருவருக்குமே சென்ற ஜன்ம நினைவு இருந்து வந்ததால், அந்த குரோத உணர்வு தலை தூக்கி பகையாளியாகி ஆனார்கள். இந்த விரோதத்தை நான் நினைத்ததால் சிரிப்பு வந்துவிட்டது எனக்கு" என விளக்கமாக பதில் சொன்னார்.

அன்று வரை பகவத் கீதையின் பெருமைகளை அறிந்திராத மன்னன் விக்ரம வேதாளன் அப்பொழுதே உறுதி மேற்கொண்டான் இனி தொடர்ந்து முழு உச்சரிப்பு, விளக்கமுடன் பகவத் கீதை உரைகளை கற்று, தேர்ந்து தினமும் பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டுமென.

ஏன் நாம் கூட இது போல் முயற்சிக்கலாமே!

# செப்டம்பர் மாத பலன்கள் 2022



விஜய்

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

## மேஷம்



இந்த செப்டம்பர் மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும். பெறப்படும் வெற்றியினால், வருமானம் அதிகரிக்கும், சேமிப்பு உயரும், குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். திருமணம் கைகூடும், காதல் வெற்றி பெறும். மறுமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கும் மறுமணம் நடக்கும். புத்திர பாக்கியம் கிடைக்கும். குடும்பத்தில் புதிய நபர் வருவதற்கு உகந்த காலம். புதிய துறைகளில் ஈடுபட வாய்ப்பு கிடைக்கும். மாற்றத்தினால் ஏற்றங்கள் நிகழும். சமுதாயத்தில் புகழ், மரியாதை கிடைக்கும், வெளியூர் பயணங்களால் நன்மைகள் நடக்கும்.

## ரிஷபம்




கடின உழைப்பாளிகளான ரிஷப ராசி நேயர்களே, உங்கள் ராசிநாதன் சுக்கிரன் பலம் பெறுவதால், முன்னேற்றம் கிடைக்கும். உங்கள் உழைப்பின் மூலம் பொருளாதார வளர்ச்சி கிடைக்கும் மாதம் இந்த செப்டம்பர் மாதம். நீங்கள் 100 மடங்கு முயற்சியுடன் செய்யும் செயல்களில் 300 மடங்கு லாபம் கிடைக்கும். ஆகையால் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். வீடு, வாகனம், சொத்து வாங்குவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். தாய், தந்தையரின் உடல் நலம் சீராக இருக்கும். உங்கள் குடும்பத்தின் நிலை உயரும். சமுதாயத்தில் நல்ல பெயர் கிடைக்கும். அனைத்து செயல்களுக்கும் தென்கிழக்கு திசை உகந்ததாக அமையும். இந்த திசையை நோக்கி பயணிப்பவர்களுக்கு தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி அதிக அளவில் கிடைக்கும். வெளிநாடு செல்வதில் இருந்த தடைகள் நீங்கும். ஊர் மாற்றம், நாடு மாற்றம் செய்யும் வாய்ப்புகள் கிடைக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் உங்களை தேடி வரும், திருமணம் கைகூடும். கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும்.

## மிதுனம்



இந்த செப்டம்பர் மாதத்தில் உங்கள் ராசிநாதன் புதன் உச்சம் பெற்ற நிலையில் சஞ்சரிப்பதால் மிகவும் நன்மையான பலன்கள் நடைபெறும். உயர்தரமான செயல்கள் செய்வதால் உங்கள் தகுதி உயரும், சென்ற இடத்தில் எல்லாம் மரியாதை கிடைக்கும். தாயின் உடல்நிலை ஆரோக்யமாக இருக்கும். வீட்டில் மகிழ்ச்சி இருக்கும். வீடு, வாகனம், சொத்து வாங்க வாய்ப்புகள் வரும். வாழ்வில் நீங்கள் முன்னேற்றம் அடைவதால் சுயதிருப்தி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திருமணம் சார்ந்த விசயங்கள் தள்ளிப்போக வாய்ப்பு உண்டு. வருமானம் மற்றும் சேமிப்புகளை பூர்வீக செயல்களில் செலவு செய்ய நேரிடும் கவனம். திடீர் அதிர்ஷ்டத்தின் மூலம் செல்வ நிலையில் உயர்வு கிடைக்கும்.




# கடகம்

இந்த செப்டம்பர் மாதத்தில் உங்கள் ராசிநாதன் சந்திரன் பலம் பெறுவதால் மாற்றத்தின் மூலம் உயர்ந்த நிலைக்குச் செல்லமுடியும். வருமானம் அதிகரிக்கும், சேமிப்பு உயரும், குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும், குடும்ப நபர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். வீட்டிற்குத் தேவையான புதிய பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் லாபங்கள் கிடைக்கும், விருப்பங்கள் நிறைவேறும். வாழ்க்கை துணைவர் பிடிவாதமாக இருப்பார், அனுசரித்து செல்வது நன்மை தரும். மாணவர்கள் தங்கள் குறிக்கோள்களில் வெற்றி பெறுவார்கள். திருமண தடை நீங்கும். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் நன்மை நடக்கும். புத்திர பாக்கியம் உண்டு. புதிய முயற்சிகள் வெற்றி தரும்.



# சிம்மம்

இந்த செப்டம்பர் மாதத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன் உங்கள் ராசியிலேயே ஆட்சி பலம் பெறுவதால் தன்னம்பிக்கை அதிகரிக்கும், நீங்கள் நினைத்ததை செய்து முடிக்க முடியும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைக்கும். சமுதாயத்தில் புகழ், மரியாதை கிடைக்கும். உங்கள் தகுதிகள் உயரும், வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்ல வாய்ப்பு கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும், சேமிப்பு உயரும். உங்கள் கனவுகள் நனவாகும் காலமாகும். உங்கள் வளர்ச்சியால் அனைவரும் ஈர்க்கப்படுவார்கள். தொழில் வெற்றி பெறுவீர்கள், லாபம் உண்டு, தெற்கு திசை அனைத்து செயல்களுக்கும் உகந்ததாக அமையும். பயணங்களைப் தவிர்ப்பது உடல் ஆரோக்கியத்தை தரும். திருமண விசயங்களில் குலதெய்வ வழிபாட்டால் தடை நீங்கப்பெறும். பெரிய அளவில் பொருளாதார வளர்ச்சி கிடைக்கும் மாதம்.




# கன்னி

இந்த செப்டம்பர் மாதத்தில் உங்கள் ராசிநாதன் புதன், உச்சம் பெற்ற நிலையில் சஞ்சரிக்கிறார். ஆகையால் வாழ்வில் உயர்ந்த நிலைக்குச் செல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மிக உயரிய பதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. தலைக்கனம் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தில் வாக்குவாதங்களை தவிர்ப்பது மன நிம்மதியைத் தரும். லாபம் தேடி வரும், தொழில் வளர்ச்சி ஏற்படும். நீண்ட தூர பயணங்களால் நன்மை பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் நினைத்த இலக்கை அடைய முடியும். வெளிநாடு செல்ல வாய்ப்புகள் உண்டு. கடன், வழக்கு போன்ற பிரச்சனைகள் முடிவிற்கு வரும். ஆன்மீக யாத்திரை செல்வது அனைத்து விதமான தீமைகளையும் நீக்க உதவும்.




## துலாம்

இந்த செப்டம்பர் மாதத்தில் உங்கள் ராசிநாதன் சுக்கிரன் பதினோராம் இடத்தில் சஞ்சரிப்பதால் உங்கள் ஆசைகள் நிறைவேறும், தேவைகள் பூர்த்தியாகும், போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி அடையும், லாபம் கிடைக்கும், வேலையில் புதிய பதவிகள் கிடைக்கும், வருமானம் உயரும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். வெளிநாட்டு கல்விக்கு வாய்ப்பு உண்டு. புதிய மொழிகள் கற்க முடியும். உங்கள் அடையாளத்தை மாற்றிக்கொள்ள முடியும். திருமண தடை நீங்கும். திடீர் அதிர்ஷ்டத்தின் மூலம் பொருளாதார உயர்வு கிடைக்கும்.



## விருச்சிகம்

இந்த செப்டம்பர் மாதத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் 7 ஆம் இடத்தில் இருந்து உங்கள் ராசியை பார்ப்பது மிகவும் சிறப்பு. தைரியம் கூடும். அனைத்து செயல்களிலும் வெற்றி காண முடியும். தெளிவான முடிவுகள் உங்கள் வளர்ச்சிக்கு உதவும். பொதுஜன துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு புகழ், மரியாதை கிடைக்கும். சமுதாயத்தில் நல்ல பெயர் கிடைக்கும். கிழக்கு திசை அனைத்து செயல்களுக்கும் உகந்ததாக அமையும். வேலையில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். புதிய பொறுப்புகள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். சுய தொழில்களில் முதலீடு செய்ய வேண்டாம். குழந்தைகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். திருமணம் நடக்க நீங்களாக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். முருகப்பெருமான் வழிபாடு அனைத்து தடைகளையும் நீக்கும்.




## தனுசு

இந்த செப்டம்பர் மாதத்தில் அனைத்து தடைகளும் நீங்கி முன்னேறுவீர்கள். தொழில் வளர்ச்சி அடையும், வருமானம் அதிகரிக்கும். பிறரின் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதின் மூலம் புகழ் பெறுவீர்கள். அனைத்து நபர்களுக்கும் உதவிகரமாக இருப்பீர்கள். எப்போதும் பலர் உங்கள் உதவிக்காகக் காத்திருப்பார்கள். எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும். புதிய திட்டங்களின் மூலம் நன்மை அடைவீர்கள். புதிய தொழில் துவங்க வாய்ப்பு உண்டு. திடீர் அதிர்ஷ்டம் உண்டு. குறித்த நேரத்தில் அனைத்து செயல்களையும் செய்து முடிப்பதன் மூலம் வாழ்வில் அடுத்த நிலைக்கு முன்னேறுவீர்கள். திருமணம் கைகூடும். மருத்துவம் பார்ப்பதின் மூலம் குழந்தை பாக்கியம் உண்டு.




## மகரம்

இந்த செப்டம்பர் மாதத்தில் குழந்தைகளால் மகிழ்ச்சி கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் அனைத்தும் குழந்தைகளால் நிறைவேறும். தொழில் மூலம் வரும் லாபங்களை பூர்வீகத்தில் முதலீடு செய்ய வாய்ப்புகள் வரும். மாணவர்கள் உயர் கல்வியில் சாதனை படைக்க முடியும். முன்னோர்கள் வழிபாடு முன்னேற்றத்தைத் தரும். மன அழுத்தம் அதிகரிக்கும், குழப்பங்கள் கூடும், கடைசி நிமிட தடைகளால் மன நிம்மதி குறையும். இவை அனைத்தையும் குலதெய்வ வழிபாட்டால் நீக்க முடியும். தொழில் வளர்ச்சிக்காக கடன் வாங்கக்கூடாது. அகலக்கால் வைக்கக்கூடாது. அனைத்து செயல்களையும் பலனை எதிர்பார்க்காமல் தங்கள் கடமை என நினைத்து முழு மூச்சுடன் செய்வதின் மூலம் வெற்றியை அடையலாம்.



## கும்பம்

இந்த செப்டம்பர் மாதத்தில் கனவு, கற்பனை, மனக்கோட்டை அதிகரிக்கும். வாழ்க்கை துணைவரிடம் எதிர்பார்ப்புகள் கூடும். வாழ்க்கை துணைவருடன் சுற்றுலா, மனம் விரும்பிய இடங்களுக்குச் சென்று வருவதன் மூலம் உங்கள் கனவுகள், எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும், மகிழ்ச்சி இருக்கும். பாராட்டுகள் பெறுவதன் மூலம் மனம் மகிழ்வீர்கள். தைரியமாக அனைத்து செயல்களிலும் ஈடுபட்டு முன்னேற்றம் காண்பீர்கள். வெளியூர், வெளிநாடு சார்ந்த வேலை புரிபவர்களுக்கு பணவரவில் இருந்த தடை நீங்கும். வருமானத்தை சொத்துகளாக மாற்ற வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளால் சுய திருப்தி கிடைக்கும். சிவ வழிபாடு அனைத்து செயல்களிலும் வெற்றி தரும்.



## மீனம்

இந்த செப்டம்பர் மாதத்தில் தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். கூட்டாளிகளால் நன்மை பெறுவீர்கள். போட்ட திட்டங்களில் வெற்றி அடைவீர்கள். வருமானத்தில் இருந்த தடைகள் நீங்கும். சேமிப்பு உயர புதிய முயற்சிகள் மேற்கொள்வீர்கள். கிரெடிட் கார்டு சார்ந்த பிரச்சனைகள் முடிவிற்கு வரும். திருமணம் கைகூடும். திடீர் திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. தாய், தந்தை உடல் நிலையில் முன்னேற்றம் இருக்கும். மூத்த சகோதரரால் உங்கள் வாழ்வில் நன்மைகள் நடைபெறும். சுய தொழிலில் முதலீடுகளை தவிர்க்க வேண்டும். கடின உழைப்பால் மிக உயரிய பதவிகளை அடைவீர்கள்.